விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து எட்டு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2048 மார்கழி 25 செவ்வாய்க்கிழமை (09.01.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 021


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையில்

# இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க தமிழர் தரப்பு தயாராக வேண்டும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)
ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையில் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க தமிழர் தரப்பு தயாராக இருக்க வேண்டும் என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். மேலும் இவ்வாறான அழுத்தங்கள் மூலமே சிங்கள தலைவர்களிடமிருந்து தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என சுட்டிக்காட்டியுள்ளார். (27ஆம் பக்கம் பார்க்க)

பிணைமுறி தொடர்பில்

## 10ஆம் திகதி விவாதம்

(கொழும்பு)
பிணைமுறிகள் தொடர்பில் நாளை பத்தாம் திகதி காலை 10.30 இற்கு பாராளுமன்றம் கூடவுள்ளது. பிரதமரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய 27☛

தருமபுர பொலிஸ் பிரிவில்

## வெவ்வேறு குற்றச் சம்பவத்தில் 4 பேர் கைது

(மல்லாவி)
தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் கடந்த 8 மணி நேரத்திற்குள் 2 வெவ்வேறு குற்றச் சம்பவங்களின் போது 20 லீற்றர் கசிப்பைக் கைப்பற்றியுள்ளதுடன் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த 2 டிப்பர் வாகன 27☛

## டான் தொலைக்காட்சியில் புகுந்து தயா மாஸ்டர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் தனியார் தொலைக்காட்சியான டான் நிறுவனத்தின் கலையகத்துக்குள் புகுந்த நபர் அந்த நிறுவனத்தின் செய்தி பணிப்பாளரான தயா மாஸ்டரை தாக்கியதுடன், அவரை கத்தியால் வெட்டி கொலை செய்யவும் முயற்சி செய்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று திங்கட்கிழமை மாலை 3.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதுடன், தாக்குதலை மேற்கொண்டவர் நிறுவன ஊழியர்களால் பிடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

இச் சம்பவத்தில் தாக்குதலுக்குள்ளாகிய டான் செய்தி 27☛

## அலரி மாளிகையை தேர்தல் பிரசாரத்திற்காக பயன்படுத்தக் கூடாது - கபே

(கொழும்பு)
அலரி மாளிகையை தேர்தல் பிரசாரங்களுக்காக பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது என கபே எனப்படும் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

பிரதமரின் செயலாளரிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அண்மையில் கல்வி அமைச்சினால் அலரி மாளிகையில் நடத்தப்பட்ட நிகழ்வு அரசியல் பிரசார நோக்கிலானது என சுட்டிக் 27☛

எரிகாயங்களுக்குள்ளான

## குடும்பப்பெண் உயிரிழப்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி - தர்மபுரம் பகுதியில் வீடொன்று தீப்பற்றியதில் 24 வயதான யுவதி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் பகல் உயிரிழந்துள்ளார். 02☛

கடனுக்கு றொட்டி கேட்டதால்

## யாழில் ஏற்பட்ட வன்முறை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் கொத்து றொட்டியால் வன்முறைச் சம்பவம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடனுக்குக் கொத்து றொட்டி கேட்கப்பட்ட நிலையில் 28☛

## இந்து ஆலயத்துக்கு அருகில் விகாராதிபதியின் தகனம் பெரிய விடயமல்ல

யாழ்.நாகவிஹாராதிபதி விமலசிறி தேரர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)
புத்த பெருமான் இந்து சமயத்தை சேர்ந்தவர் தான். ஆதலால் தான் இந்து ஆயைத்துக்கு அருகில் நாகவிஹாரை விகாராதிபதி தகனம் செய்யப்படுவதனை நாம் பெரிதாக நினைக்கவில்லை. மேலும் நாகவிஹாரை விகாராதிபதியின் நினைவாக யாழில் விகாரையோ, தூபி அமைக்கமாட்டோம்.

இதனையிட்டு மக்கள் அச்சம் அடையத் தேவையில்லை. யாழ்ப்பாணத்தில் இனவாதத்தினையும், மதவாதத்தினையும் 28☛

## இரட்டை குழந்தை மாற்றிய வழக்கை துரிதப்படுத்துமாறு நீதிமன்றம் கட்டளை

(யாழ்ப்பாணம்)
யாழ் போதனா வைத்தியசாலையில் இரட்டைக் குழந்தைகளில் ஒரு குழந்தை வேறொரு பெண்ணுக்கு வழங்கப்பட்டமை தொடர்பான வழக்கு 27☛

முகப்புத்தகத்தில் பிரபாகரன் புகைப்படம்

## பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் இரு இளைஞர்கள் கைதாகி விளக்கமறியலில்



(கொழும்பு)
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் புகைப்படம், புலிகளின் இலட்சினை அடங்கிய 2018 புது வருட வாழ்த்துக்களை முகப் புத்தகம் ஊடாக தயார் செய்து அதனை பகிர்ந்ததாக கூறப்படும் இருவரை பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

2007 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க சிவில், அரசியல் உரிமைகள் தொடர்பிலான சர்வதேச இணக்கப்பாட்டு சட்டத்தின் விதி 28☛

ஊடகவியலாளர் லசந்த படுகொலை

## கொலைக் குற்றவாளி பாதுகாக்கப்படுகின்றனரா? அமெரிக்க தூதரகம் கேள்வி

(கொழும்பு)
ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலையுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாத நிலையில், கொலையாளிகள் பாதுகாக்கப்படுகின்றனரா என்ற கேள்வி எழுந்துள்ளது என அமெரிக்க தூதரகம் 02☛



## பளை பொலிஸ் நிலையத்துக்கு அருகே துப்பாக்கிச் சூடு குடும்பஸ்தர் படுகாயம்



(பளை)
பளையில் நேற்று இரவு 8 மணியளவில் நடைபெற்ற துப்பாக்கி சூட்டுச்சம்பவத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இந்த குடும்பஸ்தரை இனந் 02☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பளை பொலிஸ்...

தெரியாத நபர்கள் துப்பாக்கியால் சுட்டு விட்டுஅங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

பளை பொலிஸ் நிலையம் அருகாமையில் நடைபெற்ற இந்த துப்பாக்கிசூட்டுச் சம்பவத்தில் 2 பிள்ளைகளின் தந்தையாரான சிவானந்தமூர்த்தி சுரேந்திரன் (வயது 38) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார். பளை பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் இந்த சூட்டு சம்பவம்நடைபெற்றுள்ளது.

படுகாயமடைந்த குடும்பஸ்தர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இனந்தெரியாத நபர்களே தன்னை துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக படு காயமடைந்த குடும்பஸ்தர் தெரிவித்துள்ளார். இதேவேளை துப்பாக்கிச் சூட்டுக்கு கட்டுத் துப்பாக்கியே பயன்படுத்தப்பட்டுள்ளது என யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அந்த சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் தன்னை இனந்தெரியாத நபர்களே சுட்டதாக படுகாயமடைந்த குடும்பஸ்தர் வலம்புரியிடம் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கி சூட்டுக்கு உள்ளாகியவர் மனித நேய கண்ணி வெடி அகற்றல் பிரிவில் பணியாற்றுவதுடன் இவரது கழுத்து, மார்பு, கை உள்ளிட்ட பல பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டுள்ளது. (ம-4,9,15,281,312)

## குடும்பப் பெண்...

இதேவேளை, இதனால் எரிகாயங்களுக்கு உள்ளான, குறித்த யுவதியின் மகள் மற்றும் கணவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும், தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளுக்கு அமைய, மரணித்த பெண்ணின் கணவரே வீட்டுக்கு தீ வைத்துள்ளதாக தெரியவந்துள்ளது.

எனவே, வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்பின் கீழ் அவர் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## கொலைக் குற்றவாளி...

தெரிவித்துள்ளது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்தவின் ஒன்பதாவது நினைவு தினமான நேற்று திங்கட்கிழமை இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் துணை தூதுவர் றொபட் ஹில்டன் வெளியிட்ட டுவிட்டர் பதிவிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

லசந்த கொலை தொடர்பாக அமெரிக்க தூதரகம் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பாக அவரது உறவினர்கள் நீதியை கோரி நிற்கின்றனர். எனவே உரிய விசாரணை நடத்தி, அவரது குடும்பத்தினருக்கு நீதியை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

குறித்த படுகொலை தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்த வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. (ம)


### விற்பனைக்கு

கிளிநொச்சி, வட்டக்கச்சியில் 4 ஏக்கர், 5 ஏக்கர் காணிகள் வீட்டுடன், கிணற்றுடன், தென்னை மரங்களுடன் விற்பனைக் குண்டு.

**0750824530** (2317)


# கண்ணீர் அஞ்சலி



யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
ஆய்வுகூட உதவியாளர்
திரு.க.செல்வராசா அவர்களின்
அன்புத் தாயார்
**அமரர் கதிரேசு மாணிக்கம்**
அவர்கள் 06.01.2018 அன்று
காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த
துயர் அடைவதுடன் அவரின் பிரிவால்
துயருறும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மாசாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மலர்வு:-1935.02.15
உதிர்வு:-2018.01.06

**ஆசிரிய சகோதரத்துவம்**
**யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி**
(சி-1165)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-இலங்கை
## முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்

### நுண்நிதியியல் டிப்ளோமா
### முதலாம் அரையாண்டு பரீட்சை-2017/2018

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள் 10.01.2018ஆம் திகதி முதல் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை பீடாதிபதி அலுவல்கத்தில் 16.01.2018 அன்று அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு மாணவர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

பரீட்சைகள் பெப்ரவரி மாத முற்பகுதியில் நடைபெறும். பரீட்சைக்கான நேரசூசியை பீடாதிபதி அலுவலக அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம்.

–பதிவாளர்

(சி-1161)








## வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**


# மரண அறிவித்தல்கள்

## கந்தப்பு சிவனேசன்



காரைநகர் மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும் காரைநகர் பத்தர்கேணியடியை வதிவிடமாகவும் கொண்ட கந்தப்பு சிவனேசன் (இளைப்பாறிய உத்தியோகத்தர், லங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்) அவர்கள் 07.01.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு-புவனேஸ்வரி தம்பதிகளின் ஏக புதல்வனும், காலஞ்சென்ற M.A.கந்தையா-தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி கமலாம்பிகை (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு) அவர்களின் அன்புக் கணவரும், விமலராணி, ஜெயராணி, சிறீராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், இராமநாதன், தர்மபாலன், மகிந்த அத்துக்கொறள ஆகியோரினதும், தெய்வநாயகி, Dr.தேவகுஞ்சரி, புவனேஸ்வரி, அன்னலக்ஷ்மி, பங்கயற்செல்வி, செந்தில்நாதன், காலஞ்சென்ற தெய்வேந்திரன் மற்றும் தெட்சணாமூர்த்தி ஆகியோரினதும் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், தியாகராஜநாதர் மற்றும் வீரசிங்கம், உருத்திரன், கிருஷ்ணகுமாரி, சாந்தி ஆகியோரின் அன்புச் சகலனும், சுதர்சினி, சுபாஷினி, சுகந்தன், யுவராஜ், லக்ஷ்மன், ரவீந்திரா, குகன், க்ாயத்திரி, ஹரி ஆகியோரின் அன்பு மாமனாரும், சேந்தன், மயூரன், அம்பிகை, அமலன், லக்ஷ்மி, கிருஷ்ணா, ஐங்கரன், கேசவன், கலைமகள், செந்தூரன் அபிராமி, தேவகி ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் காரைநகர் பத்தர்கேணியடியில் அவரின் இல்லத்தில் 11.01.2018 வியாழக்கிழமை காலை 08.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பத்தர் கேணியடி, காரைநகர்** (2334)

**தகவல்:மனைவி-கமலாம்பிகை சிவனேசன்**
**0714500069, 0212252213**

## திருமதி இரத்தினம் தங்கம்மா
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

பிறப்பு 1925 - 11 - 30



இறப்பு 2018 - 01 - 08

கரணவாய் கிழக்கு கரவெட்டி மிதிலையைச் சேர்ந்த இரத்தினம் தங்கம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை) 08.01.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் இரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான பெருமாள்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், அமரர்களான தம்பிராஜா-பரஞ்சோதி தம்பதியரின் அன்பு மருமகளும், பரஞ்சோதி (அவுஸ்திரேலியா), செல்வச்சோதி (ஓய்வுநிலை ஆசிரியை), அமரர் இராசப்பெருமாள் மற்றும் டாக்டர் கௌரிபாலன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமரர் ஜக் வில்கின்ஸ் (அவுஸ்திரேலியா), தவராசா (ஓய்வு நிலை ஆசிரியர்), தவமலர் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அமரர் பவளம், அமரர் பத்மாவதி, அமரர் புஸ்பவதி மற்றும் வசந்தாதேவி, இராசகுமாரி, சரோஜினிதேவி, சீதாதேவி (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், திருமதி கிரிதரன்-மைத்திரேயி, திருமதி சுதர்சன்-பூஜித்திரேயி (பிரதேச செயலகம்-கோப்பாய்), மயூரன் (லண்டன்), Dr.ராஜராஜன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அமரர் ஹரிணி மற்றும் கெவின் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2018) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணிக்கு தகனக்கிரியைக்காக வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மிதிலை, கரவெட்டி** (சி-1162)

**தகவல்:**
**Dr.R.கௌரிபாலன்**

# 1 ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் வர்ணிஜா கிருஷ்ணகுமார் (விதுனா)



**தாயின் மடியில்:**
**13.06.1999**
**காலனின் பிடியில்:**
**21.12.2016**



விதையாகிப் போனது எங்கள் வீட்டின் முத்து- மீண்டும்
விருட்சமாய் ஆகாதோ என ஏங்கித் தவிக்கும் உறவுகள்
வருடம் ஒன்று ஆனபோதும் வழியும் நீர் விழிகளில் ஓயவில்லை!
மழலைப் பேச்சும் குழந்தைச் சிரிப்பும்

மனதை வெல்லும் மங்கல வதனமும்
மறுபடியும் ஒரு தடவை காண மாட்டோமா...?
விதுனா! உன் மனக் கோபம் என்னவோ எம் மீது?
மங்கைப் பருவம் வரை உனைப் பார்த்து மகிழ்ந்திருந்தோம்

மனம் பொறுக்கா காலன் மணவறை காணும் முன் மாய்த்துவிட்டான்
மனங்களெங்கும் ரணங்களாய் தினந்தோறும் வலிக்கிறதே!
பெற்றவளின் வதனமோ வற்றிப் போன நீர்க்குளமாய்
உற்றவரின் மனங்களோ உருச் சிதைந்த ஓவியமாய்

எத்தனை யுகங்கள் கடந்தாலும் தாளாது
இத்துயர் என்றும் இனி மீளாது!
குறுகுறு நடைபழகி குழந்தைக் குறும்புகள் காட்டி
சுறுசுறுப்பாய் கல்விகற்று சுற்றத்தோடு நீ மகிழ்ந்திருந்த

ஒவ்வொரு மணித்துளியும் பொற்துளியாய்
ஓயாது மனக் கண்ணில் தோன்றி மறையுதடி!
ஆண்டொன்று போனால் வயதொன்று போகும் என்பார்கள்
ஆண்டாண்டு காலம் போனாலும் அழியாது உன் நினைவுகள்

முழுமதியாய் ஒளி கொடுத்த எம் முழுநிலவு
முற்றிலுமாய் இருண்டு போய்விடவில்லை-விதுனா!
மண்ணிலே நீ மறைந்தாலும் என்றென்றும்-எம்
மனங்களிலே வாழ்கின்றாய் அழியா ஜோதியாய்!

**என்றும் உன் நினைவுடன்**
**குடும்பத்தினர்.**
**155, கனகாம்பிகைக்குளம்,**
**கிளிநொச்சி.**

(ஜீ-1157)

சிட்னி பிங் டெஸ்ட் 5ம் நாள்

## இங்கிலாந்து இன்னிங்ஸ் தோல்வி

# ஆஷஸை 4-0 என மீட்டது ஆஸி

சிட்னி டெஸ்டில் அசத்திய அவுஸ்திரேலிய அணி, இன்னிங்ஸ் மற்றும் 123 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் தொடரை 4-0 என்ற கணக்கில் வென்று, ஆஷஸ் கிண்ணத்தை சுவீகரித்தது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுபபயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி, அங்கு ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்றது.

முதல் நான்கு போட்டிகளின் முடிவில், அவுஸ்திரேலிய அணி 3-0 என ஏற்கெனவே தொடரை கைப்பற்றியிருந்த நிலையில், 5ஆவதும் இறுதியுமான டெஸ்ட், சிட்னியில் கடந்த 4ஆம் திகதி ஆரம்பமானது.

முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து 346, அவுஸ்திரேலியா 649/7 ('டிக்ளேர்') ஓட்டங்கள் எடுத்தன. நான்காம் நாள் முடிவில், இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி, 4 விக்கெட்டுக்கு 93 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அணித் தலைவர் ரூட் (42), பேர்ஸ்டோவ் (17) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### ரூட் 'ரிட்டையர்ட்'

நேற்று ஐந்தாவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. சிட்னியில் வெப்பத்தின் தாக்கம் அதிகமாக இருந்ததால், இங்கிலாந்து அணித் தலைவர் ஜோ ரூட், நீர்சத்து குறைவு, வயிற்றுப்போக்கு மற்றும் வாந்தியால் உடனடியாக துடுப்பாட்டம் செய்ய வரவில்லை. மொயீன் அலி (13) ஏமாற்றினார். பின் களமிறங்கிய ஜோ ரூட், அரை சதமடித்தார். உணவு இடைவேளையின்போது, மீண்டும் நீர்ச்சத்து குறைவு, வயிற்றுப்போக்கு காரணமாக, 58 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில், ரூட், 'ரிட்டையர்ட் ஹேர்ட்' முறையில் வெளியேறினார்.

### கம்மின்ஸ் கலக்கல்

பின், கம்மின்ஸ் 'வேகத்தில்' பேர்ஸ்டோவ் (38), ஸ்ரூவேர்ட் பிரோட் (4), கிரேன் (2) ஆட்டமிழந்தனர். ஹேசல்வுட் பந்தில் ஜேம்ஸ் அண்டர்சன் (2) வெளியேறினார். இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி, 180 ஓட்டங்களுக்கு சுருண்டு இன்னிங்ஸ் தோல்வியடைந்தது. கரான் (23) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலியா சார்பில் கம்மின்ஸ் 4, லயன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகன் விருதை கம்மின்ஸ் வென்றார். தொடர நாயகன் விருதை அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்ரீவ் ஸ்மித் கைப்பற்றினார்.

### ஸ்மித் 'ரொப்'

இத்தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்கள் பட்டியலில், அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்ரீவ் ஸ்மித் முதலிடம் பிடித்தார். இவர் 5 டெஸ்டில், 3 சதம், 2 அரைசதம் உட்பட 687 ஓட்டங்கள் எடுத்தார். இதன் மூலம், ஒரு ஆஷஸ் தொடரில், அதிக ஓட்டங்கள் குவித்த அவுஸ்திரேலிய அணித் தலைவர்கள் பட்டியலில், 3ஆவது இடம்பிடித்தார். முதலிரண்டு இடங்களில் பிரட்மன் (810 ஓட்., 1936-37), கோவர் (732 ஓட், 1985) உள்ளனர்.



### 33

இங்கிலாந்துக்கு எதிராக அசத்திய அவுஸ்திரேலிய அணி, 33வது முறையாக ஆஷஸ் தொடரை கைப்பற்றியது. இதுவரை இவ்விரு அணிகள் 70 முறை ஆஷஸ தொடரில் பங்கேற்றுள்ளன. இதில் அவுஸ்திரேலியா 33, இங்கிலாந்து 32 முறை கிண்ணம் வென்றுள்ளன. ஐந்து முறை தொடர் சமனில் முடிந்தது.

### 'நம்பர்-3'

இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ்டெஸ்ட்தொடரை அவுஸ்திரேலிய அணி 4-0 எனக் கைப்பற்றியது. இதன் மூலம் ஐ.சி.சி., டெஸ்ட் அணிகளுக்கான தரவரிசையில், அவுஸ்திரேலிய அணி 104 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்துக்கு முன்னேறியது. இங்கிலாந்து அணி, 99 புள்ளிகளுடன் 5ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டது.

## கேப் டவுனில் இந்தியாவுக்கு முதல் அடி

# பிலாண்டரின் பதற்றமில்லாத வேகத்தால் தென்னாபிரிக்கா வெற்றி

சுரங்க லக்மலை தடவு தடவென்று தடவிய இந்திய அணி எப்படி இந்த ஓய்வு ஒழிச்சல் இல்லாத தென்னாபிரிக்காவின் வேகப் பந்துவீச்சை வெல்ல முடியும்? இந்த கேள்விக்கான பதில் தெரியமுன்பே கேப் டவுன் டெஸ்டுக்கான முடிவு வெளிவந்தது.

208 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை எதிர்கொண்டு பதற்றத்துடன் ஆடிய இந்திய அணி 135 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்து 72 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. இரு அணிகள் மோதிய முதல் டெஸ்ட், கேப் டவுனில் நடந்தது. முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்கா 286, இந்தியா 209 ஓட்டங்கள் எடுத்தன. இரண்டாவது நாள் முடிவில், தென்னாபிரிக்க அணி, இரண்டாவது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுக்கு 65 ஓட்டங்கள் எடுத்து 142 ஓட்டங்களால் முன்னிலை வகித்தது. மூன்றாவது நாள் ஆட்டம் மழையால் முழுவதும் ரத்தானது.

### ஷமி அபாரம்

நேற்று நான்காவது நாள் ஆட்டம் நடந்தது. இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த தென்னாபிரிக்க அணிக்கு இந்திய 'வேகங்கள்' வேட்டு வைத்தனர். முதல் நாள் ஸ்கோருடன் அம்லா (4), ஷமி 'வேகத்தில்' சரிந்தார். தொடர்ந்து அசத்திய இவர், 'நைட் வோட்ச்மேன்' ரபாடாவையும் (5) 'பெவிலியன்' அனுப்பினார்.

### பும்ரா 'புயல்'

ஷமிக்கு பக்கபலமாக இருந்த பும்ரா, தன் பங்கிற்கு அணித் தலைவர் டுபிளசியை 'டக்' அவுட்டாக்கினார். அடுத்து, குயின்டன் டி காக்கையும் (8) ஆட்டமிழக்கச் செய்தார்.

மீண்டும் வந்த ஷமியிடம், இம்முறை பிலாண்டர் (0), சிக்க, தென்னாபிரிக்க அணி 95 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக் களை இழந்தது.

### புவனேஷ்வர் கலக்கல்

ஒருபுறம் விக்கெட் சரிந்தாலும், உறுதியான ஆட்டத்தை வெளிப்படுத்திய டி வில்லியர்ஸ், ஷமி பந்தில் சிக்ஸர், பும்ரா பந்தில் பவுண்டரி என, விளாசினார். மகராஜ் (15), மார்கல் (2) இருவரையும் புவனேஷ்வர், திருப்பி அனுப்பினார். பும்ரா பந்தில், சிக்ஸருக்கு ஆசைப்பட்ட டி வில்லியர்ஸ் (35) கடைசியாக ஆட்டமிழக்க, தென்னாபிரிக்கா, இரண்டாவது இன்னிங்ஸில் 130 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

### ஏமாற்றிய துடுப்பாட்டம்

இரண்டாவது இன்னிங்ஸில் 208 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய இந்திய அணிக்கு, ஷிகர் தவான், முரளி விஜய் ஜோடி சுமாரான ஆரம்பம் வழங்கியது. தவான் (16), முரளி விஜய் (13) இருவரும் அடுத்தடுத்த நிமிடங்களில் வெளியேறினர். எப்போதும் பொறுமை காக்கும் புஜாரா (4), இம்முறை அவசரப்பட்டார்.

அடுத்து அணித் தலைவர் ஹோலி, ரோகித் இணைந்து அணியை மீட்க போராடினர். இந்நிலையில், 'வில்லனாக' வந்தார் பிலாண்டர். இவரிடம் முதலில் ஹோலி (28) சிக்கினார். 9 ஓட்டங் களில் தப்பிப்பிழைத்த ரோகித் (10) வாய்ப்பை பயன் படுத்த தவறினார்.

கடந்த இன்னிங்ஸில் மானம் காத்த பாண்ட்யா (1), சகா (8) கைவிட, இந்திய அணி 82 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்தது. பந்து வீச்சாளர்கள் ஏற்படுத் திக் கொடுத்த நல்ல வாய்ப்பை துடுப்பாட்ட வீரர்கள் கோட்டை விட, இந்திய அணி, தோல்விப் பாதையில் சென்றது.

### ஆறுதல் ஜோடி

பின் இணைந்த அஷ்வின், புவனேஷ்வர் ஜோடி சற்று ஆறுதல் தர, இந்திய அணியின் ஸ்கோர் 100 ஓட்டங்களைக் கடந்தது. 8 ஆவது விக்கெட்டுக்காக 49 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், மீண்டும் மிரட்டினார் பிலாண்டர். இவரது 16வது ஓவரில் அஷ்வின் (37), ஷமி (4), பும்ரா (0) என ஆட்டமிழக்க, இந்தியா 135 ஓட்டங்களுக்கு சுருண்டது.



# ரஜினிகாந்தின் ஆன்மீக அரசியலுக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் வரவேற்பு


(யாழ்ப்பாணம்)

சுப்பர்ஸ்ரார் ரஜனிகாந்த் அரசியலில் ஈடுபடவுள்ளதாக அறிவித்திருக்கும் நிலையில், ரஜனிகாந்த் ஆன்மீக அரசியலுக்குள் வருவதை தாம் எப்போதும் வரவேற்பேன் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அரசியலில் ஈடுபடவுள்ளதாக அண்மையில் நடிகர் ரஜனிகாந்த் பகிரங்கமாக அறிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து அவர் பல்வேறு அரசியல் தரப்புக்களைச் சந்தித்து தனது அரசியல் பிரவேசம் தொடர்பாக பேசிவருகிறார். அவருக்கு பலரும் வாழ்த்துத் தெரிவித்து வருகின்றனர்.

இந் நிலையில் க.பொ.த. உயர்தர பரீட்சையில் தேசிய ரீதியில் சிறந்த பெறுபேற்றை பெற்ற வடக்கு மாகாண மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்த வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் ரஜினிகாந்த் அரசியலுக்குள் வருவது தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு பதிலளித்த முதலமைச்சர் ஆன்மீக அரசியலை நான் எப்போதும் வரவேற்பேன். அந்தவகையில் ரஜனிகாந்த் அரசியலுக்கு வருவதையும் நான் வரவேற்கிறேன் என முதலமைச்சர் தெரிவித்தார். (இ-4)



# சமுர்த்தி கடனை மீளப்பெறும் தீர்மானத்திற்கு ஜனாதிபதி தடை

(கொழும்பு)

சமுர்த்தி பயனாளிகள் தமது வீடுகளை புனரமைப்பதற்கு சமுர்த்தி வங்கியூடாக வழங்கப்பட்டிருந்த கடன் தொகையை 10 தவணைகளில் மீள அறவிடுவதற்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த உத்தரவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கு அமைய இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய சமுர்த்தி பயனாளிகளிடமிருந்து அறவிடப்படவிருந்த 2500 ரூபாவை அறவிடும் நடவடிக்கை உடன் அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயம் சமுர்த்தி வங்கி முகாமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் இணையத்தள பெயர் மாற்றம்

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் புதிய முகவரி. www.elections.gov.lk என தேர்தல்கள் ஆணையகம் அறிவித்துள்ளது.

அதற்கமைய இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டு வந்த அதன் இணையத்தள முகவரியான www.selection.gov.lk இற்கு பதிலாக தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய முகவரியின் மூலம், ஆணைக்குழுவின் இணையத்திற்கு இலகுவாக செல்ல முடியும்.

இதேவேளை, முந்தைய முகவரிக்கு செல்வதன் மூலம் தொழில்நுட்ப சிரமங்களை எதிர்நோக்க நேரிடும் என்பதால் www.elections.gov.lk எனும் புதிய முகவரியை பயன்படுத்துமாறு, தேர்தல்கள் ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-7)

# பதினைந்தாம் ஆண்டு நினைவுதினம்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1940 - 04 - 29 | | 2002 - 12 - 26 |



திதி:09.01.2018

## திருமதி. தம்பு செல்லமுத்து(தம்பு ரீச்சர்)

ஓய்வுபெற்ற கனிஷ்ட அதிபர்-யா/மீசாலை வீரசிங்கம் ம.வித்தியாலயம்.

அம்மா என்றழைத்தோம்
அன்பாய் இருந்தோம்- இன்று
ஆறுதல் கூற அருகில் நீங்கள் இல்லையே
ஆண்டுகள் பதினைந்து ஓடி மறைந்தாலும்
மறக்க முடியுமா உங்கள் நினைவை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"திருவேரகம்"
அல்லாரை,
மீசாலை.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவுகள்.

# இராசி பலன்

09.01.2018

மார்கழி 25, செவ்வாய்க்கிழமை,
சூரிய உதயம் காலை 6.31 மணிக்கு
அட்டமி முன்னிரவு 9.48 மணிவரை
அத்தம் முற்பகல் 7.21 மணிவரை
சுபநேரம் 11.02-12.32 மணிவரை
இராகுகாலம் 3.32-5.02 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூரட்டாதி<br>இரவு 7.13 மணிக்கு<br>துலா-சந் | | ராகு |
| கேது | | | |
| சூரி, சுக், சனி, புத | | குரு, செவ் | சந் |

**மீனம்** குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.

**மேடம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், முன்கோபத்தைக் குறைத்துக் கொள்வீர்கள், தொழில் முன்னேற்றத்துக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**இடபம்** பிள்ளைகள் வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி ஏற்படும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**மிதுனம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணைபுரியும்.

**கும்பம்** வரவும் செலவும் சமமாகும் நாள், பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, தொழிலில் கவனம் தேவை.

**கடகம்** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வீட்டில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மகரம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, புதிய திட்டங்களில் முன்னேற்றமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்** வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொன்னான நாள், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு** சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**விருச்சிகம்** உள்ளம் மகிழும் செய்தி ஒன்று வந்து சேரலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.


**துலாம்** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், புதிய பொறுப்புகளும் சுமைகளும் கூடலாம், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**கன்னி** பொது வாழ்வில் புகழ்கூடும், தேகநலனில் கவனம் தேவை, குடும்பத்தார் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

# வடக்கில் சிறந்த பெறுபேற்றைப்பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

## ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர்கள் பங்கேற்பு







(படங்கள்: உ.சாளின்)

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் தேசிய மற்றும் மாவட்ட ரீதியில் வடக்கு மாகாணத்தில் சிறந்த பெறுபேற்றை பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் புதுவருடத்தை வரவேற்கும் நிகழ்வும் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு பதக்கங்களை அணிவித்து பரிசுப் பொருட்களையும் வழங்கியுள்ளார்.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம், அமைச்சர்களான திருமதி அனந்தி சசிதரன், க.சிவநேசன், ஞா. குணசீலன், ச.சர்வேஸ்வரன் உட்பட மாகாண சபை உறுப்பினர்கள், அமைச்சின் செயலாளர்கள், அதிகாரிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (இ-4)

## கரவெட்டியில் நீர்வெட்டு

*பருத்தித்துறை நீர் விநியோகத் திட்டம், கரவெட்டி நீர் விநியோகத் திட்டம் ஆகியவற்றிற்கு உட்பட்ட நீர் விநியோகப் பகுதிகளில் 11.01.2018 (வியாழன்) காலை 08.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை நீர் வெட்டு அமுலில் இருக்கும் என்பதனை பாவனையாளர் அனைவருக்கும் அறியத்தருகின்றேன் என பிராந்திய முகாமையாளர் எந்திரி ஏ.ஜெகதீசன் அறிவித்துள்ளார்.(இ)*

## சிதம்பரம் செல்லும் பக்தர்களுக்கான பதிவுகள் ஆளுநர் அலுவலகத்தில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கப்பல் வழிப் பயணத்தின் மூலம் சிதம்பரம் செல்லும் பக்தர்களுக்கான பதிவுகள் வடக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்திலுள்ள இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தற்காலிக பணிமனையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிக்க சிதம்பரம் ஆலயத்தை தரிசிக்க இந்து அடியவர்கள் கப்பல் மூலம் பயணம் செய்வதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்து இலங்கை இந்திய அரசுகள் ஒப்புதல் வழங்கியிருந்தன.

அதனடிப்படையில் பக்தர்கள் சிதம்பரத்துக்கு செல்வதற்கான ஏற்பாடுகளை இந்து கலாசார திணைக்களம் முன்னெடுத்துள்ளது. எதிர்வரும் சில வாரங்களில் பயண ஒழுங்குகள் ஆரம்பிக்கப்படவுள்ள காரணத்தினால் சிதம்பரம் செல்ல விரும்பும் அடியவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் தற்காலிகமாக இயங்கிவரும் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அலுவலகத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.




பதிவுகள் மற்றும் பயண ஒழுங்குகளை முன்னெடுக்க இந்து கலாசார திணைக்களத்தின் அதிகாரிகள் குழு கொழும்பிலிருந்து நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து பதிவுகளை ஆரம்பித்து வைத்து. ஆரம்ப நாளிலேயே நூற்றுக்கணக்கானோர் தமது பதிவுகளை மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)

## வாழ்வாதார உதவி வழங்கல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.சமூக செயற்பாட்டு மையமானது (JSAC) ஐக்கிய அமெரிக்கமக்களின் நிதிஉதவியுடன் (USAID) செயற்படுத்திவரும் வாழ்வாதார மேம்பாட்டு உதவித் திட்டத்தின் ஊடாக தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமங்களில் சிறுதொழில் முயற்சியாளர்களை மேம்படுத்தும் முகமாக வாழ்வாதார உதவிகளை மேற்கொண்டு வருகின்றது. அந்த வகையில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்குட்பட்ட 30 பயனாளிகளுக்கு ஒரு இலட்சத்து இருபதாயிரம் (120 000.00) பெறுமதியான வாழ்வாதார உதவிகளை வழங்கவுள்ளது. அதன் முதற்கட்டமாக வயாவிளான் வறுத்தலைவிளான், பளை வீமன்காமம் தெற்கு, தையிட்டி வடக்கு, தையிட்டி கிழக்கு, பலாலி தெற்கு ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 17 பயனாளிக்கு தலா ஒரு இலட்சத்து இருபதாயிரம் பெறுமதியான வாழ்வாதார உதவிகளை பளை வீமன்காமம் வடக்கு கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கியுள்ளனர். இந் நிகழ்வில் யாழ்.சமூக செயற்பாட்டு டைமைய இணைப்பாளர் ந.சுகிர்தராஜ் மற்றும் உத்தியோகத்தர்கள் பிரதேச செயலக உத்தியோகத்தர் செந்தூரன், கிராமசேவையாளர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-10)

## யோகா மதிப்பீட்டு தேர்வு

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெற்றுவரும் இலவச யோகா தியான கற்கை நெறியினை 2017 ஆம் ஆண்டு பூர்த்தி செய்தவர்களுக்கான பிரயோக மதிப்பீட்டுத் தேர்வு எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் ஆண்களுக்கான பிரயோக மதிப்பீட்டுத் தேர்வு காலை 6.30 மணி தொடக்கம் 7.30 மணிவரையும் பெண்களுக்கான பிரயோக மதிப்பீட்டுத் தேர்வு காலை 7.30 மணி தொடக்கம்8.30 மணிவரையும் நடைபெறவுள்ளது.

இவ்விடயம் தொடர்பான மேலதிக தகவல்களை நல்லூர் நாவலர் மண்டபத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியுமென இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர். (இ-10-102)

## நீதிநூல் மனனப்போட்டியும் செயல்முறைப் போட்டியும்

வண்ணை -சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் வைசவசமய அபிவிருத்திக்கழகம் பாடசாலை மாணவர்களுக்கிடையில் சைவ்சமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு கடந்த 63 வருடகாலமாக நடத்தி வரும் நீதிநூல் மனனப் போட்டி, செயன்முறைப்போட்டி ஆகியவற்றை இவ்வருடமும் நடத்தவுள்ளது.

தரம் 2-3 மாணவர்களுக்கான நீதிநூல் மனனப்போட்டியும் போலம்போடுதல். மாலைகட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயல்முறைப்போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு என்னும் இரு பிரிவுகளில் பங்குபற்றும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

நீதிநூல் மனனப் போட்டி ஜனவரி மாதம் 28 ஆம் திகதியும் செயல்முறைப்போட்டி பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. இவற்றுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி ஜனவரி 19 ஆம் திகதியாகும்.

போட்டிகளில் முதல் 3 இடங்களையும் பெறுபவர்களுக்கான பரிசில்கள் 2018 சிவராத்திரி தினத்தன்று வழங்கப்படும்.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.82 நாவலர் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பி.ப.2 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

போட்டிகள் யாவும் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்றும் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் பரீட்சைச் செயலர் சு.சிறீகாந்தன் அறிவித்துள்ளார்.(இ)







கவிஞர் மட்டுவில் நா.நல்லதம்பியின் நினைவஞ்சலி கடந்த சனிக்கிழமை மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இதில் அமரர் நல்லதம்பியின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் அன்பளிப்பாக வழங்கினர். (படங்கள்: கட்டுடைசெய்தியாளர்.)

# வடக்கு முதலமைச்சர் நிதியத்திற்கு ஆளுநர் அனுமதி வழங்க வேண்டும்

## விக்னேஸ்வரன் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)


இந்த வருடமாவது வட மாகாண முதலமைச்சர் நிதியத்திற்கு ஆளுநர் அனுமதி வழங்க வேண்டும் எனவும் புதுவருடத்திற்கும் புதிய அரசாங்கங்களுக்குமிடையில் ஒற்றுமைகள் உள்ளன. அதாவது சகல புதிய அரசாங்கங்களும் தொடக்ககாலத்தில் சிறப்பாக இயங்கும். ஆனால் பின்னர் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதால் மக்களிடமிருந்து வரும் விமர்சனங்களினால் தொடக்ககாலத்தில் இயங்கியது போல் இயங்க முடியாத நிலை உருவாகி விடுகின்றது எனவும் வடமாகாண முதலமைச்சர்சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத் தின் 3 வருடங்கள் நிறை வினை கொண்டாடும் வகை யில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது. இந்நி கழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

புத்தாண்டுக்கும் புதிய அரசாங்கங்களுக்குமிடையில் ஒரு ஒற்றுமை உள்ளது. அது என்னவென்றால் புதிய அரசாங்கங்கள் எல்லாம் தொடக்க காலத்தில் நன்றாக இயங்கும். காலம் போக போக தொடக்க காலத்தில் இயங்கியது போல் அவர்களால் இயங்க முடிவதில்லை. அதற்கு காரணம் காலம் செல்லச் செல்ல பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதால் மக்கள் மத்தியிலிருந்து எழும் அபிப்பிராயங்கள் மற்றும் விமர்சனங்களேயாகும். மேலும் வடமாகாணசபை 5 வருடத்திற்குள் நுழைந்திருக்கின்றது. இன்னும் சில மாதங்களே நாங்கள் ஆட்சியில் இருப்போம். எனவே கடந்த காலத்தில் எமக்கு தரப்படாமல் இருந்தவற்றை இந்த வருடத்திலாவது எமக்கு தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

குறிப்பாக வடமாகாண முதலமைச்சர் நிதியம் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் மாற்றம் போன்ற விடயங்களை இந்த வருடத்திலாவது தருவதற்கு ஆளுநர் நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் இந்த நிகழ் வில் சகல மதங்களினதும் தலைவர்களை அழைத்து அவர்களுடைய ஆசீர்வாதங் களை பெறுவதனால் ஆன்மீகத்தின் ஊடாக இந்த நாட்டில் வாழ்கின்ற மக்களுக்கிடையில் ஒற்றுமை உருவாகும் மேலும் இந்த வருடம் தமிழ்பேசும் மக்களுக்கு தேவையான சகலவற்றையும் வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## 100 ஏக்கர் பைனஸ் காட்டுப் பகுதிக்கு இனந்தெரியாதவர்களால் தீ வைப்பு!



(கொழும்பு)

நுவரெலியா மாவட்டத்தின், நோட்டன் பிரிஜ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விமல சுரேந்திர நீர்த்தேக்கத்திற்கு அருகாமையிலுள்ள காட்டுப் பகுதியில் இனந்தெரியாத வர்களால் தீ வைக்கப்பட்டுள்ளதாக, நோட்டன் பிரிஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் தீ வைக்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

நூறு ஏக்கர் கொண்ட பைனஸ் காட்டுப் பகுதியில் வைக்கப்பட்ட தீயினால், சுமார் 10 ஏக்கர் எரிந்து சாம்பலாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த தீயினைக் கட்டுப்படுத்துவதற்கு, இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு, தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக, நோட்டன் பிரிஜ் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பைனஸ் காட்டுக்கு தீ வைத்தவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் நோட்டன் பிரிஜ் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## துப்பாக்கிச் சூடு! ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

பன்னல - பல்லம பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தில் ஜீப்பில் சென்று கொண்டிருந்த ஒருவர் உயிரிழந்துள்ளார். இரட்டைக் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரே இனந்தெரியாத ஆயுததாரியினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும் நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் நினைவுதினம்

(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் 9 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. பொரளை கனத்தையிலுள்ள அவரது நினைவு தூபிக்கு முன்னால் அஞ்சலி செலுத்தப்பட்டது.



தலைநகர் கொழும்பிலிருந்து வெளிவரும் சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபகரும் அதன் முதலாவது ஆசிரியருமான சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க 2009 ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி படுகொலை செய்யப்பட்டார்.

மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட கொடிய யுத்தத்தை கடுமையாக விமர்சித்து வந்ததுடன் யுத்தத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட மிக் விமானக் கொள்வனவு உட்பட ஆயுதக் கொள்வனவின் போது இடம்பெற்ற பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பில் தனது பத்திரிகையில் பல தகவல்களை அம்பலப்படுத்திய நிலையிலேயே லசந்த படுகொலை செய்யப்பட்டார்.

இவரின் படுகொலைக்கும் அப்போதைய பாதுகாப்புச் செயலாளரான முன்னாள் ஜனாதிபதியின் சகோதரர் கோத்தாபய ராஜபக்ஷவிற்கும் தொடர்பிருப்பதாக வெளிப்படையாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

லசந்தவின் படுகொலை தொடர்பிலான விசாரணைகளை மகிந்த அரசாங்கம் கிடப்பில் போட்டிருந்தது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை அடுத்து அதிகாரத்திற்கு வந்த மைத்திரி - ரணில் அரசாங்கம் லசந்தவின் படுகொலை தொடர்பான விசாரணைகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைத்தது.

இதற்கமைய லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட குற்றப்புலனாய்வு பிரிவினர் குறித்த படுகொலைக்கும் இராணுவப் புலனாய்வாளர்களுக்கும் தொடர்பிருப்பதாக நீதிமன்றில் அறிவித்ததுடன் சிலரை கைதுசெய்து நீதிமன்றில் நிறுத்தினர்.

அதேவேளை லசந்தவின் பிரேத பரிசோதனை அறிக்கைக்கும் அரச இரசாயன பகுப்பாய்வாளரின் அறிக்கைக்கும் கடும் முரண்பாடுகள் இருப்பதை கண்டுபிடித்திருந்த குற்றப்புலனாய்வு அதிகாரிகள் பிறிதொரு பிரேத பரிசோதனைக்கு கோரிக்கை விடுத்தனர்.

இதற்கமைய நீதிமன்றின் உத்தரவின் பேரில் லசந்தவின் சடலம் தோண்டியெடுக்கப்பட்டு இரண்டாவது தடவையாகவும் பிரேத பரிசோதனை நடத்தப்பட்டு கல்கிசை நீதவான் நீதிமன்றில் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த பிரேத பரிசோதனை அறிக்கைக்கு அமைய லசந்தவின் தலை மீது தொடர்ச்சியாக பல தடவைகள் ஆயுதமொன்றினால் தாக்குதல் நடத்தியதாலேயே அவர் உயிரிழந்தமை கண்டுபிடிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)


கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/Lசுவிஸ் PR<br>தொ.இ: B/8129 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 31<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L/முன்பள்ளி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/8145 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 29செவ் 2 இல்<br>தகைமை/தொழில்:CIMA, MBA லண்டன் NOT PR<br>தொ.இ: B/8130 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/8147 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: செவ் 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/சொந்ததொழில்<br>தொ.இ: B/8134 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர் அவுஸ்திரேலியா<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/8149 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:O/L/சொந்ததொழில்<br>தொ.இ: B/8138 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்: 4'8"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/8157 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## மாதாந்த பரிசோதனையின்றி திருப்பி அனுப்பப்பட்டமையை கண்டித்து

# மன்னார் பொது வைத்தியசாலைக்கு முன்பாக கர்ப்பிணித்தாய்மார்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்



(மன்னார்)

மன்னார்மாவட்ட பொதுவைத்தியசாலைக்கு நேற்று திங்கட்கிழமை காலை மாதாந்த பரிசோதனைக்குச் சென்ற கர்ப்பிணித்தாய்மார்கள் அங்கு மகப்பேற்று வைத்திய நிபுணர் இல்லாத காரணத்தினால் மீண்டும் ஒரு தினத்திற்கு வருமாறு திருப்பி அனுப்பப்பட்டமையினால் தாம் தொடர்ந்தும் திருப்பி அனுப்பப்படுவதைக் கண்டித்து நூற்றுக்கணக்கான கர்ப்பிணித்தாய்மார்கள் மன்னார் பொது வைத்தியசாலைக்கு முன் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் சுமார் 2 மணித்தியாலங்களுக்கு மேலாக குறித்த வீதியூடான போக்குவரத்துக்கள் தடைப்பட்டிருந்தன. குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கர்ப்பிணித் தாய்மார்கள் வழமை போன்று நேற்று திங்கட்கிழமை காலை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாதாந்த பரிசோதனைக்காக சென்றுள்ளனர்.

எனினும் கர்ப்பிணித் தாய்மர்களை பரிசோதிப்பதற்கான மகப்பேற்று வைத்திய நிபுணர் அங்கு இருக்கவில்லை.

குறித்த வைத்திய நிபுணர் விடுமுறையில் சென்றுள்ள நிலையில் பதில் கடமைக்கான மகப்பேற்று வைத்திய நிபுணர் நியமிக்கப்படவில்லை.

இந்த நிலையில் பரிசோதனைக்காக சென்ற கர்ப்பிணித் தாய்மார்கள் உரிய முறையில் பரிசோதனைகளுக்கு உட்படுத்தாத நிலையில் பிறிதொரு தினத்தில் மீண்டும் பரிசோதனைக்காக வருமாறு தெரிவித்திருந்தனர்.

இதனால் தலைமன்னார் முதல் மாவட்டத்தில் உள்ள தூர இடங்களில் இருந்து சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு பரிசோதனைக்கு வந்த நூற்றுக்கணக்கான கர்ப்பிணித் தாய்மார்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டது.

வைத்தியசாலையில் தொடர்ச்சியாக இவ்வாறான சம்பவங்கள் இடம் பெற்று வருவதனை கண்டித்தும்,நிரந்தரமான ஒரு மகப்பேற்று வைத்திய நிபுணரை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு நியமிக்குமாறும் கோரியும் நூற்றுக்கணக்கான கர்ப்பிணித்தாய்மார்கள் ஒன்றிணைந்து நேற்றுக்காலை 8.30 மணிமுதல் 11 மணிவரை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரதான வீதியை இடைமறித்து வீதிக்கு நடுவே அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்கு வந்த மன்னார் பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை வீதியில் இருந்து அகன்று செல்ல நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

எனினும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்உடன்படவில்லை. இந்த நிலையில் சம்பவ இடத்திற்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்,மாகாண சபை உறுப்பினர் அலிக்கான் சரீப் மற்றும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள். ஆகியோர் வந்தனர். எனினும் வைத்தியசாலையின் உயரதிகாரிகள் வந்து தங்களுடன் பேச்சு நடத்தி உறுதிமொழி வழங்கினால் மட்டுமே அவ்விடத்தை விட்டுச் செல்வோம் எனத் தெரிவித்தனர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி யூட் ரதனி மற்றும் உதவி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் றோய் பீரிஸ் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

உயர் அதிகாரிகளின் கருத்துக்கு அமைவாக குறித்த பிரச்சினைக்கு உடனடியாக தீர்வை பெற்று தருவதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி யூட் ரதனி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களுக்கு உறுதிமொழி வழங்கினார். உறுதிமொழியை தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அங்கிருந்து சென்றனர்.

குறித்த பிரச்சினை தொடர்பாக வடமாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலனிடம் வினவிய போது, மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் பரிசோதனைக்காக வரும் கர்ப்பிணித் தாய்மார்கள் இரண்டு முறைகளில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

அதில் ஒரு தரப்பினரை மகப்பேற்று வைத்திய நிபுணரும், ஏனையோரை அங்குள்ள வைத்தியர்களும் பரிசோதனைகளை மேற்கொள்வார்கள்.

ஆனால் மகப்பேற்று வைத்திய நிபுணரின் பரிசோதனைக்குரிய கர்ப்பிணித்தாய்மார்கள் சுமார் 15 பேர் வரை காணப்பட்டனர். அதிகளவானவர்களை அங்குள்ள வைத்தியர்கள் பரிசோதிக்க வேண்டும்.

ஆனால் வைத்தியர்கள் பரிசோதிக்க வேண்டிய கர்ப்பிணித்தாய்மார்கள் பரிசோதிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளமை தவறான நடவடிக்கை ஆகும்.இவ்விடயம் தொடர்பில் அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு முழு காரணமும் நிர்வாகத்தில் உள்ள சீரின்மையே.

எனவே வெகு விரைவில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை நிர்வாகத்தில் அதிகளவான மாற்றங்களை மேற்கொள்ளவுள்ளேன் என அவர் தெரிவித்தார். (2-4)




# மன்னார் பொது வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறை

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



(மன்னார்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் மக்களுக்கான சேவையை வழங்குவதில் தொடர்ந்தும் பல்வேறு முட்டுக்கட்டைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் வைத்திய சாலை தரப்பினர் முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் நிலவரம் தொடர்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

பொதுவாகவே மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் தற்போதைய நிலையில் வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறை பாரிய பிரச்சினையாக இருக்கின்றது.

ஆகக்குறைந்தது ஒரு சிகிச்சைப்பிரிவில் இரண்டு வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

பிரதானமாக குழந்தைகள் சிகிச்சைப்பிரிவு, மகப்பேற்று சிகிச்சைப்பிரிவு, அறுவைச் சிகிச்சைப் பிரிவு, பொது மருத்துவம் மற்றும் அறுவைச் சிகிச்சை கூடத்தில் மயக்க மருந்து வழங்கும் வைத்திய நிபுணர் ஆகியோர் மிக அவசியமாக தேவைப்படுகின்றனர்.

மன்னார் வைத்தியசாலையை பொறுத்தவரையில் பொது மருத்துவ பிரிவிற்கும், அறுவைச்சிகிச்சை பிரிவிற்கும் இரண்டு வைத்திய நிபுணர்கள் வீதம் தற்போது கடமையில் இருக்கின்றார்கள்.

ஆனால் குழந்தைகள் சிகிச்சைப்பிரிவிற்கும்,மிக முக்கியமான மகப்பேற்று சிகிச்சை பிரிவிற்கும் ஒரு வைத்திய நிபுணருடைய உதவியுடனேயே இங்கு சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறான காலப்பகுதியிலேயே குறித்த வைத்திய நிபுணர்கள் கடமை விடுமுறை எடுக்கின்ற போது அவர்களுக்கு பதிலாக அங்கே சேவையாற்ற வைத்திய நிபுணர் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இவ்வாறான காலங்களில் நாங்கள் வேறு நிலையங்களுக்கு நோயாளர்களை அனுப்ப வேண்டிய தேவை ஏற்படுகின்றது.

கடந்த மாதம் மட்டும் மகப்பேற்று நிபுணர் விடுமுறையில் இருந்த காலங்களில் பதில் மகப்பேற்று நிபுணர் இல்லாத காரணத்தினால் பல கர்ப்பிணித்தாய்மார்கள் பிரசவத்திற்காக மன்னார்மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் வவுனியா, யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளுக்கு இடமாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது.

இதன்போது பல தாய்மார்கள்அம்புலன்ஸ்வண்டியினுள் குழந்தைகளை பிரசவித்துள்ள நிலை ஏற்பட்டுள்ளது.

சுமார் 15 பிரசவங்கள் கடந்த மாதம் இவ்வாறு நிகழ்ந்துள்ளது. மேலும் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட தாய் ஒருவர் இரத்தப்பெருக்கின் காரணமாக உடனடியாக அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட வேண்டிய தேவை இருந்த போது மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவு இருந்தாலும் குறித்த சிகிச்சைப் பிரிவில் கடமையாற்ற வேண்டிய மயக்க மருந்து கொடுக்கும் வைத்திய நிபுணர் இல்லாமையினால் குறித்த தாயைக்கூட வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

தற்போதைய நிலையில் இப்போது இருக்கின்ற மகப்பேற்று நிபுணர் இரண்டு வராங்களின் பின் வெளிநாட்டுப்பயிற்சிக்காக செல்ல வேண்டிய நிலையில் இருக்கின்றார்.

தற்போது கடமையாற்றும் குறித்த மகப்பேற்று நிபுணர் பதில் கடமையில் இருக்கின்றார். ஆனால் நிரந்தரமான மகப்பேற்று நிபுணர்கூட இல்லை.

நிலைமை இப்படியாக இருக்குமானால் எதிர்காலத்தில் சகல கர்ப்பிணித் தாய்மார்களையும் பிரசவத்திற்காக மன்னாரில் இருந்து வேறு வைத்தியசாலைகளுக்கு அனுப்ப வேண்டிய பாரிய பிரச்சினை உருவாகும்.

அதற்கு முன்பாக குறித்த பிரச்சினைகள் சீர் செய்யப்பட வேண்டும்.

நான் இவ்விடயம் தொடர்பாக மத்திய சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ராஜித சேனராத்னவுடன் நேரடியாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமைகளை தெரியப்படுத்தியுள்ளேன்.

கொழும்பில் மத்திய சுகாதார அமைச்சினுடைய பணிப்பாளர் நாயகத்துடனும் தொடர்பு கொண்டு நிலைமையை நான் தெளிவுபடுத்தியுள்ளேன் என்றார்.(2-281-4)

# சமுர்த்தி பயனாளிகள் 709 பேருக்கு சமையல் உபகரண அடுப்புத் தொகுதிகள்

(மல்லாவி )

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நாடு தழுவிய ரீதியில் உள்ள சமுர்த்தி பயனாளிகளிடையே சமுர்த்தி அபிவிருத்தி வங்கி ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற "நுகர்வு மற்றும் இடர் கடன் திட்டத்தின்" கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி பயனாளிகள் 709. பேருக்கு தலா 09. ஆயிரத்து 600.ரூபா வீதம் எரிவாயு சமையல் உபகரண அடுப்புத் தொகுதிகள் மொத்தம் 68. இலட்சத்து 06, ஆயிரத்து 400, ரூபா பெறுமதியில் வழங்கப்பட்டு வருவதாக கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவின் சமுர்த்தி ஊடக வலையமைப்பின் ஊடகவியலாளர் யோசப் - ஜேயிஸ்குமார் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஒழுங்கமைப்புக்கமைய சமுர்த்தி அபிவிருத்தி வங்கியில் வாடிக்கையாளராக உள்ள பயனாளிகளுக்கு கடந்த நவம்பர் மாதம் தொடக்கம் ஜனவரி மாதம் 31, ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 709. பயனாளிகளுக்கு இந்த எரிவாயு உபகரண அடுப்புத் தொகுதி வழங்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் உள்ள முள்ளியவளை சமுர்த்தி அபிவிருத்தி வங்கி ஊடாக 150, பயனாளிகளுக்கும், செம்மலை சமுர்த்தி அபிவிருத்தி வங்கி ஊடாக 200 பயனாளிகளுக்கும், சிலாவத்தை சமுர்த்தி அபிவிருத்தி வங்கி ஊடாக 359 ஆக மொத்தம் 709, எரிவாயு உபகரண அடுப்புத் தொகுதி வழங்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)



தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் வவுனியா இறம்பைக்குளம் தொகுதிக்கான தேர்தல் அலுவலகம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் , வடக்கு மாகாண சபை உறுப்பினர் ம. தியாகராஜா , இ. இந்திரராசா உள்ளிட்டவர்களும் அக்கட்சியின் வவுனியா நகரசபை வேட்பாளர்கள் , கலைஞர்கள் , இளைஞர்கள் , பொதுமக்களென பலர் கலந்துகொண்டிருந்தனர்.

# தேராவில் 200 வீட்டுத்திட்டத்தில் கசிப்பு உற்பத்தி, கஞ்சா விற்பனை

## மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேராவில் 200 வீட்டுத் திட்டத்தில் தற்போது சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, கஞ்சா விற்பனை என்பன அதிகரித்துக் காணப்படுவதனால் ஏற்கனவே வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற இந்த கிராம மக்களிடையே குடும்பப் பிணக்குகள் மேலும் வறுமை நிலைமை ஏற்பட்டுள்ளதாக இப்பகுதி பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.


முல்லைத்தீவு மாவட்டத்தின் குறைந்தளவு வருமானங்களைப் பெறுகின்ற தேராவில் 200 வீட்டுத்திட்டத்தில் வாழ்ந்து வரும் மக்கள் அன்றாட உணவிற்கே பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதுடன், நுண்கடன் நிதிநிறுவனாங்களில் கடன்களைப் பெற்று அவற்றை மீளச்செலுத்துவதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது இந்தப் பகுதியில் சட்டவிரோதமான கசிப்பு மற்றும் கஞ்சா என்பவற்றின் பாவனை அதிகளவில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இப்பிரதேசத்தில் உள்ள இளவயதினரும் இவற்றுக்கு அடிமையாவதுடன், குடும்பப் பிணக்குகள் ஏற்படுதல் ஏற்கனவே வறுமையில் வாழும் குடும்பங்கள் இதன் பயன்பாடால் மேலும் வறுமை நிலைக்குச் செல்கின்ற நிலைமையும் காணப்படுவதாக இப்பகுதி பொது மக்களும் பொது அமைப்புக்களினுடைய பிரதிநிதிகளும் தெரிவித்துள்ளதுடன், இதனைக் கட்டுப்படுத்தி மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (2-315)

# ஆபத்தான முறையில் காணப்பட்ட மரப்பாலம் புனரமைக்கப்பட்டு புதிய பாலம் பயன்பாட்டிற்கு

(கண்டாவளை)



கிளிநொச்சி முரசுமோட்டை ஐயன்கோவிலடி கிராமத்திற்கான பிரதான வீதியில் ஆபத்தான முறையில் காணப்பட்ட மரப்பாலத்திற்குப் பதிலாக ஆயிரம் கிராமியப் பாலங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் புதிய பாலம் அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி முரசுமோட்டை ஐயன் கோவிலடிக் கிராமத்திற்கான பிரதான வீதியை குறுக்கறுத்துச் செல்லும் கனகராயன் ஆற்றின் கிளையாற்றுக்கு ஆபத்தான நிலையில் காணப் பட்ட மரப்பாலத்தை புனர மைத்து தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

அத்துடன் வட்டக்கச்சி மற்றும் இதர இடங்களுக்கு செல்லும் குறுந்தூர வீதியாகவும் முரசுமோட்டை மற்றும் ஊரியான் ஆகிய கிராமங்களின் பொது மயானத்திற்கு செல்லும் வீதியாகக் காணப்படும் இவ்வீதியின் குறித்த பாலமானது ஆபத்தான நிலையில் காணப் பட்டமையால் இதனூடாகப் பயணிப்போர் ஆபத்தான முறையிலேயே பயணிக்க வேண்டியிருந்தது. அத்துடன் பருவமழை மற்றும் வெள்ளப்பெருக்கு காலங்களில் ஐயன் கோவிலடிக்கிராமத்திற்கான போக்குவரத்துக்கள் துண்டிக்கப்படுவதுடன் 30 வரையான குடும்பங்கள் பெரும் நெருக்கடிகளை சந்தித்து வந்தன.

இந்நிலையில் குறித்த கிராம மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் முன்மொழிவுக்கு அமைவாக ஆயிரம் பாலத்திட்டத்தின் கீழ் இக் கிராமத்திற்கான புதிய பாலம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# சட்டவிரோத மீன்பிடித்தொழிலால் வாழ்வாதாரத் தொழில்கள் பாதிப்பு

## முல்லை.மாவட்ட 18 மீனவச் சங்கங்கள் சுட்டிக்காட்டு



(கண்டாவளை)

முல்லைத்தீவு கடல்பகுதியில் சுமார் 800 இற்கும் மேற்பட்ட வெளிமாவட்ட மீனவர்களின் படகுகள் அத்துமீறிய தொழில்களில் ஈடுபட்டு வருகின்றன என்றும் இதனால் மாவட்டத்தில் உள்ள மீனவர்களின் வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன என மீனவ அமைப்புக்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

குறிப்பாக வெளி மாவட்டத்திலிருந்து வருகின்ற வெளிமாவட்ட மீனவர்களால் தொடர்ந்தும் சட்டவிரோத தொழில்கள் மேற் கொள்ளப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பில் சகல தரப்புக்களுடனும் பேசியும் இதுவரை எந்தவித தீர்வுகளும் கிடைக்கவில்லை என சுட்டிக்காட்டியுள்ள முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சமாசம் மீனவர்களின் பிரச்சனைகளை ஆராய்ந்து தீர்ப்பதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளபோதும் அதனால்கூட இந்த விடயத்தை கையாள முடியாதுள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

இவ்வாறு சட்டவிரோத தொழில்களால் தங்களது வாழ்வாதாரத்தொழில்கள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன என முல்லைத்தீவில் செயற்பட்டு வரும் 18 இற்கும் மேற்பட்ட மீனவ சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. (2-315)

# பூநகரி பிரதேசத்தில் 387 வீதிகள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளது

(கண்டாவள்ளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் சுமார் 490.1 கிலோ மீற்றர் நீளமான உள்ளக வீதிகள் புனரமைக்க வேண்டிய தேவையுள்ளதாக பூநகரி பிரதேச செயலகப் புள்ளிவிபரத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகவும் பின் தங்கிய பிரதேசமாக காணப்படும் பூநகரி பிரதேசத்தில் பெருமளவான உள்ளக வீதிகள் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

குறிப்பாக பூநகரி பரந்தன் வீதியிலிருந்து கறுக்காய் தீவு செல்லும் வீதி புனரமைக் கப்படாமையினால் பெருமளவான குடும்பங்கள் பயண நேரங்களில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வுருகின்றன.

இதேபோன்று வினாசியோடை, கௌதாரிமுனை உள்ளிட்ட பகுதிகளில் பிரதான வீதிகளும் மிக மோசமான நிலையில் சேதமடைந்து காணப்படுகின்றன.

இதனால் மிகவும் பின் தங்கிய கிராமங்களில் வாழும் ஏராளமான குடும்பங்களும் தமது போக்குவரத்துக்களில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றன.

அதாவது 612.64 கிலோ மீற்றர் நீளமான 435 உள்ளக வீதிகளில் 122.54 கிலோ மீற்றர் நீளமான 48 வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன என்றும் 490.1 கிலோ மீற்றர் 387 வீதிகள் புனரமைக்கவேண்டிய தேவையுள்ளதாக பூநகரி பிரதேச செயலகப் புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)




# அனுமதிப்பத்திரங்கள் இன்றி காட்டு மரங்கள் தறிக்கப்பட்டு வெளிமாவட்டங்களுக்கு கடத்தல்

(கண்டாவளை)

கிளிநொச்சி, முழங்காவில் மற்றும் நாச்சிக்குடா ஆகிய பகுதிகளில் உள்ள காடுகளில் பெறுமதிவாய்ந்த முதிரை, பாலை போன்ற காட்டுமரங்கள் தொடர்ந்தும் வெட்டப்பட்டு வெளியிடங்களுக்கு கடத்தப்பட்டுவருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பகல் வேளைகளில் காடுகளில் வெட்டப்பட்டு மரங்கள் எந்தவித அனுமதிப்பத்திரங்களும் இன்றி மிகவும் பாதுகாப்பான முறையில் வெளியிடங்களுக்கு கடத்துவதற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

ஆனால் தமது காணிகளில் உள்ள மரங்களை தமது வீட்டுத்திட்ட தேவைகளுக்கு வெட்டுவதற்குரிய அனுமதிகள் வழங்கப்படுவதில்லை. அவ்வாறு குறித்த மரங்களை வெட்டுவதற்கு அனுமதிகள் வீழங்கப்பட்டாலும் அவற்றை வைத்திருப்பதற்குரிய அனுமதிகள் இல்லை என்று அவற்றை கைது செய்கின்றனர் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் பொதுமக்கள் நடமாட்டம், பொலிஸாரின் கண்காணிப்புக்கள் உள்ள போதும் இந்த மரங்கள் கடத்தப்படுகின்றன. எனவே இதனைக் கட்டுப்படுத்த வேண்டிய அதிகாரிகளின் துணையுடன் இவை இடம்பெறுவதாகவே இப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (2-315)

# இரணைமடு விபத்தில் ஒருவர் காயம்

(பரந்தன்)

கிளிநொச்சி அறிவியல் நகர் இரணைமடுப் பகுதியில் பட்டா வான், துவிச்சக்கர வண்டி நேருக்கு நேர் மோதுண்ட விபத்தில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த பாதுகாப்பு ஊழியர் ஒருவர் தலையில் காயம்அடைந்தநிலையில் கிளிநொச்சி வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று காலை 9 மணியளவில் நடைபெற்றுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-312)

# சிறு கடற்றொழிலாளர்களின் தொழில் வட்டுவாகல் பாலத்தில் ஆரம்பம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தில் தற்போது தொழில் மேற்கொள்ளக் கூடியதாகவுள்ளதாக சிறு கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் சிறுகடற்றொழிலாளர்களின் தொழில் மேற்கொள்ளும் பகுதியாக காணப்படும் வட்டுவாகல் ஆற்றில் கடந்த காலங்களில் தொழில்களில் ஈடுபடுவதில் பல்வேறு சிக்கல்கள் காணப்பட்டதுடன் வரட்சியால் பாதிக்கப்பட்டிருந்தது.

இப்பகுதியில் தொழில் மேற்கொள்ளக்கூடியதாகவும் இதனால் தாங்கள் இப்பகுதியில் தொழில்களில் ஈடுபட்டு வருவதுடன் இப்பகுதியில் பாரம்பரிய முறையில் வீச்சு வலைமூலம் பிடிக்கப்படும் மீன்களை உடனடியாகவே 300 ரூபாவிற்கு சந்தைப் படுத்தக் கூடியதாகவுள்ளதாகவும் இரவு வேளைகளிலேயே இத்தொழில் வழமை போன்று நடைபெற்றுக் கொண்டு வருவதாகவும் இப்பகுதி சிறு கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். (2-315)






ராகவ சங்கீர்த்தன சபாவினால் வவுனியாவில் முதன் முறையாக அண்மையில் சாம்பல்தோட்டம் சாயி சரவண மண்டபத்தில் தியாகராஜ சங்கீர்த்தன விழா வைத்திய கலாநிதி கந்தையா இராமச்சந்திரன் தலைமையில் நடத்தப்பட்டது.

பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன் , சிறப்பு விருந்தினர்களாக வவுனியா வேப்பங்குள சித்திவிநாயகர் ஆலய பிரதமகுரு சரணியபுரீஸ்வரக்குருக்கள் மற்றும் பிரதேச, மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

# பிணைமுறி மோசடி தொடர்பாக அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன் நிபுணர்களின் உதவியுடன் தடயவியல் கணக்காய்வு

(கொழும்பு)

**மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாக நடத்தப்படவுள்ள தடயவியல் கணக்காய்வுக்கு இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளில் இருந்து நிபுணர்களின் உதவியினைப் பெற இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

மத்திய வங்கி பிணைமுறி விற்பனையில் இடம் பெற்ற முறைகேடுகளின் மூலம், 11,145 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக, ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தநிலையில், மோசடி மூலம் இழக்கப்பட்ட 11,145 மில்லியன் ரூபாவை மீட்பதற்கு, மத்திய வங்கி தடயவியல் கணக்காய்வை மேற்கொள்ளும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த தடயவியல் கணக்காய்வுக்கு இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகளின் நிபுணர்களின் உதவியைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

கடந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற மோசடிகள், முறைகேடுகளைக் கண்டுபிடிக்கவும், வெளிநாடுகளில் பதுக்கப்பட்டுள்ள சொத்துக்களை கண்டறியவும் நடத்தப்படும் விசாரணைகளுக்கு அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் நிபுணத்துவ உதவிகள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே, பிணைமுறி மோசடி மூலம் பேர்பெச்சுவல் ட்ரெசரீஸ் நிறுவனத்தினால் ஈட்டப்பட்ட நிதியை மீளப் பெற்றுக் கொள்ள முடியும் என்று மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

பேர்பெச்சுவல் ட்ரெசரீஸ் நிறுவனத்தின் வங்கிக் கணக்குகள் அனைத்தும் முடக்கப்பட்டுள்ளன. இதனால் வங்கிக் கணக்குகளிலுள்ள நிதியை அவர்களால் மீளப் பெற முடியாது.

இந்த நிதியை மீளப் பெறுவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் சிவில் மீட்பு வழக்கு ஒன்றை தாக்கல் செய்யும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

## முழுமையான ஒத்துழைப்பு வழங்கத்தயார்- அஜித் நிவாட்

(கொழும்பு)



கடந்த 2008 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி மோசடி குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டால் அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதாக இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மீண்டும் தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள ரமடா ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அஜித் நிவாட் கப்ரால் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## சேவல் சின்னத்தில் பிக்கு



(கொழும்பு)

தலவாக்கலை - லிந்துலை நகரசபைக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் சேவல் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான அறிமுக பிரசார கூட்டம் லிந்துலை பகுதியில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமானும் இ.தொ.காவின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் பௌத்த பிக்கு ஒருவர் உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடுவது முதன் முறையாக கருதப்படுகின்றது.

அத்தோடு இலங்கை வரலாற்றில் தமிழ் கட்சி ஒன்றின் ஊடாக பௌத்த பிக்கு ஒருவர் போட்டியிடுவது இதுவே முதன்முறை என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மகிந்தவின் பாதுகாப்பு வாகனத்தில் மோதுண்ட நான்கு பேர் படுகாயம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு வாகனத்தில்மோதுண்ட நான்கு பேர்படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிரிந்த பிரதேசத்திலிருந்து மாத்தறை கும்புருபிட்டிய வரையிலான வீதியின் மலான பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

பெரியவளைவைகொண்ட இந்த இடத்தில் ஆட்டோவை முந்தி செல்ல முயற்சித்த வேளையில், இரண்டு வாகனங்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டமையினால் விபத்து ஏற்பட்டுள்ளது.

மகிந்தவின் பாதுகாப்பாளர் 5 பேர் பயணித்துள்ள நிலையில் அவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

விபத்து தொடர்பில் ஆட்டோ மற்றும் மகிந்தவின் பாதுகாப்பு வாகனம் கும்புருப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. விபத்து தொடர்பில் கும்புருப்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## தேர்தலை இடைநிறுத்தக் கோரிய மனுமீதான விசாரணை 29ஆம் திகதி

(கொழும்பு)

அம்பகமுவ உள்ளிட்ட மூன்று பிரதேச சபைகளுக்கான தேர்தலை நடத்துவதை இடைநிறுத்துமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமை மீறல் மனுவினை எதிர்வரும் 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அம்பகமுவ மூன்று பிரதேச சபைகளாக பிரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மஸ்கெலியா, நோர்வூட் மற்றும் அம்பகமுவ ஆகிய பிரதேச சபைகளாக பிரிக்கப்பட்டன.

இவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளமையினால் சிவனொளி பாதமலையினை அண்மித்து வாழும் மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவித்து அம்பகமுவ பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் இந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவினை தாக்கல் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 34 கிலோ கஞ்சா தூளுடன் காத்தான்குடியில் ஒருவர் கைது

(ஏறாவூர்)

மட்டக்களப்பு - காத்தான்குடி பிரதேசத்தில் ஆட்டோவில் 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான 34 கிலோ கஞ்சா தூள் எடுத்துச் சென்ற நபர் ஒருவரை காத்தான்குடி பொலிஸார் நேற்றுக் காலை கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமன் யட்டவரவின் வழிகாட்டலில் பொலிஸ் குழுவினர்மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆட்டோ ஆசனத்தின் பின் பகுதியில் மறைத்து வைத்திருந்த 34 கிலோ கஞ்சாவினையும் கடத்தலுக்கு பயன்படுத்திய ஆட்டோவையும் பொலிஸார் மீட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## ஹக்கீமின் பேச்சு மோசமான அத்துமீறலைக் காட்டுகிறது

(ஏறாவூர்)

சாய்ந்தமருது பள்ளிவாசல் நிர்வாகத்தை தேர்தல் ஆணையாளர் மூலம் கலைப்போம் என அமைச்சர் ரவூப் ஹக்கீம் பேசியிருப்பது மிக மோசமான அத்துமீறலையும், அவரது அகங்காரத்தையும், கர்வத்தையும் காட்டுகிறது என உலமா கட்சி தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

## கூட்டமைப்பு வேட்பாளரின் அலுவலகம் மீது தாக்குதல்



(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாநகர சபைக்கு போட்டியிடும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வேட்பாளர் ஒருவரின் அலுவலகம் மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபை தேர்தலில் 3ஆம் வட்டாரத்தில் போட்டியிடும் கந்தசாமி ரகுநாதன் என்பவரின் கொக்குவிலில் அமைக்கப்பட்டுள்ள அலுவலகம் மீதே நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருவதோடு சந்தேகத்தின் பேரில் மூவரைத் தேடியும் வருகின்றனர். (இ-7)

## பிணைமுறி; உள்ளூராட்சித் தேர்தல்

# சுதந்திரக் கட்சியின் பங்காளிகளுடன் ஜனாதிபதி இன்று அவசர சந்திப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவசர சந்திப்பொன்றை மேற்கொள்ளவுள்ளார். ஜனாதிபதி மாளிகையில் இச்சந்திப்பு இடம்பெறவுள்ளது.



ஒவ்வொரு கட்சியிலிருந்தும் தலா இரண்டு முக்கிய பிரதிநிதிகளை பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான பிரசாரங்கள் சூடு பிடித்துள்ள நிலையில் சுதந்திரக்கட்சியும், அதன் பங்காளிகளும் அடுத்த கட்டமாக முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து இச்சந்திப்பில் கவனம் செலுத்தப்படவுள்ளதோடு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அணியினரின் செயற்பாடுகள் அவர்கள் மீதுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பிலும் ஆராயப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மறுபக்கத்தில் இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி மோசடிகள் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அமைவாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது அறிவிப்பினை விடுத்துள்ளார்.

இந்நிலையில் மக்கள் விடுதலை முன்னணி, கூட்டு எதிர்க்கட்சி, சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன பாராளுமன்றத்தினை அவசரமாக கூட்டி பிணைமுறி விவகாரம் தொடர்பில் விவாதத்தினை நடத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளன.

அதற்கு அமைவாக இன்று செவ்வாய்க்கிழமை கட்சித்தலைவர்கள் கூட்டம் பிற்பகல் இரண்டு மணிக்கு சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் பாராளுமன்ற சபாநாயகர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கு முன்னதாகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்காளிக்கட்சி தலைவர்களை அழைத்துள்ள நிலையில் பிணைமுறி மோசடிகள் தொடர்பாக தமது தரப்பின் நிலைப்பாடுகளை அழுத்தம் திருத்தமாக கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் பாராளுமன்றத்திலும் தெரிவிப்பதற்கான வியூகங்கள் தொடர்பிலும் ஆராயப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறித்த கூட்டத்தில் சிறுபான்மை மற்றும் அரசியல் கட்சிகளான ஈ.பி.டி.பி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட பல தரப்புக்கள்பங்கேற்கவுள்ளமையை உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

# அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து மரத்தில் தேங்காயும் காய்ப்பதில்லை

## மகிந்த கேலி கிண்டல்

(கொழும்பு)

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததில் இருந்து மரத்தில் தேங்காய்கூட காய்ப்பது இல்லையென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன முன்னணி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை புத்தளம் மாவட்டத்தில் ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில்,

"ஐக்கிய தேசியக் கட்சியும், சுதந்திரக் கட்சியும் ஏன் ஆட்சி நடத்துகின்றன. இரு கட்சிகளும் மாறி மாறி ஆட்சி முறைகளை சாடுகின்றன.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி காரணமாகவே மக்கள் மீது அதிக வரிச்சுமை அதிகரித்துள்ளது.



அதனாலேயே பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இதற்கு அரசாங்கம் பதில் சொல்ல வேண்டும்.

இனியாவது, வாக்குகளை சரியாக பயன்படுத்துங்கள். ஆட்சியை கவிழ்ப்பதை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## புதிய அரசியலமைப்பு விடயத்தில் 'தன்னிச்சையாக தீர்மானம் எடுக்க அரசாங்கம் தயாரில்லை'- சம்பிக்க



(கொழும்பு)

சகல தரப்பினதும் அனுமதி இல்லாது புதிய அரசியல் அமைப்பு ஒன்று உருவாகப்போவதில்லை.

அதேபோல் இருக்கும் அரசியல் அமைப்பில் மாற்றங்களை கொண்டு வருவதிலும் அனைத்து தரப்பினதும் அனுமதி அவசியம். புதிய அரசியல் அமைப்பு விடயத்தில் தன்னிச்சையாக தீர்மானம் எடுக்கமாட்டோம் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஊழல் குற்றவாளிகளை தண்டிப்ப தில் நாமே முதலில் நிற்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இன்று மத்திய வங்கி பிணைமுறி விவாகரத்தில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும் அரசாங்கமாக நாங்கள் சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

அந்தத் தீர்மானத்திலேயே நாங்கள் செயற்பட்டு வருகின்றோம். குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதில் நாங்களே முன்னின்று செயற்படுவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

ஹோமாகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

## பிணைமுறி விவகாரம் குறித்து ஆராய

# வியாழன் அல்லது வெள்ளியில் விசேட பாராளுமன்ற அமர்வு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரம் குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் விசாரிக்கும் நோக்கில் பாராளுமன்றம் நாளை மறுதினம் வியாழக்கிழமை அல்லது வெள்ளிக்கிழமை சபாநாயகர் கரு ஜெயசூரியவினால் கூட்டப்படும் என தெரிய வருகிறது.


விசேட பாராளுமன்ற அமர்வைக் கூட்டி இது தொடர்பில் ஆராய்வதற்காக விசேட கட்சித் தலைவர்கள் கூட்டத்தை சபாநாயகர் இன்று செவ்வாய்க்கிழமை நடத்தவுள்ளார்.

இன்று செவ்வாய்க்கிழமை சபாநாயகர் தலைமையில் பாராளுமன்றில் நடைபெறவுள்ள இந்தக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அனைத்துக் கட்சிகளினதும் செயலாளர்களுக்கு சபாநாயகர் அழைப்பு விடுத்துள்ளார்.

அதன்படி இன்று நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விசேட பாராளுமன்ற அமர்வை நடத்தி அதில் பிணைமுறி விவகாரம் குறித்த விவாதத்தை நடத்துவது தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

இதன்படி நாளை மறுதினம் வியாழக்கிழமை அல்லது வெள்ளிக்கிழமை தினத்தில் இந்த விசேட பாராளுமன்ற அமர்வை நடத்துவதற்கு சபாநாயகர் தலைமையிலான கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது தீர்மானம் எடுக்கப்படும் என தெரிய வருகிறது. (இ-7)

# வலம்புரி ஆசிரியருக்கு பதில் மடல்



## -கம்பவாரிதி இ.ஜெயராஜ்-

(நேற்றைய தொடர்ச்சி)

தன்னால் நியமிக்கப்பட்ட அமைச்சர்களின் ஊழலை எதிர்க்கட்சித் தலைவர் வெளியிடும் மட்டும் அறியாதிருந்ததிலும், வெளியிட்ட பின்பும் அவ் அமைச்சருக்குச் சார்பாய் பல இடங்களிலும் பேசியதிலும் தான் அமைத்த நீதிவிசாரணைக் குழு தன் ஆதரவு அமைச்சரை குற்றம் சாட்ட, அவ் விசாரணைக்குழுவின் செயற்பாட்டில் சந்தேகம் தெரிவித்ததிலும், அக்குழுவின் முடிவை அப்படியே ஏற்காமல் தனது ஆதரவாளர் மட்டுமன்றி மற்றைய அமைச்சர்களும் குற்றவாளிகள்தான் என்றுரைத்து அவர்களையும் நீக்க முயன்றதிலும் அவரது நிர்வாகத்திறனின்மையும், நீதியின்மையும், பக்கச்சார்பும் வெளிப்பட்டன.

ஆரம்பத்தில் ஆயுதக் கலாசாரக்காரரோடு என்னால் ஒத்துப்போக முடியாது என்றுரைத்து ஈ.பி.ஆர்.எல்.எப். சிபாரிசு செய்த சுரேஷ் பிரேமச்சந்திரனின் தம்பியை அமைச்சராக்க மறுத்துவிட்டு பின்னர் அதே சுரேஷ் பிரேமச்சந்திரனை அணி சேர்த்து நின்றதிலும், கூட்டமைப்போடு பகை வந்த பிறகு அதே பிரேமச்சந்திரனின் தம்பியை அமைச் சராக்கிய செயலிலும் தன் அணி சார்ந்த இவர்களே தமிழ்மக்களின் மாற்றுத்தலைமையாகும் தகுதி கொண்டவர்கள் என இனங்காட்ட முயன்ற செயலிலும் அவரது உண்மைக்கு மாறான தன் உணர்ச்சியும் வெற்றிக்காய் எதையும் செய்யத் துணியும் பொய்மையும் வெளிப்பட்டன.

முதலமைச்சர், அண்மையில் நம் உரிமையை தெற்கிடம் இருந்து பெறும் அவசியமில்லை என்றும் பிரபாகரன் அரசியல் சூட்சுமத்தில் அனுபவம் முதிர்ந்தவர்களின் அறிவுரைகளை புறந்தள்ளி இருக்கலாம். அதனால் மரணத்தையும் தழுவியிருக்கலாம். ஆனால், மண்டியிட்டு மாலை பெற வேண்டிய அவசியம் அவருக்கு இருக்கவில்லை என்றும் கூறியிருக்கிறார். அதன் மூலம் தானும் பிரபாகரனின் வழியைப் பின்பற்றுவதாய் மறைமுகமாய்ச் சுட்டி மக்கள் ஆதரவைப் பெற முயன்றிருக்கிறார். பிரபாகரனுடைய தியாகம் அனைவரும் அறிந்தது.

அத்தியாகத்தின் ஒரு கூறினையாவது முதலமைச்சர் இனத்திற்காகச் செய்திருக்கிறாரா? என்பது முதல் கேள்வி. பிரபாகரனின் பிடிவாதத்தால் நம் இனம் பெற்ற அழிவை இன்னொருதரமும் நம்மால் தாங்க முடியுமா? என்பது இரண்டாவது கேள்வி. இல்லை அதே பிடிவாதத்துடன் அழிவேதுமின்றி இனத்திற்கான உரிமைகளைப் பெற வேறேதேனும் வழிகளை முதலமைச்சர் வைத்திருக்கிறாரா? என்பது அடுத்த கேள்வி. அப்படி வைத்திருக்கிறார் என்றால் அதனை ஏன் வெளிப்படுத்தாமல் இருக்கிறார்? என்பது முக்கியமான நிறைவுக் கேள்வி. இதுதான் வழி. இன்ன பலத்தால் பேரினத்திற்குப் பணியாமல் வெற்றி காண்பேன். பேரினத்தாரை எதிர்க்க என்னிடம் இன்ன சக்தி இருக்கிறது என்பது பற்றி ஏதும் உரைக்காமல் இனப்பிரச்சினை தீர்வில் எதையும் விட்டுக் கொடுக்கமாட்டேன். பேரினத்தாருக்குத் தாழ்ந்து போக மாட்டேன் என்றெல்லாம் வீர வசனம் பேசி மக்களின் உணர்ச்சியைக் கிளறி தன் தலைமை நிலைப்பதற்காக, யதார்த்தமின்றிப் பேசிவரும் பேச்சுக்களில் அவரது தீர்க்க்தரிசனமின்மை வெளிப்பட்டது.

ஆளுநரின் செயலாளருடன் முரண்பாடு, ஆளுநருடன் முரண்பாடு, பிரதமருடன் முரண்பாடு, தனது அமைச்சர்களுடன் முரண்பாடு, தன் கட்சியினருடனே முரண்பாடு என பதவிக்கு வந்த காலம் தொடக்கம் பலருடன் முரண்பாடுகளை வளர்த்ததன்றி, அவர் சாதித்த காரியங்கள் என எதனையும் சுட்டமுடியவில்லை. இரந்து எதனையும் பெறப்போவதில்லை எனப் பேசும் இவர் முரண் பாடுகளுக்கிடையில் தனக்கும் தனது அமைச் சர்களுக்குமாக முரண்பட்ட ஆளுநரிடமே விண்ணப்பித்து வாகனம் முதலியவற்றைப் பெற்றதில் பிரபாகரனுக்கு நிகராகக் காட்டவிரும்பும் அவரது தியாகத்தின் (?) வீரியம் வெளிப்பட்டது.

அரசியலுக்கு அழைத்து வந்து அவரது தேர்தல் செலவுகளுக்காக பணம் சேர்த்துக் கொடுத்து தம்முயற்சியால் பெருவெற்றி தேடிக் கொடுத்து, பதவி தந்த அணியினரை ஏன் வெறுக்கிறார் என்றும், அவர்களிடம் இல்லாத என்ன தகுதி அவர் இனங்காட்ட நினைக்கும் புதிய தலைமையிடம் இருக்கிறது என்றும் இன்றுவரை தெளிவாக வெளிப்படுத்த முடியாத தன்மையில் அவரது தடுமாற்றம் வெளிப்பட்டது.

இரணைமடுக் குளத்திட்டம், வவுனியா பொருளாதார வர்த்தக மையத்திட்டம், அகதிகளுக்கான பொருத்து வீட்டுத்திட்டம், வவுனியா பஸ்நிலையத் திட்டம், நாவற்குழி உப்பளத்திட்டம் எனப் பல திட்டங்களில் குளறுபடி செய்ததோடு இன்றுவரை கல்வியிலோ, பொருளாதாரத்திலோ, அகதிகள் மறுவாழ்விலோ, இன உரிமை விடயத்திலோ எதனையும் பெரிய அளவில் சாதிக்காமல் இருப்பதில் அவருடைய முடிவெடுக்கும் திறனில் உள்ள குறைபாடு வெளிப்பட்டது. இப்படியாய் இன்னும் பலவற்றைச் சொல்லலாம்.

மேலே நான் சொன்னவைகள், அவரிடம் தலைமை தாங்கும் ஆற்றல் இல்லை என்பதற்கான ஒரு சோற்றுப்பத விடயங்கள். இவற்றிற்கான பதில் களைக்கூட நான் உங்களிடம் எதிர்பார்க்கவில்லை. உங்களிடம் நான் கேட்க விரும்புவது. இவர்தான் தலைமைக்குரியவர் எனச் சொல்லும் நீங்கள், குறித்த ஓரிரு யதார்த்தத் தலைமைப்பண்புகளை யேனும் சுட்டி, இவை இவரிடம் மட்டும்தான் இருக் கின்றன, அதனால் இவர் மட்டுமே தலைமைக்குரியவர் என்று சொல்லமுடியுமா? இதுதான் என் கேள்வி.

மீண்டும் ஒன்றை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். சுமந்திரன் மீது நான் சொன்ன குற்றங்களை, முதலமைச்சருக்கு ஆதரவானவையாய் எப்படி எடுக்கமுடியாதோ, அதே போலத்தான் முதலமைச்சர் மீது நான் சொல்லியிருக்கும் குற்றங்களையும், சுமந்திரனுக்கான ஆதரவுக்கருத்தாய் எடுக்கமுடியாது.

தனிமனிதர்களிடம் பலமும் பலவீனமும் இருப்பது தவிர்க்கமுடியாததே. என்னைப் பொறுத்தவரை தனிமனிதர்களைப் பற்றிக் கவலைப்படுவதைவிட, இனத்தைப்பற்றிக் கவலைப்படுவதையே முக்கியமெனக் கருதுகிறேன். எங்கள் எல்லாத் தலைமைகளிலும் குறைபாடுகள் இருக்கவே செய்கின்றன.

பதவி நோக்கிய விருப்பு, அண்மையில் ஏற்பட்ட அழிவுகளை மறந்து, தலைவர்களை ஒருவரோ டொருவர் மோதச் செய்திருக்கிறது. நான் நம் தலைவர்களிடம் ஒன்றே ஒன்றைத்தான் கைகூப்பிக் கேட்க விரும்புகின்றேன். சமஉரிமையை நம் இனம் பெறும் வரைக்கும், தயைகூர்ந்து எல்லோரும் ஒன்றுபட்டு 'ஏகத் தலைமை' என்ற ஒன்றை உருவாக்குங்கள். நான் சொல்வது கூட்டமைப்புச் சொன்ன அணி சார்ந்த ஏகத்தலைமையை அன்று. இன உரிமைபற்றிப் பேச மாற்று அணி என்ற ஒன்றே இல்லாத ஒருமைப்பட்ட தலைமையை. ஆகக் குறைந்தது பத்தாண்டுகளுக்கேனும், அவ் ஒற்றுமையை நம் தலைவர்கள் கடைப்பிடித்தாக வேண்டும். பேரினத்தாரோடு தமிழினத்தாரின் குரல் ஒரே குரலாய்ப் பேசவேண்டும். உலக ஆதரவோடு நம் உரிமையை நாம் பெற்றபிறகு, நீங்கள் பழையபடி கட்சிகளாய்ப் பிரிந்து ஒருவரையொருவர் விமர்சித்துக் கொள்ளலாம். அதுவரை கட்சி, ஆதரவாளர், பதவி என்ற எண்ணங்களைத் துறந்து, நீங்கள் செயற்பட்டே ஆகவேண்டும். இல்லாவிட்டால் எதிரி செய்யவேண்டிய மித்திர பேதத்தை நீங்களே செய்து, இனத்தைப் பலவீனப் படுத்தி மீண்டும் ஒருதரம் ஓர் பேரழிவை நம் இனத்தின் மீது திணிப்பீர்கள்.அங்ஙனம் நடந்தால் வரலாறு உங்களை மன்னிக்காது.

அன்பு நண்பா, ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றாய் ஊடகத்தையும் உலகம் உரைத்து நிற்கிறது. ஆகவே, உங்கள் பணி பாரியது. நீங்களும் அணிசார்ந்து இனத்தைப் பிரிக்கும் முயற்சியில் ஈடுபடக்கூடாது என்பது என் வேண்டுகோள். உங்கள் செயற்பாடுகளில் நடுநிலையின்மையின் சாயல் தெரிவதைக் கண்டு வருந்துகிறேன். தயைகூர்ந்து அந் நிலை தவிர்த்து ஒற்றுமையின் பலத்தை, நம் தலைவர்களுக்கு உரத்து உரைக்க நீங்கள் முன்வர வேண்டும். இது நட்பின் பெயரால் நான் விடுக்கும் வேண்டுகோள்.

(முற்றும்)

# புத்தாண்டுப் பலன்கள் -2018

## விருச்சிக குருவின் சஞ்சாரம் வெற்றியை வழங்கும் உங்களுக்கு



எதிரிகளைக் கண்டு அஞ்சாத கடக இராசி வாசகர்களே!

புத்தாண்டு பிறப்பதே உங்கள் இராசி நாதன் சந்திரனுக்கு உகந்த திங்கட்கிழமையில் தான். அதுமட்டுமல்ல, சந்திரன் முழுமையடையும் நாளான பௌர்ணமி. எனவே ஒளிமயமான எதிர்காலத்திற்கு உத்தரவு கொடுக்கும் விதத்திலேயே புத்தாண்டின் கிரக நிலைகள் உள்ளன.

ஆண்டின் கூட்டுத் தொகையும் '2' என்ற சந்திரனுக்குரிய எண் ஆதிக்கம் தான். எனவே உங்கள் எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறும். தடம் புரண்டு சென்ற உறவினர்கள் தானாக வந்து சேருவர். இடம், பூமி வாங்கும் யோகம் முதல் எல்லாவிதமான யோகங்களும் கிரகப் பெயர்ச்சிக்கு ஏற்ப நடைபெறும். கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

வருடத் தொடக்கத்தில் ஜென்மத்தில் ராகுவும், சப்தமத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். இரண்டுமே பாம்பு கிரகங்கள். மேஷம், ரிஷபம், கடகம் போன்ற இராசிகளில் ராகு நின்றால் நல்ல பலன்களை அள்ளி வழங்குவார். ஆண்டின் தொடக்க நாளில் உங்கள் இராசிநாதன் சந்திரன் 12 ஆம் இடத்தில் சஞ்சரித்து சூரியன், சுக்ரன், சனி, குரு போன்ற கிரங்களால் பார்க்கப் படுகிறார். எனவே, விரயத்தைச் சமாளிக்கும் விதத்தில் வரவு வந்தாலும், விரும்பும் விதத்தில் வாழ்க்கை அமைய, எண்ணங்கள் எளிதில் நிறைவேற, ராகு-கேதுக்களுக்கு உரிய சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் ஆண்டு தொடங்கிய ஓரிரு மாதங்களுக்குள் செய்வது நல்லது.

இருப்பினும் உங்களுக்கான சுய ஜாதக கட்டத்தில் உள்ள கிரகங்களின் ஆதிக்கத்தை அறிந்து, புத்தாண்டு கட்டத்தை ஒப்பிட்டு பார்த்து பலன்களை அறிந்து கொண்டு செயற்படுவது சிறப்பு தரும். சுய ஜாதகத்தின்படி யோக பலம் பெற்ற நாளில் உங்களுக்கு அனுகூலம் தரும் ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டால் அபரிமிதமான வளர்ச்சியைப் பெறலாம்.

புத்தாண்டின் தொடக்க நிலை!

புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சந்திரன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே விரயங்கள் ஏற்படுமோ என்று பயப்பட வேண்டாம். குருவின் பார்வை 9 ஆம் இடத்தில் பதிவதால், வீண் விரயங்கள் ஏற்படாமல் சுப விரயங்கள் ஏற்படும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களையும், அத்தியாவசியப் பொருட்களையும், ஆடம்பரப் பொருட்களையும் வாங்கி மகிழ்வீர்கள். தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக் கவனம் செலுத்துவீர்கள். குழந்தைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தென்படும். வெளிநாடு செல்வதற்கு அரிய வாய்ப்பு தேடிவரும். உத்தியோக மாற்றம், ஊர் மாற்றம் எதிர்பார்த்தபடி அமையும்.

குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 8,10,12 ஆகிய இடங்களில் பதிவதால், அந்த இடங்களெல்லாம் புனிதமடைந்து ஆதாயத்தை வழங்கும். இழப்புகளை ஈடுசெய்ய வாய்ப்புகள் வந்து சேரும். ஏற்றமிகு தொழில் அமையும். தொழிலில் போட்டியாக இருப்பவர்கள் விலகுவர். பொருளாதார நிலை உயர, புதிய வழி பிறக்கும். மாற்றங்கள் மகிழ்ச்சி தருவதாக அமையும். உறவில் இருந்த விரிசல் மறையும். கடன்களை அடைத்து நிம்மதியடைவீர்கள். முன்னோர் கட்டிய ஆலயங்களை முறையாகப் பேணும் வாய்ப்பு கிடைக்கும்.

6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் சனியின் பார்வை 3,8,12 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே உடன் பிறப்புகளால் ஏற்பட்ட தொல்லை அகலும். விலகிச் சென்ற சகோதரர்களோடு உறவைப் புதுப்பித்துக் கொள்ள சந்தர்ப்பங்கள் கைகூடி வரும். ஆகாரக் கட்டுப்பாட்டால் ஆரோக்கியத்தைச் சீராக்கிக் கொள்ளலாம். முக்கியப் பிரமுகர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். கடல் தாண்டிச் செல்ல, நண்பர்கள் ஒத்துழைப்பர். புதிய இடம் வாங்க வாய்ப்பு கைகூடி வரும்.

ராகு-கேதுக்களின் ஆதிக்கம் அதிகமாக இருக்கின்றது. ஜென்ம ராகுவால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கத்தான் செய்யும். அதேநேரத்தில் சப்தம ஸ்தானத்தில் கேது இருப்பதும் அவ்வளவு நல்லதல்ல. குடும்பப் பிரச்சினை கொடிகட்டிப் பறக்கும். அனுசரித்துப் போனால் ஆதாயம் உண்டு. படிப்பிற்காக வெளியூரில் தங்கியுள்ள பிள்ளைகளை, உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது.

குருப்பெயர்ச்சிக் காலம்!

ஆண்டின் தொடக்கத்தில் அர்த்தாஷ்டம குருவாக 4 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான், ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் 5 ஆம் இடத்தில் சஞ்சரித்து அற்புதமான பலன்களை வழங்கப் போகிறார். ஈடு இணையற்ற யோகம் வந்து சேரும். பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும். திட்டமிடாத காரியங்கள் கூட வெற்றி பெறும். தாமதித்த காரியங்கள், தடைப்பட்ட காரியங்கள் துரிதமாக நடைபெறும். சேமிப்பு உயரும். செலவு அதிகரிக்கும். பூமி வாங்கும் யோகம் உண்டு. பொன், பொருள் வாங்கும் யோகமும், புதல்வர்களின் திருமணங்களும் நடைபெறும்.

குருவின் பார்வை 1,9,11 ஆகிய இடங்களில் பதிவதால் முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். முயற்சித்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். முக்கிய புள்ளிகளின் பட்டியலில் இடம் பிடிப்பீர்கள். எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கும். ஏமாற்றங்கள் அகலும்.

நம்பிச் செய்த காரியங்கள் நல்லவிதமாக நடைபெறும். தெம்பும், உற்சாகமும் உள்ளத்தில் குடிகொள்ளும். உயர் பதவியில் உள்ளவர்களின் அனுகூலத்தோடு நல்ல காரியங்கள் பலவும் நடைபெறும் நேரம் இது. வாகனங்கள் வாங்கும் முயற்சி கைகூடும். வெளிநாடு செல்லும் ஆர்வத்தால், அதற்கு முயற்சி செய்வீர்கள். சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். உறவினர்களின் மனக்கசப்பு மாறும். தொழிலில் புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொள்ள முன்வருவீர்கள்.

குருவின் அதிசார காலமும், வக்ர காலமும்!

14.2.2018 முதல் 11.4.2018 வரை குரு விருச்சிக இராசியில் அதிசாரம் பெறுகிறார். 7.3.2018 முதல் 4.7.2018 வரை குரு வக்ரம் பெறுகிறார். இதற்கிடையில் பெப்ரவரி 14 ஆம் திகதி முதல் மார்ச் 9 ஆம் திகதி வரை விருச்சிக இராசிக்குள் குரு, செவ்வாய் சேர்க்கை ஏற்பட்டு குரு-மாங்கல யோகத்தை உருவாக்குகிறது. இந்த நேரத்தில் எண்ணிய எண்ணங்கள் திண்ணமாய் நிறைவேறும். இல்லத்தில் சுபச் செலவுகள் அதிகரிக்கும்.




அதிசார காலமும், வக்ர காலமும் அதிக நற்பலன்களை கொடுக்கும் காலமென்றே சொல்லலாம். உங்கள் இராசியைப் பொறுத்த வரை குருபகவான் 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதி. 6 இற்கு அதிபதி வக்ரம் பெறுவதால் அதிக முன்னேற்றம் உண்டு. பணிபுரியும் இடத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். 9 இற்கு அதிபதி வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. வாங்கிய இடத்தை விற்கும் சூழ்நிலை உருவாகும். வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும். வெளிநாட்டிற்கு வேலை தேடிச் சென்றவர்கள் வேலை கிடைக்காமல் சொந்த ஊர் திரும்பும் சூழ்நிலை உருவாகும்.

சனியின் வக்ர காலம்!

ஏப்ரல் 25 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 20ஆம் திகதி வரை மூல நட்சத்திரக் காலில் தனுசு இராசியில் சனி வக்ரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 7,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். 8 இற்கு அதிபதி வக்ரம் பெறுவது யோகம் தான் என்றாலும், 7 இற்கும் அதிபதியாக அல்லவா சனி பகவான் இருக்கிறார்.

எனவே இக்காலத்தில் வாழ்க்கைத் துணை வழியே இணக்கம் குறையலாம். நினைத்தது ஒன்று, நடப்பது ஒன்றுமாக இருக்கிறதே என்று கவலைப்படுவீர்கள். எதிர்மறைச் சிந்தனைகள் அதிகரிக்கும். எல்லை மீறிப் பழகியவர்களால் தொல்லை ஏற்படும்.

அஷ்டமாதிபதி வக்ரம் பெறுவதால் இழப்புகளை ஈடுசெய்ய வாய்ப்புகள் கைகூடி வரும். உத்தியோக மாற்றங்கள், இலாகா மாற்றங்கள் ஊதிய உயர்வோடு கூடியதாக அமையும். விற்ற இடத்திற்கு இணையாகப் புதிய இடம் வாங்கும் அமைப்பு உண்டு. பிறருக்கு பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். சனி -செவ்வாய் சேர்க்கை காலத்தில் மட்டும் அதிக விழிப்புணர்ச்சி தேவை. நண்பர்களால் ஏமாற்றங்கள். உறவினர்களால் இழப்புகள் உருவாகலாம். இக்காலத்தில் ஆலய வழிபாட்டைத் தேர்ந்தெடுத்துச் செய்வது நல்லது. அங்காரகப் பிரீதி செய்வது தங்கு தடைகளை அகற்றும்.

வளர்ச்சி தரும் வழிபாடு!

அமாவாசை திதியில் முன்னோர்களை நினைத்து வழிபடுவது நல்லது. பௌர்ணமி தோறும் மலை வலம் வருவதோடு சிவனையும், உமையவளையும, நந்தீஸ்வரரையும் வழிபட்டு வாருங்கள்.

செவ்வாய் பெயர்ச்சியும், உச்சமும்!

உங்கள் இராசிக்கு 5,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் ஜனவரி 20ஆம் திகதி முதல் மார்ச் 10ஆம் திகதி வரை தனது சொந்த வீடான விருச்சிகத்தில் சஞ்சரிக்கிறார். யோக காரகன் செவ்வாய் சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் பொழுது யோகங்கள் அதிகரிக்கும். தேக நலன் சீராகும். செல்வ வளம் பெருகும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். சென்ற ஆண்டில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். பிள்ளைகள் பெருமைக்குரிய விதத்தில் நடந்து கொள்வர்.

ஏப்ரல் 30ஆம் திகதி முதல் ஒக்டோபர் 26ஆம் திகதி வரை மகரத்தில் செவ்வாய் உச்சம் பெறுகிறார். பஞ்சமாதிபதி உச்சம் பெறுவது யோகம் தான். இந்த நேரத்தில் எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள். அசையா சொத்துகளை வாங்குவீர்கள். வீடுகட்டிக் குடியேறும் அமைப்பு உண்டு. குடும்ப முன்னேற்றம் கூடும். திட்டங்கள் அனைத்தும் நிறைவேறும் நேரம் இது.

பெண்களுக்கான சிறப்பான பலன்கள்!

புத்தாண்டின் தொடக்கத்தில் அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கம் வருகிறது. எனவே விரயங்கள் அதிகரிக்கும். குடும்பச் சுமை கூடும். பரிவர்த்தனை யோகமும், குரு-மங்கல யோகமும் இருப்பதால் தொழில் முன்னேற்றம் உண்டு. தொகை கேட்ட இடத்தில் கிடைக்கும். கல்யாண வாய்ப்புகள் கைகூடும். கட்டடத் திறப்பு விழாக்களில் கவனம் செலுத்துவீர்கள். கணவன்- மனைவிக்குள் அந்நியோன்னியம் அதிகரிக்கும். மாமியார், நாத்தனார் உறவு மகிழ்ச்சி தரும். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு குரு உங்கள் இராசியைப் பார்க்கப் போவதால் அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலைமோதும். வேண்டிய அளவிற்கு பொருளாதார நிலை உயரும். பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். உங்கள் பெயரிலேயே சொத்துகள் வாங்கும் யோகம் உண்டு. ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். வராஹி வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.


(தொடரும்)

ஜோதிடக் கலாமணி
- சிவல்புரி சிங்காரம் -

# பாரதம்

# தமிழருக்கு மட்டுமே ஆளும் தகுதி ரஜினிக்கு எதிராக போருக்கு தயார்

## சீமான் கொதிப்பு



(சென்னை)

தமிழ்நாட்டை தமிழர் மட்டுமே ஆள வேண்டும் எனவும் ரஜினிக்கு எதிராக போராட்டம் நடத்துவோம் எனவும் நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

நடிகர் ரஜினிகாந்தின் அரசியல் பிரவேசம் தமிழ் உணர்வாளர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

தமிழ்நாட்டை தமிழர் அல்லாதோர் இனியும் ஆள்வதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று கடந்த பல ஆண்டுகளாக குரல் எழுப்பி வருபவர் சீமான்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளரான இவர் ரஜினிகாந்த் அரசியலுக்கு வந்தால் கடுமையாக எதிர்ப்போம் என்று தொடர்ந்து கூறி வந்தார்.

கர்நாடகாவை சேர்ந்த ரஜினி தமிழ் மண்ணை ஆள நினைக்கக் கூடாது. அதனை ஒருபோதும் நாம் தமிழர் கட்சி அனுமதிக்காது என்று குரல் எழுப்பி வந்துள்ளார்.

இந்த நிலையில் தனிக் கட்சி தொடங்கி 234 தொகுதிகளிலும் போட்டியிடப் போவதாக ரஜினி அறிவித்துள்ளார்.

எதிர்வரும் சட்டசபை தேர்தலில் நம் படையும் களத்தில் இருக்கும் என்று கூறிய ரஜினி தனது மன்றத்தை பலப்படுத்தும் பணியிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

ரஜினியின் இந்த அரசியல் பிரவேசத்தை நாம் தமிழர் கட்சி எப்படி எதிர் கொள்ளப் போகிறது? என்பது பற்றி சீமானிடம் கேட்டபோது அவர் கூறியதாவது.

தமிழ் மண்ணில் யார் வேண்டுமானாலும் வாழலாம். நன்றாக நீடிக்கலாம். ரஜினி இன்னும் எத்தனை படங்களில் வேண்டுமானாலும் நடிக்கட்டும். நாங்கள் அதனை ரசிப்போம்.

ஆனால் பச்சைத் தமிழன் என்று கூறிக்கொண்டு தமிழ்நாட்டை ஆள நினைக்கக்கூடாது. தமிழ் மண்ணை இனி வேறு மாநிலத்தவர் ஆள்வதற்கு அனுமதிக்க மாட்டோம். எங்களை நாங்களே ஆண்டு கொள்வோம். ஆளுகிற உரிமை தமிழருக்கு மட்டுமே உண்டு.

அறிக்கை விடுவதற்கும், போராட்டம் நடத்துவதற்கும் பலர் இருக்கிறார்கள் என்று ரஜினி கூறி இருப்பது மக்கள் பிரச்சினைக்காக போராடுபவர்களை கொச்சைப்படுத்துவது போன்றதாகும். தமிழர் நலன் சார்ந்த எந்த போராட்டத்திலாவது ரஜினி தன்னை ஈடுபடுத்திக்கொண்டது உண்டா? இப்போது தமிழக மக்களை ஏமாற்றுவதற்காக தன்னை தமிழன் என்று அடையாளப்படுத்திக் கொள் கிறார்.

ரஜினி தனது சொந்த மாநிலத்தில் போய் தான் ஒரு பச்சைத் தமிழன் என்று கூறிவிட்டு அப்புறம் இங்கு வரட்டும். எந்த சூழ்நிலையிலும் அதுபோன்று அவரால் கூற முடியாது.

ரஜினியின் அரசியல் பிரவேசத்தை நாம் தமிழர் கட்சி க்டுமையாக எதிர்க்கும். தேர்தல் களத்தில் நாம் தமிழரா? ரஜினியா? என்பதை பார்த்து விடலாம். அவரோடு மோதுவதற்கு, போருக்கு தமிழ் பிள்ளைகள் தயாராகவே இருக்கிறார்கள்.

ரஜினி வெளி மாநிலத்தை சேர்ந்தவர் என்கிற எங்களது எதிர்ப்பு கோஷத்தை தமிழக அரசியல் களத்தில் வேகமாக முன்னெடுத்துச் செல்வோம். இதற்காக தமிழ் தேசிய உணர்வாளர்களையும் ஒருங்கிணைக்க திட்டமிட்டுள்ளோம். ரஜினிக்கு எதிரான 'நாம் தமிழர்' கோஷத்தால் நிச்சயம் தேர்தல் களத்தில் அவரை வீழ்த்திக் காட்டுவோம். தமிழர்களின் உரிமையை இனிமேலும் விட்டுக் கொடுக்க மாட்டோம்.

ஆந்திர காட்டுக்கு சென்றால் தமிழர்களை மட்டும் குறி பார்த்து சுடுகிறார்கள். மீன் பிடிக்க செல்லும் தமிழனும் சிங்களவர்களின் துப்பாக்கி குண்டுக்கு இரையாகிறான். தண்ணீர் கேட்டால் கர்நாடகத்தில் வாழும் தமிழனை அடிக்கிறார்கள்.

இது போன்ற அவலங்கள் எல்லாம் தீர்க்கப்பட வேண்டும். அதற்காகவே நாம் தமிழர் கட்சி களப் போராட்டத்தில் தீவிரமாகி உள்ளது. வாழ வந்தவர்கள் எல்லாம் எங்களை ஆண்டது போதும். இதற்கு மேலும் ஒருவரை அனுமதிக்க மாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-8)

# கார் வெடிகுண்...

# பொதுமக்கள்...



(டமாஸ்கஸ்)

சிரியாவின் வடமேற்கு திசையில் அமைந்துள்ள இத்லிப் பகுதியில் நடத்தப்பட்ட கார் வெடிகுண்டு தாக்குதலில் 28 பேர் உயிரிழந்துள்ளதாக சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

துருக்கி எல்லையை யொட்டிய சிரியாவின் இத்லிப் மாகாணம் போராளிகள் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. இதனால் இங்கு சிரிய அரசு படைகளும், ரஷ்ய படைகளும் போர் விமானங்கள் மூலம் தொடர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், இப்பகுதியில் சிரிய ஜனாதிபதிக்கு எதிராக செயற்பட்டு வரும் போராளிகளின் தலைமையகத்தை குறிவைத்து நடத்தப்பட்ட கார் வெடிகுண்டு தாக்குதலில் அப்பாவி பொது மக்கள் உட்பட 28 பேர் உயிரிழந்தனர் என சிரியா மனிதவுரிமைகள் கண்

# சவுதி அரேபிய பே...

# கிளர்ச்சியாளர்கள்...

(சனா)

ஏமனில் சவுதி அரேபிய போர் விமானத்தை கிளர்ச் சியாளர்கள் சுட்டு வீழ்த்தியதாக ஊடகங்களில் தெரிவித்துள்ளது.

ஏமனில் அரசுக்கு எதிராக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் போரிட்டு வருகின்றனர். தலைநகர் சனா உள்ளிட்ட முக்கிய பகுதிகளை கைப்பற்றி தன் வசம் வைத்துள்ளனர்.

## சீனாவில் பனி விழா; 34 ஜோடிகள் திருமண பந்தத்தில் இணைந்தனர்

(பீஜிங்)

வட சீனாவில் ஹார்பின் சர்வதேச பனி விழா நடைபெற்றுவரும் நிலையில், அவ்விழாவைக் கொண்டாடும் வகையில் 34 ஜோடிகள் நேற்று திங்கட்கிழமை ஒரேநேரத்தில் திருமண



பந்தத்தில் இணைந்துள்ளனர்.

சீனாவில் ஒவ்வொரு வருடமும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுவரும் ஹார்பின் சர்வதேச பனி விழா, கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது.

இந்நிலையில், 34 ஜோடிகள் ஒரேநேரத்தில் திருமண பந்தத்தில் இணைந்து மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளனர்.

சிவப்புக் கம்பளத்தின் மீதான திருமண ஜோடிகள் அழைத்துவரப்பட்டு, திருமணம்செய்து வைக்கப்பட்டது.

எதிர்வரும் பெப்ரவரியில் பனி உருகத் தொடங்கும் வரை இவ்விழா நடைபெறுமென்பதுடன், அதிகளவான சுற்றுலாப் பயணிகளையும் இவ்விழா கவர்ந்து வருகின்றது. (இ-8)

# வடகொரிய ஜனாதிபதியுடன் நேரடியாகப் பேசத்தயார்!

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவிப்பு

(வோஷிங்டன்)

வடகொரியா ஜனாதிபதியுடன் நேரடியாக பேசத்தயார் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.



வடகொரியா தொடர்ந்து அணுகுண்டுகளை வெடித்தும், கண்டம் விட்டு கண்டம் பாயும் ஆற்றல் கொண்ட ஏவுகணைகளை சோதித்தும் வருவது அமெரிக்காவுக்கு எரிச்சலை ஏற்படுத்தி உள்ளது. அந்த நாட்டின் மீது ஐ.நா. பாதுகாப்புச் சபையிலும் தொடர்ந்து பொருளாதார தடைகளை விதிக்க அமெரிக்கா நடவடிக்கை எடுத்தது.

இதன் காரணமாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கும், வடகொரியாவின் ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுக்கும் இடையே வார்த்தை மோதல்கள் நடைபெற்று வந்தன.

இந்த நிலையில் மேரிலாந்து மாகாணத்தின் கேம்ப் டேவிட் என்ற இடத்தில் உள்ள ஜனாதிபதி ஓய்வு மாளிகையில் நேற்று முன்தினம் ட்ரம்ப் நிருபர்களை சந்தித்தார். அப்போது அவரிடம், " நீங்கள் இப்போது கிம் ஜாங் உன்னிடம் தொலைபேசியில் நேரடியாக பேசுவீர்களா?" என்று நிருபர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர், " நிச்சயமாக பேசத்தயார். பேச்சு வார்த்தையில் எப்போதுமே நான் நம்பிக்கை வைத்துள்ளேன். தற்போது அவர்கள் குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் பேச்சு நடந்த முன்வந்துள்ளனர். இது மிகப்பெரிய தொடக்கம். நமக்கு இதில் தொடர்பு இல்லை என்று சொன்னால், அவர்கள் இப்போது குளிர்கால ஒலிம்பிக் பற்றி பேச மாட்டார்கள். நான் குழப்பத்தில் இல்லை என்பதை அவர் அறிவார்" என பதில் அளித்தார்.

மேலும், "வெளியுறவு அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சனுடன் கலந்து பேசி நல்லதொரு அமைதித் தீர்வினை காண வேண்டும். இன்னும் பலருடன் கலந்து பேச வேண்டும். இதில் நல்லது நடந்தால் அது ஒட்டுமொத்த மனித இனத்துக்கே மிகப்பெரிய செயலாக அமையும்" என்றும் ட்ரம்ப் தெரிவித்தார். (இ-7)

# பயங்கரவாதத்... பாகிஸ்தான் நி...

(வோஷிங்டன்)

பயங்கரவாதத்திற்கு புகலிடம் அளிப்பதை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும் என்பதே ட்ரம்ப் விருப்பம் என சி.ஐ.ஏ. தெரிவித்துள்ளது.

பயங்கரவாதம் அமெரிக்காவிற்கு பெரும் எச்சரிக்கையாக உள்ளது, பயங்கரவாதிகளின் பாதுகாப்பு புகலிடங்கள் அளிப்பதை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும் என அந்நாட்டிடம் டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார் என அமெரிக்காவின் புலனாய்வு பிரிவான சி.ஐ.ஏ. தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் தலிபான் மற்றும் ஹக்கானி நெட்வேர்க் போன்ற பயங்கரவாத இயக்கங்கள் மீது பாகிஸ்தான் நடவடிக்கையை எடுக்க தவறிவிட்டது என்றும் அந்த பயங்கரவாத இயக்கங்களின் பாதுகாப்பு புகலிடங் களை அழிக்கவும் பாகிஸ்தான் தவறி விட்டது என அந்நாட்டுக்கு வழங்க விருந்த 2 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை டொனால்ட் ட்ரம்ப் அரசு நிறுத்திவிட்டது. பாகிஸ்தானுக்கு வழங்கிய அனைத்து பாதுகாப்பு உதவிகளையும் அமெரிக்கா அதிரடியாக இரத்து செய்துவிட்டது.

இப்போது அமெரிக்காவின் புலனாய்வு பிரிவான சிஐஏ, பயங்கரவாதத்திற்கு புகலிடம் அளிப்பதை பாகிஸ் தான் நிறுத்த வேண்டும் என்பதே டொனால்ட் ட்ரம்ப் விருப்பமாகும் என கூறியுள்ளது.

# வெளிநாடு

# ண்டுத் தாக்குதலில்
# ள் உட்பட 28 பேர் பலி



காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலை நடத்தியது யார்? என்பது பற்றி எந்த தகவலும் வெளியிடப் படவில்லை. இந்த தாக்குதலில் சுமார் 10 பேர் காயமடைந்துள்ளதாக வும் கூறப்படுகிறது.

தாக்கு தல் நடத்தப்பட்ட கட்டடத்தை ஒட்டி இருந்த மற்ற கட்டடங்களும் இடிந்து விழுந்தன.

காய மடைந்தவர்களில் சிலரது நிலைமை மோச மாக இருப்பதால் பலி எண்ணிக்கை இன்னும் அதிகரிக்க லாம் என அஞ்சப்படுகிறது. (இ-8)

## பொலிஸார் - பொதுமக்கள் இடையே
# மெக்சிக்கோ கடற்கரை விடுதியில் துப்பாக்கிச்சூடு- 11 பேர் உயிரிழப்பு

(மெக்சிக்கோசிட்டி)

மெக்சிகோவில் உள்ள பிரபல கடற்கரை விடுதியில் பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையே நடந்த துப்பாக்கிச்சூட்டில் 11 பேர் உயிரிழந்தனர்.

மெக்சிக்கோவின் அகபுல்கோ நகரில் உள்ள ஒரு பிரபலமான கடற்கரை விடுதியில் ஞாயிறு விடுமுறையையொட்டி பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சியில் பலர் கலந்துகொண்டுள்ளனர். அப்போது சிலர் அப்பகுதியில் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டிருந்த உள்ளூர் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.



இந்த வாக்குவாதம் தீவிர மடைந்ததையடுத்து பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். இந்த துப்பாக்கிச் சூட்டில் 8 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

இதையடுத்து இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் நகருக்குள் சென்று துப்பாக்கிச்சூடு நடத்தியவர்களை சரணடையுமாறு எச்சரித்துள்ளனர். ஆனால் அவர்கள் சரணடைய மறுத்ததையடுத்து இராணுவத்தினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் உள்ளூர் பொலிஸார் 3 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். (இ-8)

# போர் விமானத்தை
# ள் சுட்டு வீழ்த்தினர்


இதற்கிடையே சவுதி அரேபிய அரசு ஏமனுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. ஹவுதி கிளர்ச்சியாளர்களை அடக்கி ஒடுக்க ஏமனில் அந்நாட்டு படைகள் முகாமிட்டுள்ளன.

இந்த நிலையில் சதா மாகாணத்தில் முகாமிட்டிருந்த சவுதி அரேபிய போர் விமானம் ஒன்று நேற்று முன்தினம் மாலை விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அந்த போர் விமானம் ஹவுதி கிளர்ச்சியாளர்களால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. இத்தகவலை ஹவுதி கிளர்ச்சியாளர்களின் அதிகாரபூர்வ ஊடகம் வெளியிட்டது.

இதனால் மத்திய பகுதியில் பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டுள்ளது. ஆனால் இத்தகவலை சவுதி அரேபியா மறுத்துள்ளது. போர் விமானம் விபத்துக்குள்ளானதற்கு தொழில்நுட்பகோளாறே காரணம் என தெரிவித் துள்ளது.

மேலும் விபத்தில் சிக்கிய விமானத்தின் விமான களை மீட்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. அதில் இருந்த 2 விமானிகளும் உயிர் தப்பியுள்ளனர் என்றும் சவுதி அரேபியா தெரிவித்துள்ளது. சமீப காலமாக ஏமன் எல் லையில் இருந்து சவுதி அரேபியாவின் முக்கிய தளங் களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் ஹவுதி கிளர்ச்சியாளர்களால் போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டிருந்தால் கடும் விளைவுகள் ஏற்படும் என நிபுணர் கள் எச்சரித்துள்ளனர். (இ-8)



# த்திற்கு புகலிடம் அளிப்பதை
# நிறுத்த வேண்டும்- சி.ஐ.ஏ



அமெரிக்காவிற்கு ஆபத்தை விளைவிக்கும் பயங்கரவாதிகள் பாகிஸ்தானில் நிலைகொண்டுள்ளனர், அவர்களுக்கு பாகிஸ்தானியர்கள் தொடர்ந்து பாதுகாப்பு கொடுத்து வருகிறார்கள். புகலிடம் பாதுகாப்பாக வழங்கப்படுகிறது. பயங்கரவாதத்திற்கு தொடர்ந்து புகலிடம் அளிப்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது என நாங்கள் எங்களால் முடிந்தவரையில் பாகிஸ்தானியர்களுக்கு தகவல்களை தெரிவித்துவிட்டோம். எனவே, நிபந்தனையின் பெயரில் அவர்களுக்கு உதவியை வழங்கி வந்தோம். அவர்கள் பயங்கரவாத பிரச்சினையை சரிசெய்தால், அவர்களுடன் நட்புறவை தொடர்வதில் எங்களுக்கும் மகிழ்ச்சியாகும்.

நாங்கள் அமெரிக்காவை பாதுகாக்க நடவடிக்கையை எடுக்கிறோம்." என சிஐஏயின் தலைவர் மைக் பாம்போ தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்ட நிதியை நிறுத்தியது தொடர்பான கேள்விக்கு விளக்கம் அளித்து பேசிய மைக் பாம்போ, "அமெரிக்காவிற்கு அச்சுறுத்தலாக விளங்கும் பயங்கரவாதத்திற்கு பாதுகாப்பு புகலிடம் கொடுப் பதை பாகிஸ்தான்நிறுத்த வேண்டும் என்பதே டொனால்ட் ட்ரம்ப் விருப்பமாகும், பயங்கரவாதத்திற்கு முற்றுப்புள்ளி என்பதே முக்கிய நோக்கமாகும்,"என தெரிவித்தார். (இ-7)

## ஹபீஸ் சயீத்தின் ஜமாத் உத்தவா உள்ளிட்ட
# 72 பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி வழங்க பாகிஸ்தான் அரசு தடை

(இஸ்லாமாபாத்)

மும்பை தாக்குதல் பயங்கரவாதி ஹபீஸ் சயீத்தின் ஜமாத் உத்தவா உள்ளிட்ட 72 பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி வழங்க தடை விதித்து பாகிஸ்தான் அரசு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

உலகளாவிய பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் அமெரிக்காவின் கூட்டாளியாக இருந்து வரும் பாகிஸ்தான், அதற்காக அந்த நாட்டிடம் இருந்து பெரும் நிதியுதவி பெற்று வந்தது. ஆனால், பாகிஸ்தான் தனது மண்ணில் இருந்து கொண்டு செயற்பட்டு வருகிற ஹக்கானி, அல் கொய்தா, தலிபான் போன்ற பயங்கரவாத அமைப்புகள் மீது பாரபட்சமற்ற நடவடிக்கையை எடுக்கவில்லை என்று அமெரிக்கா குற்றம் சாட்டி வந்தது.

இந்த நிலையில், பாகிஸ்தானில் இருந்து மூளையாக செயற்பட்டு, மும்பை தாக்குதல்களை அரங்கேற்றிய சர்வதேச பயங்கரவாதி ஹபீஸ் சயீத்தின் ஜமாத் உத்தவா அமைப்பு, லஷ்கர் இ தொய்பா, மசூத் அசாரின் ஜெய்ஷ் இ முகமது உள்ளிட்ட 72 அமைப்புகளுக்கு நிதி அளிப்பதற்குதடை விதித்து அந்த நாட்டு அரசு அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது தொடர்பான உத்தரவில், "பாகிஸ்தான் பயங்கரவாத தடுப்பு சட்டம் 1997இன் கீழும், 1948இம் ஆண்டின் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் சட்டத்தின்படியும், தடை செய்யப்பட்ட அமைப்புகள், கண்காணிப்பு வளையத்துக்குள் வைக்கப்பட்டுள்ள அமைப்புகளுக்கு நிதி வழங்குவது சட்டப்படி குற்றம் ஆகும். இந்த அமைப்புகளுக்கோ, அவற்றுடன் தொடர்புடைய தனி நபர்களுக்கோ யாரேனும் நிதி உதவி வழங்கினால், அவர்களுக்கு 10 ஆண்டு வரை சிறைத்தண்டனையோ அல்லது ரூ.1 கோடி அபராதமோ அல்லது இரண்டுமோ கூட விதிக்கப்படும். அவர்களின் அசையும் சொத்துக்களும், அசையா சொத்துக்களும் பறிமுதல் செய்யப்படும்" என்று கூறப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு, பாகிஸ்தானில் இருந்து வெளியாகிற அனைத்து முக்கிய செய்தித்தாள்களிலும் விளம்பரமாக வெளியிடப்பட்டுள்ளது.



மேலும் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை செயலாளர் டெஹ்மினா ஜன்ஜுவா, பாகிஸ்தான் வெளியுறவு கொள்கை விவகாரங்கள் குறித்து உரை ஆற்றும் போது, "அமெரிக்காவுடனான உறவை பாகிஸ்தான் முடிந்தவரைக்கும் தொடரும். அமெரிக்காவுடனான உறவு முக்கியமானது. அமெரிக்கா உலகவல்லரசாக திகழ்வதோடு மட்டுமன்றி, இந்த பிராந்தியத்தில்தன் இருப்பைக்கொண்டுள்ளது" என்று குறிப்பிட்டிருப்பது முக்கியத்துவம் பெறுகிறது.

ஆனால் பயங்கரவாத அமைப்புகளுக்கு நிதி வழங்க பாகிஸ்தான் விதித் துள்ள தடை, ஹபீஸ்சயீத்துக்கு பெரும் அதிர்ச்சியை அளித்துள்ளது.

தனது அமைப்புக்கு நிதி வழங்கினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்துள்ள பாகிஸ்தான் அரசின் இராணுவ அமைச்சர் குர்ரம் தஸ்தகீரிடம் ரூ.10 கோடி இழப்பீடு கேட்டு அவர் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

சட்டத்தரணி ஏ.கே. தோகர் அனுப்பியுள்ள நோட்டீசில், "இந்த நோட்டீஸ் கிடைத்த 14 நாட்களுக்குள் நீங்கள் (குர்ரம் தஸ்தகீர்) எனது கட்சிக்காரரிடம் (ஹபீஸ் சயீத்) எழுத்துபூர்வமாக மன்னிப்பு கோர வேண்டும்" என்றும் கூறப்பட்டுள்ளது. (இ-8)

# கடந்த ஆட்சியிலும் மோசடி?

## மனம் திறந்தார் மகிந்த

(கொழும்பு)

மத்திய வங்கியில் இடம் பெற்ற பாரிய முறி மோசடி கடந்த ஆட்சியிலும் இடம் பெற்றிருக்கலாம் என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொது செயலாளரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சூரியவெவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"மத்திய வங்கியில் இடம் பெற்ற பாரிய முறி மோசடியை நானே முதலில் வெளிகொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டேன். அதனை நான் மேற்கொள்ளாதிருந்தால் இவ்வாறான ஒரு பிரச்சினை நாட்டிற்கு தெரியவந்திருக்காது. இவ்வாறான தொரு பிரச்சினை தற்போதைய ஆட்சியில் மாத்திரமல்ல. கடந்த ஆட்சியிலும் இடம் பெற்றிருக்கலாம்.

ஆனால் அப்போதைய சூழ்நிலையில் அதனை வெளிக்கொண்டு வருவதற்கோ, அதனை எதிர்ப்பதற்கோ எவரும் முன்னிற்கவில்லை. காரணம் அவர்களின் நிலை, கேள்விக்குரியானது. இவ்வாறு இருக்கையில் தற்போது ஜனாதிபதி ஆணைக்குழு என்ற ஒன்று அமைக்கப்பட்டு குற்றங்கள் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ஆணைக்குழுவினை அமைக்கும் போது பலர் அதனை வேண்டாம் என்றே கூறிவந்தனர். ஆனால் இன்று குற்றங்கள் வெளிவர தொடங்கியுள்ளன. இதற்காக ஜனாதிபதி மேற்கொண்ட முயற்சி மற்றும் தற்போது அவரின் செயற்பாடுகள் தொடர்பில் அவருக்கு பாரிய சவால்கள் ஏற்பட்டுள்ளன" என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# மகிந்த ஆட்சியில் அபிவிருத்தி என்ற பெயரில் மக்களின் பணமே சுரண்டப்பட்டது- சந்திரிகா

(கொழும்பு)

கடந்த ஆட்சியில் அபிவிருத்தி என்ற பெயரில் மக்களின் பணமே சுரண்டப்பட்டது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்தனகல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைக் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த அரசாங்கத்தின் போது அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டதாக சிலர் குறிப்பிட்டாலும், அதன் ஊடாக மக்கள் பணமே சுரண்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து தற்போதைய நல்லாட்சியில் ஊழலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தனர். ஆனால் மகிந்த அவரது ஆட்சியில் ஊழலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தாரா?



பிணை முறி மோசடி விவகாரத்தில் பிரதமர் பதவியை வழங்கியதற்காக பொறுப்பு-கூற வேண்டும் என்ற போதிலும். அவர் ஊழலில் ஈடுபடவில்லை. ஆகையால் அவர் ஏன் பதவி விலக வேண்டும்" என கேள்வி எழுப்பினார். (இ-7)

# 500 குளங்களைப் புனரமைக்கிறது இராணுவம்

(திருமலை)

இராணுவம் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 500 நடுத்தர அளவுடைய குளங்களை புனரமைப்புச் செய்யவுள்ளது.

இராணுவத்தின் களப் பொறியியல் பிரிவு குளங்களைப் புனரமைக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

கடந்த 2016ஆம் அண்டு ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 16 குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளதாக இராணுவம்தெரிவித்துள்ளது.

இராணுவத்தின் மூன்றில் ஒரு பகுதி ஆளணியை நாட்டின் அபிவிருத்தி வேலைக்குப் பயன்படுத்தும் திட்டம் ஒன்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



இதற்கமையவே, குளங்களைப்புனரமைக்கும்வேலைகளில் இராணுவம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பின்தங்கிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளில் அடுத்த 5 ஆண்டுகளில் 100 ஆசிரியர் விடுதிகளை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. (இ-7)

# முறி மோசடியுடன் தொடர்புடையவர்கள் அரசாங்கத்திலேயே உள்ளனர் - மகிந்த

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் பிணை முறி விநியோகத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் தற்போதைய அரசாங்கத்திலேயே உள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

"தற்போதைய அரசாங்கம் ஆரம்பித்த காலம் முதல் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன.

அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே பிரச்சினைகள் ஏற்படுகின்றன. விவசாயிகளுக்கு தேவையான உரம் தகுந்த நேரத்தில் கிடைப்பதில்லை.

இவ்வாறானதொரு போக்கிலேயே அரசாங்கம் பயணிக்கின்றது.

மத்திய வங்கியின் முறி விநியோகத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் அரசாங்கத்திலேயே அங்கம் வகிக்கின்றனர்.



இதனை ஜனாதிபதி தெளிவாக எடுத்துரைத்துள்ளார்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இரு பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கு இடமாற்றம்

பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் இருவருக்கு உடன் அமுலுக்கு வரும் வகையில் தேர்தல்கள் ஆணைக் குழுவின் அனுமதியுடன் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. பிரதிப் பொலிஸ்மா அதிபர் பி. முனசிங்கவும், பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியலால் தஸநாயக்கவுமே இவ்வாறு மாற்றப்பட்டுள்ளனர்.

விஷேட பாதுகாப்பு பிரிவுக்கு பொறுப்பாக இருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் பீ. முனசிங்க, சப்ரகமுவ மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபராகவும் தகவல் தொழில்நுட்ப பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியலால் தஸநாயக்க விஷேட பாதுகாப்பு பிரிவுக்கும் இவ்வாறு இடமாற்றப்பட்டுள்ளனர். பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய, பொலிஸ் ஆணைக்குழு மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதியின் பிரகாரம் இந்த இடமாற்றம்வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### நம்மை நாமே நேசிக்க வேண்டாமா?

சிலருக்கு தங்கள் பெயர் மீதே வெறுப்பு. சிலருக்குத் தங்கள் தோற்றத்தின் மீது வெறுப்பு. இன்னும் பலருக்கு தங்களுக்கு அமைந்த வாழ்க்கையின் மீதே வெறுப்பு. மேலும் சிலருக்குத் தங்கள் செயல்களின் மீதே வெறுப்பு.

இத்தகைய வெறுப்புகளை வளர்த்துக் கொண்டவர்களுக்கு வாழ்வு இனிக்காது. ஒவ்வொரு கட்டத்திலும் அது கசக்கவே செய்யும். இவர்கள் அடிக்கடி நொந்து போய்ப் பேசுவார்கள். எத்தகைய அபத்தமான பெயராக இருந்தாலும் முதலில் அவர்கள் தங்கள் பெயரை நேசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

பலபேர் எழுதுகிறார்கள். நான் கறுப்பாக இருக்கிறேன் ; குள்ளமாக இருக்கிறேன்; முடி கொட்டிப்போய் அசிங்கமாக இருக்கிறேன்; பார்க்கவே நான் அருவருப்பாக இருக்கிறேன்; வாழவே வெறுப்பாக இருக்கிறது என்று.

இவர்களுக்கெல்லாம் நான் சொல்லக்கூடிய பதில் ஒன்றுதான்.

இயற்கையாக அமைந்துவிட்ட குறைகளில் பாதிக்கு மேற்பட்டவை மாற்றிக் கொள்ளக்கூடியவையே. இன்றைய நவீன மருத்துவமும் விஞ்ஞான வளர்ச்சிக ளும் இந்த மாற்றங்களுக்குப் பெரும் துணையாக இருக்கப்போகின்றன.

சில குறைகள் மாற்றவே இயலா தவை. இத்தகைய குறைபாடுகளை நாம் சகித்துக்கொண்டும் பொறுத்துக் கொண்டும் ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். வேறு வழியில்லை.

இயற்கை தந்த பரிசுகள் அவை. இன்முகத்துடன் அவற்றை ஏற்றுக்கொள்ளுங்கள். மாற்ற முடியாத விடயங்களுக்கு நாம் பழகிக் கொள்வதுதான் சிறந்தது. இல்லாவிட்டால் இந்த மன அரிப்பு நம்மை நிம்மதியாக வாழவிடாது.

உடற்குறை உள்ளவர்கள் உள்ளத்தால், அறிவாற்றலால் அவற்றை ஈடுகட்டி விடமுடியும். உலக வரலாற்றை எடுத்து கொண்டால் உடற்குறை உள்ளவர்களின் சாதனைகளுக்குத் தாம் அதிக முக்கியத்துவம். சாதாரண மனிதர்களின் சாதனைகள் அதற்கப்புறம்தான் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

எல்லோரும் மன்மதர்களாகவும் ரதிகளாகவும் பிறந்து விடுவதில்லை. இவர்கள் உள்ளத்தால் எப்படி உயர முடியும். சாதனைகளில் எப்படி உயர முடியும். அதன் மூலம் நம் குறைகளை எப்படிக் காலின் கீழே போட்டு அழுத்திக்கொள்ளமுடியும் என்று சிந்திக்கத் தொடங்கவேண்டும் . ஒன்றை மற்றொன்றால் அமுக்கிவிட (Off set) எடுக்கும் முயற்சி அபாரமான பலன்களைத் தரும்.

சிவப்புத் தோலால் அசிங்கங்களைப் போர்த்தியிருக்கும் சிலர், விரைவில் இனங் காணப்படுவார்கள். உள்ளத்தால் பொலிவு பெற்றால் உடற்பொலிவு பெரிதல்ல. இந்த உண்மைகளை உணர்ந்து கொண்டால் நம்மை நாம் விரும்பத் தொடங்கிவிடுவோம்.

**லேனா தமிழ்வாணன்**

# அனைத்து இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு வருமான மார்க்கமே நல்லாட்சியின் இலக்கு

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

அனைத்து இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்து, சிறந்த வருமான மார்க்கத்தை வழங்குவதே நல்லாட்சி அரசாங்கத்தின் இலக்கு என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ராஜகிரியவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மேம்பாலம் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் உட்கட்டுமான வசதிகளை அதிகரிக்கும் வேலைத் திட்டங்களுள், மேம்பாலம் அமைப்பதற்கு அரசாங்கம் முக்கிய இடத்தை வழங்குவதாககவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

534 மீற்றர் நீளம் கொண்ட இந்த மேம்பாலம் மேல்மாகாணத்தில் உள்ள மீக நீளமான மேம்பாலமாகவும் கருதப்படுகிறது.

சுமார் 4 ஆயிரத்து 700 மில்லியன் ரூபா செலவில் இந்த மேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

இதன் ஊடாக ரா கிரிய மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் நிலவும் பாரிய வாகன நெரிசலுக்கு தீர்வு ஏற்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (இ-7)

# வரலாற்று சிறப்பு மிக்க மேம்பாலம் ஜனாதிபதி, பிரதமரால் திறந்து வைப்பு







(கொழும்பு)

வரலாற்று சிறப்புமிக்க 534 மீற்றர் நீளமுடைய இராஜகிரிய சந்தியில் நிர்மாணிக்கப்பட்ட மேம்பாலம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரால் நேற்றுக்காலை மக்கள் பாவனைக்காக உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

நீண்ட காலமாக பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் இராஜகிரிய பிரதேசத்தில் காணப்படும் வாகன நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் இராஜகிரிய சந்தியில் குறித்த பாலம் நிர்மாணிக்கப்பட்டு வந்த நிலையில் குறித்த மேம்பாலம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

குறித்த பாலத்தின் நிர்மாணப்பணிகள் இவ்வருட இறுதியிலேயே நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பொதுமக்களின் அசௌகரியங்களை கருத்திற்கொண்டு அதன் நிர்மாணப்பணிகளை 11 மாதங்களுக்கு முன்னரே நிறைவு செய்ய ஜனாதிபதி ஆலோசனை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தது.

ஸ்பெயின் நாட்டு நிறுவனமும் உள்நாட்டு நிறுவனமும் இணைந்து 2016 இல் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட இந்த மேம்பாலத்திற்கான மொத்த செலவு 4,700 மில்லியன் ரூபாய்க ளாகும்

நான்கு வாகன ஓடுபாதைகளை கொண்டுள்ள இந்த மேம்பாலத்தின் நீளம் 534 மீற்றர்களாக காணப் படுவதுடன் 150 மீற்றர் நீள முடைய பிரவேச மார்க்கத்தையும் இது கொண்டுள்ளது.

இதனுடன் இணைந்ததாக இதனைச் சூழவுள்ள பல வீதிகளும் அபிவிருத்தி செய்யப்படுவதுடன் நாரஹேன்பிட்டி நோக்கிப் பயணிப்பதற்கான மாற்றுவழிப் பாதையும், புத்கமுவ நோக்கி பயணிப்பதற்கான மூன்று வாகன ஓடுபாதைகளைக் கொண்ட வீதியும் இதனூடாக அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

உயர் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பொறியியல் நியமங்களுக்கு அமைவாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த மேம்பாலம் இரும்பின் மீது கொங்றீட் பரவி இலங்கையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முதலாவது மேம்பாலமாகவும் இலங்கையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மிக அலங்காரமான மேம்பாலமாகவும் வரலாற்றில் இடம்பெறுகின்றது.

நாளொன்றுக்கு ஒரு இலட்சத்துக்கும் அதிக எண்ணிக்கையான வாகனங்கள் பயணிக்கும் இராஜகிரிய சந்தி நாட்டில் அதிக வாகன நெருக்கடி காணப்படும் சந்தியாகவும் கருதப்படுகிறது.

இவ்வாறு அதிக வாகன நெருக்கடி காணப்படும் சந்தர்ப்பங்களில் அப்பாதையினூடாக பயணிக்கும் வாகனங்களின் வேகம் மணிக்கு இரண்டு கிலோமீற்றர்கள் அளவில் மிக குறைவாக காணப்படுவதுடன் இந்த மேம்பாலம் திறந்து வைக்கப்பட்டதன் பின்னர் இராஜகிரிய பிரதேசத்தை சுற்றியுள்ள பாதைகளில் காணப்படும் அதிக வாகன நெருக்கடி இல்லாது போவதனூடாக வாகனங்களின் வேகம் தற்போதைய வேகத்தைப் போல் 8 மடங்காக அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பேண்தகு அபிவிருத்தியின் பயன்களை நாட்டுக்கு பெற்றுக்கொடுத்து, ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தின் கீழ் தற்போதைய அரசாங்கத்தினால் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி செயற்றிட்டங்களுள் வீதி அபிவிருத்தியுடன் இணைந்ததாக இடம்பெறும் மேலும் ஒரு விசேட செயற்றிட்டமாகவும் நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் செயற்றிட்டத்தின் விசேட சந்தர்ப்பமாகும் (இ-7)

## இலங்கையில் நரித்தலைகளுடன் இந்தியர்கள்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து சுற்றுலா விசா மூலம் இலங்கைக்கு வருகை தந்து மாந்திரீகத்தில் ஈடுப்பட்ட 26 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த சில தினங்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள இவர்கள் மக்களின் பிரச்சினைகளை மந்திரத்தின் மூலம் தீர்த்து வைப்பதாகவும், மக்களை பழிவாங்குவதற்காக மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படும் செய்வினைகளை அகற்றுவது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுப்பட்டு வந்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த தென்னிந்தியர்களை சோதனைக்குட்படுத்திய போது அவர்களிடம் மாந்திரீகத்திற்கு பயன்படுத்தப்படும் நரித்தலைகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-7)

## தேர்தல் சட்டங்களை மீறியதாக 24 மணிநேரத்தில் 11 பேர் கைது

(கொழும்பு)

தேர்தல் சட்ட திட்டங்களை மீறியமை தொடர்பில் நேற்று முன்தினம் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் 11 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த காலப்பகுதிக்குள் பொலிஸார் முன்னெடுத்த 6 சுற்றி வளைப்புக்களில், 5 நடவடிக்கைகளின் போது இந்த 11 பேரும் கைது செயய்ப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன்குணசேகர தெரிவித்தார்.

கட்டான பொலிஸ் பிரிவில் 3 பேரும், பல்லேகலை பொலிஸாரால் மூவரும், கண்டி பொலிஸாரால் ஒருவரும், வரக்காபொல பொலி ஸாரால் மூவரும், கொச்சி கடை பொலி ஸாரால் ஒருவரு மாக இவ் வாறு கைது செய்ய ப்பட்டுள்ளனர்.

இதனிடையே இந்த 24 மணி நேரத்தில் பொலிஸாருக்கு தேர்தல்கள் தொடர்பில் 8 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

கடந்த 2017 டிசெம்பர் 9 ஆம் திகதி வேட்பு மனு தாக்கல் செய்ய ஆரம்பிக்கப்பட்ட தினம் முதல் இது வரை மொத்த மாக தேர்தல்கள் தொடர்பில் 124 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பதிவாகியுள்ள சுற்றி வளைப்புக்கள் 35, முறைப்பாடுகள் 68 உள்ளிட்ட 103 சம்பவங்கள் தொடர்பில் இந்த 124 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் பல சந்தேக நபர்களைக் கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். (இ)

# கூந்தல் பிரச்சினைகளுக்கான காரணங்களும் தீர்வும்



கூந்தல் உதிர்வது, உடைவது, நரைப்பதற்கு ஊட்டச்சத்துக் குறைபாடுகள் முக்கிய காரணம். அவற்றைத் தெரிந்து கொண்டால், உணவின் மூலமே கூந்தல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம்.

சில வகையான விற்றமின் குறைபாடுகள் கூந்தல் வளர்ச்சி மாற்றத்தில் பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடியவை. அந்த அறிகுறிகள் முதலில் முடி உதிர்வில்தான் தெரியும். பிறகுதான் உடல் அறிகுறிகளில் தெரிய ஆரம்பிக்கும். கூந்தல் உதிர்வது, உடைவது, நரைப்பது என எல்லாவற்றுக்கும் ஊட்டச்சத்துக் குறைபாடுகள்தான் முக்கிய காரணம்.

அவற்றைத் தெரிந்து கொண்டால், உணவின் மூலமே கூந்தல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம். அதற்கான வழி முறைகளை பார்க்கலாம்.

நம்முடைய கூந்தல் உடையாமலும் ஆரோக்கியமாகவும் இருக்க நிறைய ஊட்டச்சத்துகள் அவசியம். அவற்றில் முக்கியமானது துத்தநாகம். இதில் குறைபாடு ஏற்பட்டால் Premature Hair Loss என்பது ஏற்படும். பொதுவாக இள வயதில் உள்ள கூந்தல் அடர்த்தி, வயதாக, ஆக குறைவது இயல்பு. ஆனால், இள வயதில் கூந்தல் மெலிவது, உடைவது, வழுக்கை விழுவது போன்ற பிரச்சினைகள் இருந்தால், அவர்கள் இரத்தப் பரிசோதனை செய்து பார்த்து துத்தநாகக் குறைபாடு இருக்கிறதா? என உறுதி செய்து கொள்ளலாம்.

நமது கூந்தலின் ஆரோக்கியத்துக்கு இரண்டு விடயங்கள் நன்றாக இருந்தாலே போதும். ஒன்று ஒட்சிசன். இன்னொன்று எல்லா ஊட்டச்சத்துகளுடன் கூடிய முறையான இரத்த ஓட்டம். ஒட்சிசனை இரத்தத்தில் கொண்டு போவது இரும்புச்சத்து. நாம் உயிர் வாழ மட்டுமின்றி, கூந்தல் ஆரோக்கியத்துக்கும் அடிப்படையான ஒட்சிசன் சப்ளை சரியாக இருக்கவேண்டுமானால் இரும்புச் சத்து அதற்கு மிகமிக முக்கியம்.

அசைவம் சாப்பிடுகிறவர்களுக்குத்தான் இரும்புச்சத்து போதுமான அளவு கிடைக்கும் என ஒரு கருத்து நிலவுகிறது. தாவரங்களில் இருந்து கிடைக்கும் உணவுகளில் அசைவத்துக்கு இணையாக இரும்புச்சத்து கிடைப்பதாக சமீபத்திய ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. அசைவ உணவுகளின் மூலம் உடலுக்குச் சேர்கிற கொழுப்பானது கொலாஜனை குறையச் செய்துவிடும்.

அசைவ உணவுகளில் மட்டன், சிக்கன், முட்டை போன்றவற்றுக்கு இது பொருந்தும். மீன் மட்டும் விதிவிலக்கு.

மீனில் கிடைக்கிற ஒமேகா 3 கொழுப்பு அமிலம், ஃபோலிக் அமிலம் இரண்டுமே கூந்தல் மற்றும் சரும ஆரோக்கியத்துக்கு உதவக் கூடியவை. எனவே, கொலாஜனை குறைக்காத இரும்புச்சத்து நம் உடலில் சேர வேண்டும் என்றால் தாவர உணவுகளே சிறந்தவை. இவற்றில் முதலிடம் பீட்ரூட்டுக்கு. இரும்புச்சத்து குறைபாடு இருப்பதாகவும் கூந்தல் வளர்ச்சி பாதிக்கப்படுவதாகவும் நினைப்பவர்கள் தினமும் பச்சையான பீட்ரூட் ஜூஸை எடுத்துக் கொள்வது நல்லது. இது தவிர வெல்லம், முருங்கைக்கீரை, பசளைக் கீரை போன்றவற்றை எடுத்துக் கொள்ளலாம். இரும்புச் சத்து குறையும் போது முடி மெலிய ஆரம்பிக்கும். (இ)




# ஆரோக்கியம் தரும் ஏரோபிக் உடற்பயிற்சி



தேவையற்ற சதையை ஒழிப்பது போலவே ஒல்லியாய் இருப்பவரின் உடலில் போதுமான தசைகள் அமைய ஏரோபிக் உடற் பயிற்சி உறுதுணை செய்யும்.

உடல் எடை அளவோடு அமையும்.

மூங்கிலைப் போன்ற உருண்டு திரண்ட தோல்கள் உருவாகும்.

சுறுசுறுப்போடு இயங்கும் ஆற்றலையும், ஆரோக்கியத்தையும் தரும். இரத்த ஓட்டத்தை பெருக்கி உடலை வளம் பெறச் செய்யும். அடிக்கடி ஏற்படும் தலைவலி அறவே நீங்கும்.

இத்தனைக்கும் மேலாக எடுப்பும், சிறப்பும் மிகுந்த உடலமைப்பைத் தந்து, வாழ்வின் இன்பத்தை அனுபவிக்கத் தூண்டும். நல்ல உடலில் நல்ல மனம் என்பார்கள், அந்த நல்ல மனம் அமைய வழி வகுக்கும்.

இடைத்தூர, நெடுந்தூர ஓட்டம், மெல்லோட்டம், நீச்சல், சைக்கிளோட்டம், நடை, டென்னிஸ், நடனம் போன்ற உடற்பயிற்சிகள் ஏரோபிக் வகை பயிற்சிகளாகும். (இ)

# முகப்பரு கருவளையத்தை போக்கும்

## தக்காளி ஃபேஸ் பேக்



முகத்தை பொலிவாக்க, நம்மிடம் இருக்கும், அன்றாட வாழ்க்கையில் உபயோகப்படும் தக்காளியை வைத்து ஈஸியாக ஃபேஸ் பேக் செய்யலாம்.

இப்போது அந்த தக்காளியை வைத்து எப்படி ஃபேஸ்பேக் செய்வதென்று பார்ப்போம்!!!

1. தக்காளியை வேக வைத்து தோலை நீக்கி, அதனுடன் சிறிது ஓட்ஸ் மற்றும் ஒரு ஸ்பூன் தயிர் சேர்த்து முகத்தில் தடவ வேண்டும்.

சிறிது நேரத்திற்கு பிறகு அதனைக் கழுவ வேண்டும்.

இப்படி செய்தால் சூரிய ஒளி பட்டுப்பட்டு பழுப்பு நிறமாகிய இடம் பொலிவு பெற்று அழகுடன் காணப்படும்.

2. வேக வைத்த தக்காளியோடு, சிறிது எலுமிச்சை பழச்சாற்றை விட்டு முகத்தில் தடவி, காய்ந்ததும் அதனை தண்ணீரால் கழுவி வந்தால், முகம் பொலிவுடன் காணப்படும்.

3. முல்தாணி மெட்டியுடன் தக்காளிச் சாற்றை விட்டு கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும், இல்லையென்றால் உள்ளங்கையை நனைத்து மாஸ்க் மீது மசாஜ் போல் செய்ய வேண்டும்.

இப்படி 2-3 நிமிடம் மசாஜ் செய்து பின் குளிர்ந்த தண்ணீரில் கழுவினால், முகத்தில் இருக்கும் சுருக்கங்கள், முகப்பரு, கருவளையம் போன்றவை போய்விடும்.

4. எங்கேனும் அவசரமாக செல்ல வேண்டும் என்றால் அப்போது வேக வைத்த தக்காளியுடன் 2 ஸ்பூன் பாலை விட்டு கலந்து முகத்தில் தடவி 5 நிமிடம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவிச் சென்றால், முகமானது பிரகாசமாக இருக்கும். (இ)

# எப்போதும் இளமையாக இருக்க வழிகள்



பெண்கள் எப்போதும் இளமையாக இருக்கவே விரும்புவார்கள். இதற்கு சில வழிமுறைகளை தவறாமல் பின்பற்றி வந்தால் என்றும் இளமையாக வலம் வரலாம்.

எப்போதும் இளமையாக இருக்க வழிகள்

எப்போதும் இளமையாக இருக்கவே எல்லோரும் விரும்புவார்கள். இருந்தாலும், வயதாகும் போது ஏற்படும் தோல் சுருக்கம் முதுமையை வெளிக்காட்டிவிடும். குறிப்பாக முகத்தில் தோன்றும் மாற்றங்கள் உங்கள் வயதை காட்டிக் கொடுத்து விடும்.

இதனால் முக அழகை பராமரிக்கவும், பாதுகாக்கவும் எண்ணற்ற மருந்துகளும், அழகு சாதனப்பொருட்களும் போட்டி போட்டு சந்தையில் விற்கப்படுகின்றன. விஞ்ஞானிகளும் மனிதர்களின் இளமையை நீடிக்கச் செய்யும் ஆய்வுகளிலும் தீவிரமாக ஈடுபட்டுவருகிறார்கள்.

அமெரிக்காவின் இல்லினாயிஸ் மாகாணத்தில் உள்ள நார்த்வெஸ்டர்ன் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானி முராத் ஆலம், யோகா நிபுணர் கேரி சிகோர்ஷி ஆகியோர் கொண்ட குழுவினர் வசீகரமான முக அழகை பாதுகாப்பது குறித்து ஆய்வு நடத்தி வருகிறார்கள். இவர்கள் நடத்திய ஆய்வில் குறிப்பிட்ட சில யோகாசனங்கள் செய்வதன் மூலம் முக அழகை இளமையாக வைத்திருக்கும் முறையை கண்டுபிடித்துள்ளனர்.

விஞ்ஞானி ஆலம் இது குறித்து கூறுகையில், 'தினமும் 30 நிமிட நேரம் முகத்திற்கான யோகப்பயிற்சிகள் செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால் முகத்தில் சுருக்கம் விழுவது தள்ளிப்போகும். சுமார் 40 முதல் 60 வயது வரையுள்ள ஆண்கள், பெண்கள் ஆகியோர் கொண்ட 50 பேர் குழுவை இதற்காக தேர்ந்தெடுத்து அவர்களுக்கு முக யோகாசனம் சொல்லிக் கொடுக்கப்பட்டது.


இதை அவர்கள் தொடர்ந்து செய்து வந்தனர். அது போல யோகாசனம் எதுவும் செய்யாத குழுவும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

இந்த ஆய்வின் முடிவில் யோகாசனம் செய்தவர்கள் முக அழகு நீடித்து இருப்பதும், அவர்களது முகம் பொலிவுடன் இருப்பதும் தெரிய வந்தது' என்றார். இந்த சோதனைக்காக சில குறிப்பிட்ட யோகாசனங்களை யோகா நிபுணர் கேரி உருவாக்கியுள்ளார். இந்த யோகாசனங்களில் பல, முகத்தை அஷ்டகோணலாக்கி பயிற்சி செய்வது போல அமைந்துள்ளது.

இதை பலரும் ஆர்வத்துடன் செய்கிறார்கள். மேலும் இந்த யோகா செய்யும் போது அவர்கள் அதிகமாக சிரித்துக் கொள்வதால் மகிழ்ச்சியுடன் காணப்படுகிறார்கள் என்றார். (இ)

# மத்திய வங்கி பிணைமுறி குறித்த அறிக்கை வெளிவந்ததும் அடுத்த கட்ட நடவடிக்கை

## கூட்டு எதிரணி தலைவர் தினேஷ் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்ட பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும் என கூட்டு எதிரணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் நேற்று கூட்டு எதிரணியின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் தினேஷ் குணவர்த்தன எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை இது வரை மக்களுக்கு வெளிப்படுத்தப் படவில்லை. அந்த அறிக்கை மக்களுக்கு வெளிப்படுத்தப் பட்ட பின்னர் நாம் அது தொடர்பில் தீர்மானம் எடுப்போம்.

விசேடமாக இந்த அறிக்கையை உடனடியாக பகிரங்கப்படுத்துமாறு நாம் கோரியிருக்கிறோம்.

அதன்படி விரைந்து இந்த அறிக்கை வெளியிடப்படும் என நம்புகிறோம். அந்த அறிக்கை வெளியிடப்பட்டதும் அது தொடர்பில் ஆராய்ந்து விட்டு அதனை மக்களுக்கு வெளிப்படுத்துவோம்.

மேலும் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கூட்டு எதிரணியின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆராயப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நல்லாட்சிக்கு எதிராக வாள் ஏந்திய கம்மன்பில




(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் நேற்று மூன்றாவது ஆண்டில் காலடி பதிக்கின்ற நிலையில் பிவித்துரு ஹெல உறுமய கட்சியினர் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் வாளை ஏந்தியவாறு ஊடக சந்திப்பொன்றை நடத்தியிருந்தனர்.

நல்லாட்சியை புறக்கணித்து கறுப்பு உடையுடன் வந்த உதய கம்மன்பில, இந்த அரசாங்கம் மேலும் நீடித்தால் நாட்டின் எதிர்காலம் சீரழியும் என எச்சரித்தார்.

குறித்த ஊடக சந்திப்பானது கொழும்பிலுள்ள பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம் பெற்றது.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர், "நேற்று ஜனவரி எட்டாம் திகதி. நாட்டிற்கு எதிர்காலத்தை இல்லாது செய்த, வேலை முடியாத, திருடர்கள் நிறைந்த அரசாங்கம் பொறுப்பேற்று இன்றுடன் மூன்றாண்டுகளாகின்றன.

மக்களுக்கான நீதியை நிலைநாட்டுமாறு கோரி தேசிய கொடியில் சிங்கத்திடமிருந்த வாள், ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. ஆனால், அதனை அவர் முறையாக பயன்படுத்தியிருந்தால் பிணைமுறி விவகாரத்தில் பிரதமர் ரணில், ஊழல் மோசடியில் ரவி கருணாநாயக்க மற்றும் வன அழிப்பு தொடர்பாக றிசாத் பதியுதீன் ஆகியோர் வெட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால், ஜனாதிபதி இவ்வளவு காலமும் அந்த வாளை ஒரு அலங்காரப் பொருளாக மாத்திரமே வைத்திருந்தார்.

இந்நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான இந்த அரசாங்கம் தொடர்ந்து மேலும் இரு ஆண்டுகளுக்கு நீடித்தால், இந்த நாடும் இருக்காது, நாட்டின் எதிர்காலமும் இருக்காது. எனவே நல்லாட்சி அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்பும் போராட்டத்தை மக்கள் ஆரம்பிக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இலங்கை அகதிகளுக்கு இரட்டைக் குடியுரிமை

### இந்தியாவிடம் கோரிக்கை

(கொழும்பு)

இந்தியாவில் திருச்சி - கொட்டப்பட்டிலுள்ள அகதிகள் முகாமில் மத்திய அரசின் குழுவினர் ஆய்வு செய்த போது, தமக்கு இரட்டை குடியுரிமை வேண்டும் என இலங்கை அகதிகள் கோரிக்கை விடுத்து மனு கொடுத்துள்ளனர்.

மத்திய அரசின் உள்விவகாரத்துறை அமைச்சகத்தை சேர்ந்த எஸ்.கே.பரிடா, சதீஸ் குமார் அடங்கிய குழுவினர் நேற்றுமுன்தினம் திருச்சி, கொட்டப்பட்டிலுள்ள அகதிகள் முகாமை ஆய்வு செய்தனர்.

இதன்போது, 50இற்கும் மேற்பட்ட அகதிகள் இந்த இரட்டைக்குடியுரிமை கோரிக்கை மனுக்களை கையளித்துள்ளனர்.

எனினும் அது சாத்தியமில்லை என ஆய்வு செய்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

"நாம் இலங்கைக்கு செல்லும் போது விமானத்தில் 20 கிலோவிற்கும் மேல் கொண்டு செல்ல முடியாது. ஆனால் கப்பலில் உரிய கட்டணம் செலுத்தி அதிக பொருட்களை கொண்டு செல்லலாம்.

ஆகவே சிறப்பு கப்பல்களை இயக்க வேண்டும். இலங்கை - இந்தியா இடையே போக்குவரத்து பரிவர்த்தனைகளை எளிமையாக்க வேண்டும்" என்ற கோரிக்கைகளையும் அகதிகள் முன்வைத்தனர். (இ-7)

## சுய அரசியல் இலாபத்துக்காகவே இலங்கைத் தமிழர் விவகாரத்தை சீமான் பயன்படுத்தி வருகின்றார்

### நாமல் ராஜபக்ஷ பதில்

(கொழும்பு)

சுய அரசியல் இலாபத்துக்காக மட்டுமே இலங்கைத் தமிழர் விவகாரத்தை சீமான் பயன்படுத்துகிறார் என்று நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.






நடிகர் ரஜினிகாந்த் அரசியல் கட்சி தொடங்கப் போவதாக அறிவித்த சில மணி நேரங்களில், முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ மகன் நபமல் ராஜபக்ஷ டுவிட்டர் மூலம் அவருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

இது தொடர்பாக நாம் தமிழர் கட்சியின் சீமான், நாமல் ராஜபக்ஷ ரஜினிகாந்துக்கு வாழ்த்து சொல்ல வேண்டிய அவசியம் என்ன என்று தனியார் தொலைக்காட்சி நடத்திய நிகழ்ச்சியில் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்நிலையில், சீமான் எழுப்பிய கேள்விக்கு நாமல் ராஜபக்ஷ டுவிட்டரில் பதிலளித்துள்ளார். அதில் அவர் கூறியதாவது,

சுய அரசியல்அலாபத்துக்காக மட்டுமே இலங்கை தமிழர் விவகாரத்தை சீமான் பயன்படுத்துகிறார். இலங்கை தமிழர்கள் மீது சீமானுக்கு உண்மையில் அக்கறையில்லை என தெரிவித்துள்ளார். (இ-8)

## பாடசாலை மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டை

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டையை விநியோகிப்பதற்கான சுற்றறிக்கை அடுத்த வாரம் வெளியிடப்பட இருப்பதாக ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணத்திலக்க தெரிவித்துள்ளார்.

க.பொ.த. சாதாரண தர மற்றும் க.பொ.த. உயர்தர பரீட்சைகளுக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை முன்கூட்டியே வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வழங்கப்பட்டுள்ள ஆலோசனைக்கு அமைவாக பாடசாலை மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள விரைவாக விண்ணப்பிக்குமாறு பாடசாலை அதிபர்களிடம் ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.(இ-7

# சுவாமி ஸ்வாரூபானந்தாஜி வாழ்க்கைப் பயணம்

சின்மயா மிஷனின் உலகளாவிய தலைவர் பூஜ்ய சுவாமி ஸ்வரூபானந்தா இன்று செவ்வாய்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்து, நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் மாலை 5.30 மணி முதல் 7 மணி வரை 'வாழ்வின் முகாமைத்துவ நுட்பங்கள்' LIFE MANAGEMENT TECHNIQUES என்னும் தலைப்பில் அருளுரை வழங்கவுள்ளார். இதனை முன்னிட்டு இக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.



பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பகவத்கீதையின் ஆறாவது அத்தியாயத்தில் ஒரு மனிதன் முன்னைய பிறவியில் ஆன்மீகத் தேடலில் ஈடுபட்டு அது முழுமையடையாமல் அந்த உடலை உகுத்து இருப்பானாகில் மறு பிறவியில் அதனை நிறைவேற்றுக் கூடிய சூழலில் பிறப்பான் என்று பகர்ந்துள்ளார். அந்த வகை யில், சின்மயா மிஷனும் இன்றைய உலகளாவிய தலை வராகப் பணியாற்றும் சுவாமி ஸ்வரூபானந்தாஜி அவர்கள் கருவிலேயே திரு ஊட்டக் கூடிய சூழலில் பிறவியெடுத்தவர் ஆவார்.

இவரது அன்னை கருவுற்றிருக்கும் போது தந்தையார் அவருக்கு ஸ்வாமி விவேகாந்தரின் போதனைகளை வாசித்துக் காட்டுவாராம். வைத்தியசாலையில் இவர் பிறந்த போது குழந்தையாக முதலில் கண்விழித்துப் பார்த்தது அங்கு சுவரில் மாட்டப்பட்டிருந்த பூஜ்ய குருதேவர் ஸ்வாமி சின்மயானந்தரின் படத்தைத் தான். பள்ளிப்பருவத்தில்இவரது பாட்டி புராணக்கதைகள் மற்றும் மகான்களின் வாழ்க்கை வரலாறுகளைப் புகட்டுவாராம். ஆம், ஸ்வாமிஜியின் பூர்வ ஜன்ம வாசனைகளுடன், அவர் பிறந்த சூழ் நிலைகளையும் இளமையிலேயே உண்மைபட பொருளைத் தேடும்உத்வேகத்தை அளித்து.

இந்தியாவில் பிரபல வர்த்தகரின் புதல்வராக அவரித்து, ஹொங்கொங் நாட்டில் தனது பட்டப்படிப்பை முடித்த பின்னர்பெற்றோருடன்வாழும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். எவ்வளவு வசதி வாய்ப்புக்கள் இருந்தாலும் அவரது இதயம் அந்த உண்மைப் பொருளின் தேடலிலேயேவிளைந்தது. தனது 12 ஆவது வயதிலேயே தன் பெற்றோரை விட்டு விலகி ஆன்மீகத் தேடலிலேயே காலத்தைக் கழித்தார். அக்காலத்திலேயே ஸ்வாமி சின்மயாந்தர் அவர்களின் தொடர்பு கிடைக்கப்பெற்றார். இந்தியாவின் தலைசிறந்த வேதாந்த (சரியான வாழ்க்கை விஞ்ஞானம்) ஆசானாகிய ஸ்வாமி சின்மயானந்தரின் தொடர்பு அவரது தேடலுக்கு மேலும் வாய்ப்பளித்தது.

"நாளாந்தம் வாழ்க்கையில் நாம் சந்திக்கும் இன்ப துன்பங்களுக்கு அப்பால் மிக உயர்ந்த உண்மைப் பொருள் ஒன்று இருக்கின்றது. அதுவே எமது சகல பிரச்சினைகளுக்கும் தீர்வாக அமையும். அதனை உணர்ந்தால் மனிதன் என்றும், உள்ளமும் புறமும் நித்ய ஆனந்தத்தில் திளைக்கலாம்"

இத்தகைய சிந்தனையில் தன்னை முற்று முழுதாக ஈடுபடுத்திய ஸ்வாமிஜி அவர்கள் 1984இல் தனது தாயாரின் அனுமதியுடன் பம்பாய் நகரில் அமைந்திருந்த சின்மயா மிஷனின் வேதாந்தக் கல்வியைப் போதித்து பல நூற்றுக்கணக்கான துறவிகளை உருவாக்கிய "சாந்திபனி" ஆச்சிரமத்தில் இணை ந்தார். அங்கு குருதேவர் ஸ்வாமி சின்மயானந்தர்,பூஜ்ய குருஜி ஸ்வாமி தேஜோமயானந்தர் ஆகியோரிடம்வேதாந்த ஞானத்தைப்பெறும் வாய்ப்பை பெற்றார். 1886 இல் பிரம்மச்சரிய சுஷீல் சைதன்யா என்னும்நாமத்துடன்ஹொங்கொங் திரும்பினார்.

பல மொழி வல்லமை படைத்த சுவாமிஜி அவர்கள் அங்கு வேதாந்தக் கல்வியை வழங்கினார். தொடர்ந்து அவர் உலகின் பல பகுதிகளுக்கும், குறிப்பாக லண்டன், நியூயோர்க், சிட்னி, டில்லி, சிங்கப்பூர் , டுபாய் மற்றும் லாகோஸ் ஆகிய பல பகுதிகளுக்கும் சென்று வேதாந்த ஞானத்தை அவரவர் வாழ்க்கை முறைக்கு ஏற்றவகையில் வழங்கினார். இதனால் பல்லாயிரக்கணக்கான மக்களின் இதயங்களில் இடம்பிடித்துக் கொண்டார். பலரது சொந்தப் பிரச்சினைகளில் இருந்து விடுபட்டு சுபீட்சமான வாழ்வு. வாழவும் தொடர்ந்து உண்மைப் பொருளை உணரவும் வழிகாட்டினார்.

1992 ஆம் ஆண்டில் மனிதாபிமானக் கட்டளைக்குத் தலைமை தாங்கினார். (He was intiated in to the monastic order in 1992) அன்றிலிருந்து உலகின் பல பாகங்களிலும் உள்ள பாகங்களிலும் உள்ள பல்லாயிரக்ணக்கான மக்களின் தொடர்பை ஏற்படுத்தியதுடன் சகல மதங்களிடையேயும் அருகிவந்த ஒற்றுமையை வளர்த் தெடுப்பதிலும் அத்தியாவசிய அறிவை, ஞானத்தை வெளிக்கொணர்வதிலும் அவர் ஆற்றிய குறிப்பிடத்தக்க சேவையால், சுய அபிவிருத்தி தத்துவத்தின் காவலர்களில் தனக்கென ஓர் இடத்தையும் பெற்றுள்ளார்.

மேலும் இவரது அறிவுத் திறனை உணர்ந்து லண்டன் பிஸினஸ் பாடசாலை மற்றும் ஹவார்ட் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் சுய அபிவிருத்தி சம்பந்தமான பயிற்சிகளை நடத்தும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

1995 இல் இருந்து அவுஸ்திரேலியாவில்மெல்போர்ன் இல் உள்ள "சின்மய தாம்" நிலையத்தில் பணியாற்ற ஆரம்பித்தார். மேலும் சின் மயா மிஷன் UK, அவுஸ்திரேலியா, தூரகிழக்கு நாடு களிலும் மாவட்டத் தலை வராகப் பணியாற்றினார். மற்றும் சமஸ்கிருத மற்றும் இந்து பாரம்பரிய பல்கலைக் கழகம் மற்றும் சின்மய விஸ்வ வித்யா பீடத்தின் தலைவ ராகவும் பணியாற்றினார்.

2017 ஜனவரி மாதம் 19 ஆம் திகதி பூஜ்ய குருஜி தேஜோமயானந்தா அவர்கள் தான் அதுவரை ஏற்று நடத்தி வந்த சின்மயா மிஷனின் உலகளாவிய தலைவர் பதவியை, ஸ்வாமிஸ்வரூபானந்தாஜி அவர்களிடம் கையளித்துள்ளார். அந்நிகழ்வில் குருஜி அவர்களால் ஆசீர்வ திக்கப்பட்டு அவரது சேவை யில் எப்பொழுதும் அவரது காலடியில் (Ever At His Servie, Ever At His Feet) என்ற வாசகங்கள் பொறிக் கப்பட்டுள்ளதுடன் குருதேவா எழுதும் பாணியிலான ஓம் பதிக்கப்பட்ட பதக்கம் ஒன்றும்வழங்கி ஆசீர்வதித்தார்.

தற்பொழுது சின்மயா மிஷனின் உலகளாவிய தலைவர் பதவியை பூஜ்ய குரு தேவர் சுவாமி சின்மயா னந்தர் மற்றும் பூஜ்ய குருஜி அவர்களின் பூரண ஆசியுடன் ஏற்று செவ்வனே நட த்தி வருகின்றார்.

சுவாமி அவர்கள் நல்ல ஆசான், சிறந்த பேச்சாளர், சிறந்த வேதாந்த ஞான முதிர்வு பெற்றவர் என்பதுடன் சிறந்த எழுத்தாளராகவும்திகழ்கின்றார்.

இவர்ஆற்றிய உரைகள்சிலவும் நூல்களாக வெளி வந்துள்ளன. அவை ஐகே ஒன்கார் (IK Onkar), மகாமிருத்யுஞ்ஜய மந்திரம் (Maha Mrity unj aya Mantra), சங்கற் மோச்சன் (SankarMochan)ஆகியனவாகும்.

மேலும் ஆன்மீக வாழ்வில் கடைப்பிடிக்கும் விடயங்கள் குறித்த இலகு தியானப் பயிற்சி (Simplicity in me dita tion) அவதார் (Avatar), மன நிர்வாகம்(Managing the Man ager) மற்றும் Jour ney in to Health ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார். இதில் மனநிர்வாகம் எனும்நூல்தமிழ்பதிப்பும்வெளி வந்துள்ளது. மேலும் பல நாடுகளின் நிறுவனங்களில் நேர முகாமைத்துவம், சுய அபிவிருத்தி, மன நிர்வாகம் ஆகிய விடயங்களில் கருத்தரங்குகளையும் நடத்தி யுள்ளார். இத்தகைய சுயநல மற்ற பல னை எதிர் பாராத சேவை யால் , மனித நேயத்தால் மக்களை நெறிப்படுத்திய மகானின் பாதம் பணிவோமாக.


எஸ். பாலச்சந்திரா.
சின்மயாமிஷன்.
யாழ்ப்பாணம்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1300

Search for people, places and things | Nagendram | Home

### பிருந்தா

இன்னுமா சமையல் முடியல? நான் ஹோட்டலுக்குப் போறன்..
மனைவி: ஒரு ஐந்து நிமிசம் பொறுங்க அதுக்குள்ள ஆகிடுமா



இல்ல நானும் புடவையை மாத்திட்டு உங்களோட வந்திடுறேன்

### ஆனந்தன்



எவ்வளவு களைப்பா இருந்தாலும் அலுவலகத்திற்குப் போய் தூங்குறவன் பெரிய மனுசன்

### பிரீத்தி



உன் தலைமுடி இவ்வளவு நீளமா, அடர்த்தியா இருக்கே எப்படி?
காலையில ஷம்போ போட்டுக் குளிப்பேன்... சாயங்காலம் கெயார் ஓயில் தடவுவேன்...
அப்போ நைட்டு? கழுட்டி ஆணியில மாட்டிடுவேன்

### சந்தியா

20 வயது வரைக்கும்தான் வேளா வேளைக்குச் சோறு



அப்புறம் வேலைக்குப் போனாத்தான் சோறு

### சனா

எல்லாப் பசங்களும் ஒரு பொண்ணப் பத்தி பேசினா அவ சுப்பர் பிகர் என்று அர்த்தம்



அதே பசங்க, அதே பொண்ணப் பத்தி கேவலமாப் பேசினா அவளுக்கு ஆள் செட் ஆயிடுச்சு என்று அர்த்தம்

### பௌசி

உங்கள் உடம்பில் கோடிக்கணக்கான செல்கள் இருந்தாலும்



ஒரு செல்லில்கூட ஸிம் கார்ட் போட்டு பேச முடியாது. அதுதான் வாழ்க்கை. வரட்டா...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

அரசியல்வாதிகளின் சக்தி கணக்கில் வரும் பூச்சியத்தைப் போன்றது. மக்களின் சக்தி 'ஒன்று' என்ற எண்ணைப் போன்றது. - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நல்லாட்சி முன்வைக்கும் தீர்வு மக்களுக்கா? அரசியல்வாதிகளுக்கா?

எங்களுக்கு வாக்களிக்காவிட்டால் தீர்வுத் திட்டம் இல்லாமல் போய்விடும் என்று கூறி வாக்குக் கேட்கும் அளவில் தமிழ் அரசியல்வாதிகள் வந்துவிட்டனர்.

முப்பது ஆண்டு கால ஆயுதப் போராட்டம், யுத்தம் முடிந்து ஒன்பது ஆண்டுகள் முடிவடைகின்ற நிலையில் தமிழ் மக்கள் இருக்கின்ற போது,

எங்களுக்கு வாக்களிக்காவிட்டால் தீர்வுத் திட்டம் இல்லாமல் போகும் என்று கூறி தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற பாதகச் செயலை அரசியல்வாதிகள் கைவிட வேண்டும்.

அத்துடன் இது விடயங்களில் தேர்தல் திணைக்களம் அதிகூடிய கவனமெடுத்து இத்தகைய அரசியல்வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதும் அவசியமாகும்.

ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் எவ்வளவோ கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

தொழில் இழப்பும் வேலையின்மையும் மூலதன அழிவும் காரணமாகப் பலரும் நொந்து நூலாகி இருக்கின்றனர்.

மண் மீட்புப் போராட்டத்தில் இறங்கி தம்முயிரைத் தியாகம் செய்த மாவீரர்களின் குடும்பங்கள் இன்று ஒதுங்கி ஓரமாக நிற்கின்றனர்.

இவ்வாறாக எத்தனையோ துன்பியலை மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கையில்,

எங்களுக்கு வாக்களிக்காவிட்டால் தீர்வுத் திட்டம் இல்லாமல்போய்விடும் என்பது எத்துணை அபத்தமானது.

இலங்கையின் ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்குத் தீர்வு தருவார்கள் என்பது வெறுங்கதை.

இது ஒருபுறம் இருக்க, அரசியல் தீர்வுக்கான இடைக்கால வரைபு என்பதுகூட, தமிழின அழிப்பை, வன்னி யுத்தத்தில் நடந்த முறைகேடுகளை மறைப்புச் செய்து சர்வதேசத்தின் அழுத்தத்தை தவிர்ப்பதற்கான தந்திரோபாயமாகும்.

தவிர, நல்லாட்சியும் இன்றோ நாளையோ என்று ஆட்டம் காண்கிறது. நல்லாட்சி இல்லாமல்போகும்போது இடைக்கால வரைபும் காணாமல்போகும்.

இதுவே நிலைமை என்றிருக்கையில், எங்களுக்கு வாக்களிக்காவிட்டால், தீர்வுத் திட்டம் இல்லாமல் போய்விடும் என்று கூறுவது எவ்வளவு தூரம் துரோகத்தனமானது.

இப்படியொரு பிரசாரம் செய்து வாக்குப் பெறுவதை விட, அரசியல் துறவு பூணுவது உத்தமமானது.

எங்களுக்கு வாக்களிக்காவிட்டால் தீர்வு கிடைக்காது எனும்போது இப்போது தமிழ் மக்களிடம் மிகப்பெரியதொரு கேள்வி எழுகிறது.

அதாவது இலங்கை அரசாங்கம் முன்வைக்கின்ற தீர்வு தமிழ் மக்களுக்கானதா? அல்லது தமிழ் அரசியல்வாதிகளுக்கானதா? என்பதுதான்.

தீர்வு தமிழ் மக்களுக்கானது என்றால் யார் வென்றாலும் தோற்றாலும் தீர்வு கிடைத்தேயாகும்.

மாறாக தீர்வு சம்பந்தப்பட்ட தமிழ் அரசியல்வாதிகளுக்கானதெனில் அதனால் தமிழ் மக்களுக்கு எந்தப் பிரயோசனமும் இல்லை என்பதுடன் அத்தகைய தீர்வு எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆட்சிகளின்போது இரத்துச் செய்யப்படலாம் என்பதால் மேற்குறித்த விடயம் தொடர்பில் தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

# சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய குடும்பத் தலைவருக்கு 7 வருட கடூழிய சிறை

## யாழ்.மேல் நீதிமன்று தீர்ப்பு

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பகுதியில் சிறுமியை பாலியல் வல்லுறவு புரிந்த குடும்பத் தலைவருக்கு ஏழு ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்குறித்த குற்றத்தை புரிந்ததாக குறித்த குடும்பத் தலைவருக்கு எதிராக சட்டமா அதிபர் யாழ். மேல் நீதிமன்றில் வழக்கினை தாக்கல் செய்திருந்தார்.

குறித்த வழக்கானது நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது குறித்த குடும்பஸ்தர் குற்றத்தை ஒப்புக்கொண்டிருந்தார்.

அதனை தொடர்ந்து எதிரி தரப்பு சட்டத்தரணி குறித்த நபர் ஒன்றரை வருடங்கள் விளக்கமறியலில் இருந்ததாகவும் எனவே அதனை கவனத்தில் எடுத்து தீர்ப்பளிக்க வேண்டும் எனவும் கருணை விண்ணப்பம் செய்திருந்தார்.

அதேபோன்று அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந், குறித்த குற்றமானது பாரதூரமான குற்றச்செயல் எனவும் இதற்கு இலங்கை தண்டனை சட்டக்கோவையின் அதிகூடிய தண்டனையாக 20 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனையும் குறைந்த தண்டனையாக 7 ஆண்டுகள் கடூழிய சிறைத தண்டனை வழங்க வேணடும் என விண்ணப்பம் செய்தார்.

இரு தரப்பினரதும் வாதங்களை பரிசீலனை செய்த நீதிபதி குறித்த குற்றவாளிக்கு தண்டனை தீர்ப்பை வழங்கினார். குறித்த குற்றமானது பாரதூரமான குற்றமென சுட்டிக்காட்டிய நீதிபதி எதிரி தரப்பு சட்டத்தரணியின் கருணை மனுவினையும் கவனத்தில் எடுப்பதாக குறிப்பிட்டார்.

இதன்படி குற்றவாளியான தந்தைக்கு ஏழாண்டுகள் கடூழிய சிறைத் தண்டனையும் 45 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடும் அதனை கட்டத்தவறின் ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனையும் 6 ஆயிரம் ரூபாய் தண்டப் பணமும் அதனை கட்டத் தவறின் 3 மாத கடூழிய சிறைத் தண்டனையும் விதித்து யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்திருந்தார். (ம-4)

## முகமாலை காட்டுப் பகுதியில்

# கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகை

(மல்லாவி)

பளை பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட முகமாலையில் உள்ள தரவைக் காட்டுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் நீண்ட காலமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை சுற்றி வளைத்து 48, லீற்றரும் 500 மில்லி லீற்றர் கசிப்பினையும் மற்றும் 750 மில்லி லீற்றர் கசிப்புக் கோடாவையும் கைப்பற்றியுள்ளதுடன் சம்பவ இடத்தில் வைத்து 03 சந்தேக நபர்களைக் கைது செய்த பின்னர் கசிப்பு உற்பத்தி நிலையம் நிர்மூலமாக்கப்பட்டுள்ளதாக பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஏ.எஸ்.ரஞ்சன பண்டார தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று திங்கட்கிழமை காலை பளைப் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து பளைப் பொலிஸார் முகமாலை பகுதியில் உள்ள வெடி பொருட்கள் அகற்றப்படாத பாதுகாப்பு அற்ற பிரதேசமான "தரவைக்காட்டுப்" பகுதியில் சட்டவிரோதமான முறையில் நீண்ட காலமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை சுற்றிவளைத்து தடயப் பொருட்களை கைப்பற்றியுள்ளதுடன், சந்தேக நபர்களையும் கைது செய்த பின்னர் கசிப்பு உற்பத்தி நிலையத்தை நிர்மூலமாக்கியுள்ளனர்.

இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் பளைப் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன், கைதான சந்தேகநபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்கள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஏ.எஸ். ரஞ்சன பண்டார இது தொடர்பில் மேலும் தெரி வித்துள்ளார். (ம-15)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### கட்டுப்பாடுகள் அவசியமா?

எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாமல் தந்தை தனது போக்கிலும் தாய் அவளது போக்கிலும் குழந்தைகள் அவரவர் போக்கில் போவது தவறு. கட்டுப்பாடுகள் இல்லாத வாழ்க்கையை வாழ்ந்து விட்டு எனது மகன் இப்படி ஆகி விட்டானே என்று பதறுவதில் அர்த்தமில்லை.

இன்றைய காலத்தில் இதுபோன்ற ஏராளமான சம்பவங்கள் நடைபெறுகின்றன. அதனால் தேவையான நேரத்தில் தேவைக்கேற்ப தேவைப்படும் விடயங்களில் குழந்தைகளைக் கட்டுப்படுத்துவதில் பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டும். இல்லாவிட்டால் துன்பப்படவேண்டிய நிலை வரும்.

(தொடரும்)

## காப்பெற் வீதியாக்கும் செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

நெடுங்குளம் சந்தியிலிருந்து மணியந்தோட்டம் சந்தி வரையிலான வீதியினைக் காப்பெற்வீதியாக்கும்வேலைத் திட்டமானது 09.01.2018 ஆம் திகதி முதல் 10.01.2018ஆம் திகதி வரை மேற்கொள்ள வீதி ஊடான போக்குவரத்துக்கள் அனைத்தும் தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளது என யாழ். மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை யாழ். பிரதேசத்தில வலந்தலை சந்தி, சிவகாமி அம்மன் கோவிலடி, ஆலடி, மருதபுரம், வியாவில், கருங் காலி, காரைநகர் சிவன் கோவிலடி, பொன்னாலை கிருஸ்ணன் கோவிலடி, பொன்னாலை வீட்டுத்திட்டம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில அட்டம்பஸ்கட கிராமம், தவசிக்குளம் கிராமம், பண்டாரிக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும மின் தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடிகொண்டிருக்கிறார், இதைத் தவிரத் தனியாக வேறு கடவுள் இல்லை என்பதை பல தவங்களுக்குப் பிறகு புரிந்து கொண்டேன். மக்களுக்குச் சேவை செய்பவன் உண்மையில் கடவுளுக்குச் சேவை செய்பவனாகிறான்.
- நேர்மையானவர்களாக இருந்தும் லட்சியத்தை பின்பற்ற முடியவில்லை என்றால் அது நமது பலவீனத்தாலேயே ஆகும். லட்சியத்தை அடைய இறுதி வரை போராட வேண்டும்.
- தன்னலம் சிறிதும் இல்லாமல், நிறைந்த அன்புடன் பழகுபவர்களே இப்போது உலகத்திற்குத் தேவைப்படுகிறார்கள். பொறாமையை விலக்கினால் இதுவரையிலும் செய்யாத மகத்தான செயல்கள் அனைத்தும் செய்து முடிப்பீர்கள்.
- வாழ்க்கையில் வெற்றி பெற உலகம் எவ்வளவு பெரியதோ, அந்த அளவுக்கு உங்கள் இதயத்தையும் விரிவாக்குங்கள்.
- உன்னால் ஒருவருக்கும் உதவி செய்ய முடியாது. ஆனால், சேவை செய்ய முடியும், கடவுளின் குழந்தைகளுக்குத் தொண்டு செய். உனக்கு அப்படித் தொண்டு செய்யும் பாக்கியம் இருந்தால், ஆண்டவனுக்கே நீ தொண்டு செய்தவனாகிறாய்.

# இலங்கைப் பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்தும் காலநிலை

இந்து சமுத்திரத்தில் முத்தாக விளங்கும் இலங்கை நாலாபுறமும் கடலால் சூழப்பட்டுள்ளது. இந்நாட்டின் அமைவிடமானது வருடம் முழுவதும் நீரைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் காணப்படுகின்றது. அதாவது வட கீழ், தென் மேல் பருவப் பெயர்ச்சி காலநிலைகள் மூலம் மாத்திரமல்லாமல் வருடத்தின் ஆரம்பப் பகுதியிலும், இறுதிப் பகுதியிலும் இடைப்பருவப் பெயர்ச்சிக் காலநிலை மூலமும் இந்நாடு மழை வீழ்ச்சியைப் பெற்றுக் கொள்கின்றது.

அதேநேரம், இந் நாட்டில் இயற்கையாகவே உருவான 103 ஆறுகளும் கங்கைகளும் காணப்படுகின்றன. அத்தோடு 50 இற்கும் மேற்பட்ட பாரிய நீர்த் தேக்கங்களும், நூற்றுக் கணக்கான சிறிய மற்றும் நடுத்தரக் குளங்களும் உள்ளன.

இவ்வாறு வருடத்தில் 365 நாட்களும் தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்படாத வகையிலான நீர்வளத்தைக் கொண்ட நாடாக இலங்கை விளங்குகின்றது. இதனால் இந்நாட்டுக்குத் தேவையான மின்சாரத்தில் 40 வீதத்திற்கும் மேற்பட்ட பங்கு மின்சாரம் நீரை அடிப்படையாகக் கொண்டு தான் உற்பத்தி செய்யப்படுகின்றது.

இதன் பயனாக இந்நாடு ஆரம்ப காலம் முதல் விவசாய உற்பத்தி நாடாக விளங்கி வருகின்றது. அத்தோடு கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக பெருந்தோட்ட விவசாய உற்பத்தி நாடாகவும் இந்நாடு திகழுகின்றது. இதன் மூலம் இந்நாட்டுக்கு வருடாந்தம் பெருந்தொகை அந்நியசெலாவணி கிடைக்கப் பெறுகின்றது. இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு அந்நியசெலாவணி வழங்கும் முக்கிய துறைகளில் இவையும் இடம்பிடித்திருக்கின்றன.

இருந்த போதிலும் அண்மைக் காலமாக காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், இந்நாட்டு விவசாய உற்பத்தித் துறையிலும் பெருந்தோட்ட விவசாய உற்பத்தித் துறையிலும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தி உள்ளன. இது நாட்டின் அந்நியசெலாவணியிலும் தாக்கம் செலுத்தி வருகின்றது.

இக்காலநிலை மாற்றம் காரணமாக 2016 ஆம் ஆண்டில் மாத்திரம் இலங்கையின் விவசாய உற்பத்தி மற்றும் பெருந்தோட்ட உற்பத்தித் துறைகளில் பல்வேறு தாக்கங்கள் ஏற்பட்டதாக இலங்கை மத்திய வங்கி ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் 2016 ஆம் ஆண்டு அறிக்கையின்படி நெல் உற்பத்தியில் 8.3 வீத வீழ்ச்சியும், தேயிலை உற்பத்தியில் 11 வீத வீழ்ச்சியும், இறப்பர் உற்பத்தியில் 10.7 வீத வீழ்ச்சியும், தேங்காய் உற்பத்தியில் 1.5 வீத வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது.

நெல் உற்பத்தியைப் பொறுத்த வரையில் 2015 ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் சாதகமான மழைவீழ்ச்சி காணப்பட்டதன் பயனாக நெற்செய்கை பண்ணப்பட்ட பரப்பளவு 1.2 வீத அதிகரிப்பைக் காண்பித்ததோடு, 667,483 ஹெக்டேயர்கள் செய்கை பண்ணப் பட்டவையாகக் காணப்பட்டன.

என்றாலும் இப்பிரதேசங்களில் ஏற்பட்ட இலைச்சுருள் நோய், வெப்புநோய் காரணமாக ஹெக்டேயருக்கான நெல் அறுவடை 0.3 வீதத்தால் வீழ்ச்சி அடைந்தது. அதாவது 4363 கிலோ கிராமிலிருந்து 4349 கிலோ கிராம் வரை அறுவடை குறைந்தது.

அதேநேரம் 2016 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு காலப்பகுதியில் வீசிய கடும் காற்றின் விளைவாக அதேயாண்டின் சிறுபோக அறுவடை 21.9 வீதம் வீழ்ச்சியடைந்தது. நெல் உற்பத்தி செய்யப்பட்ட பரப்பளவும் 20 வீதத்தால் வீழ்ச்சியடைந்து. 343,506 ஹெக்டேயர்களானது.



இவை இவ்வாறிருக்க, பெருந்தோட்ட உற்பத்திப் பயிர்களில் ஒன்றாக விளங்கும் தேயிலை உற்பத்தியிலும் 2016 இல் வீழ்ச்சி ஏற்பட்டது. 2016 ஆம் ஆண்டின் ஆரம்ப கர்லப் பகுதியில் தேயிலை உற்பத்திப் பிரதேசங்களில் வரட்சி நிலவியதன் விளைவாகவும், அவ்வருடத்தின் நடுப்பகுதியில் மேகமூட்டத்துடனான வானிலை நிலவியதன் காரணமாகவும் ஆண்டின் இறுதிப் பகுதி அறுவடையில் பாரிய தாக்கம் ஏற்பட்டது. இதன் விளைவாக ஏற்கனவே 328.8 மில்லியன் கிலோ கிராம் அறுவடை செய்யப்பட்ட தேயிலை 2016 ஆம் ஆண்டில் 292.6 மில்லியன் கிலோ கிராம் வரை குறைவடைந்து 11 வீத வீழ்ச்சியைக் காண்பித்தது.

மேலும் இந்நாட்டிலுள்ள மற்றொரு பெருந்தோட்ட பயிரான இறப்பர் உற்பத்தியிலும் 10.7 வீத வீழ்ச்சி 2016 இல் பதிவானது.

இவை இவ்வாறிருக்க, இந்நாட்டு மக்களின் அன்றாட வாழ்வுடன் பின்னிப் பிணைந்ததாகக் காணப்படும் பெருந்தோட்டப் பயிரான தென்னையின் மூலம் 2016 இல் 3011 மில்லியன் தேங்காய்களை அறுவடை செய்ய எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதிலும் 1.5 வீத வீழ்ச்சி காணப்பட்டது.

### சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

சிறு ஏற்றுமதிப் பயிர்ச் செய்கை மூலமான அறுவடை 2015 இல் 12.9 வீதமாகக் காணப்பட்ட போதிலும், 2016 இல் அதுவும் 9.7 வீத வீழ்ச்சியைக் காட்டியது.

குறிப்பாக மிளகு அறுவடையில் அதன் பூ மற்றும் காய்ப்பருவத்தில் நிலவிய வரட்சி காரணமாக 2016 இல் மாத்திரம் 34.4 வீத வீழ்ச்சி ஏற்பட்டது. இதேபோன்று ஏனைய பயிர்களின் அறுவடையிலும், பழ உற்பத்தியிலும் வீழ்ச்சி பதிவானது.

இவ்வாறு விவசாய உற்பத்தியிலும் பெருந்தோட்ட விவசாய உற்பத்தியிலும் வீழ்ச்சி ஏற்பட காலநிலை மாற்றம் முக்கிய பங்காற்றியுள்ளது. இதே தாக்கம் 2017 ஆம் ஆண்டிலும் நீடித்தது. அதன் காரணத்தினால் நெல், தேங்காய் உள்ளிட்ட எல்லா விவசாய உற்பத்திகளிலும் வீழ்ச்சிகள் பதிவாகின.

இவ்வாறான நிலையில் இந்நாட்டு வளிமண்டலவியல் திணைக்களம், "கடந்த வருடம் எதிர்பார்க்கப்பட்ட மழைவீழ்ச்சி சில பிரதேசங்களுக்கு கிடைக்கப் பெறவில்லை என்றும் இவ்வருடம் ஜனவரி மாதத்தில் அதிகளவு மழைவீழ்ச்சி கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் தென்படவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கின்றது.

ஆனால் வருடத்தின் முதல் மூன்று நான்கு மாதங்கள் இலங்கைக்கு அதிக மழைவீழ்ச்சி கிடைக்கப் பெறுவதில்லை. இது வழமையானது. அதனால் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை இவ்வருடமும் இந்நாட்டின் விவசாய மற்றும் பெருந்தோட்ட உற்பத்தித் துறைகள் எதிர்கொள்ளக் கூடிய அச்சுறுத்தல் காணப்படுகின்றது.

விவசாய மற்றும் பெருந்தோட்ட உற்பத்திகளைப் பிரதான பொருளாதார மூலங்களாகக் கொண்ட ஒரு நாட்டுக்கு காலநிலை மாற்றம் தொடர்ந்தும் தாக்கமாக அமையுமாயின் அது அந்நாட்டின் பொருளாதாரத்தில் பலவிதமான பின் விளைவுகளை ஏற்படுத்துவதைத் தவிர்க்க முடியாது.

அதன் காரணத்தினால் கிடைக்கப் பெறும் தண்ணீரைக் கொண்டு உச்ச பயனைப் பெற்றுக் கொள்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் அண்மைக் காலமாக சொற்ப நேரத்தில் அளவுக்கு அதிகமான கனத்த மழை பொழியும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

அதன் விளைவாக வெள்ள நிலைமையும் கூட ஏற்படுகின்றது. இதனால் கிடைக்கப்படும் தண்ணீரில் பெரும்பகுதி எவ்விதத்திலும் பயன்படுத்தப்படாது கடலில் கலக்கின்றது. இதனைத் தவிர்த்து கிடைக்கப் பெறும் நீரைக் கொண்டு உச்ச பயனைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நீர் முகாமைத்துவத் திட்டம் குறித்து அவசரமாகக் கவனம் செலுத்த வேண்டும்.

அது மிகவும் அவசியமானது. இல்லா விட்டால் எதிர்காலத்தில் விவசாய மற்றும் பெருந்தோட்ட உற்பத்தித் துறைகளில் ஏற்படும் தாக் கங்களுக்கு ஈடு கொடுக்க முடியாத நிலைமை ஏற்படும்.

**மர்லின் மரிக்கார்**



யாழ். கட்டுவன் மேற்கு தெல்லிப்பழை நாச்சிமார் அம்பாள் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது சங்காபிஷேக பிரதமகுரு சிவஸ்ரீ பாஸ்கர ரவிக் குருக்களால் ஆலய அறங்காவலர்களான தலைவர் பொ.பகீரதனுக்கு அருட் பணிச் செம்மல் விருதும் செயலாளர் க. மாலினிக்கு அருட்பணித் திலகம் பட்டமும் சிவநெறிச் செல்வர் எனும் உயர் விருதும் வழங்கப்பட்டது.

# 63 வருடங்களின் பின்னர் அரசாங்கத்தின் நிதி முதன்மை கணக்கில் மேலதிக தொகை

(கொழும்பு)

அரசாங்கத்தின் வெற்றிகரமான நிதிக்கொள்கையின் காரணமாக 63 வருடங்களின் பின்னர் அரசாங்கத்தின் நிதி முதன்மை கணக்கில் மேலதிகமாக தொகை இருப்பதாக நிதி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கத்தின் வெற்றிகரமான வருமான செலவு முகாமைத்துவத்தின் காரணமாக 63 வருடங்களுக்கு பின்னர் வரவு-செலவுத் திட்டத் தில் அரசநிதி முதன்மை சமநிலை 21.9 பில்லியன் ரூபா மேலதிகமாக பதிவாகியுள்ளது.

1954ஆம் ஆண்டிலேயே சுதந்திர இலங்கையில் முதன்முறையாக வரவு-செலவுத் திட்ட த்தில் நிதி முதன்மை சுட்டிக்காட்டப்பட்டது. மொத்த தேசிய உற்பத்தியில் இது 0.5 சதவீதமாகும். பின்னர் 1956 ஆம் ஆண்டில் மொத்த தேசிய உற்பத்தியில் 2.2 சதவீதமாக வரவு-செலவுத்திட்டத்தில் மேலதிக தொகையாக காணப்பட்டது. (இ-7)

## மதுபானத்தை வழங்கி வாக்கு கேட்கும் கலாசாரம் எமக்குத் தேவையில்லை

### அமைச்சர் திகாம்பரம் தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிக்கவுள்ள எமது மக்களுக்கு மதுபானத்தை வழங்கி வாக்கு கேட்கும் கலாசாரம் எமக்குத் தேவையில்லை என, தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் மலைநாட்டு புதிய கிராமங்கள் தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பொகவந்தலாவ தண்டாயுதபாணி கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இம்முறை இடம்பெறுகின்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர்கள் ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிடுகின்றனர்.

ஆகவே ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்கள் இந்த தொகுதி வாரியான தேர்தலில் விட்டு கொடுப்பு இருக்க வேண்டும்.

இன்று எங்கு பார்த்தாலும் தேசிய பாடசாலைகள் காணப்படுகின்றன. கடந்த அரசாங்கத்தின் போது, நுவரெலியா மாவட்டத்தில் ஒரு தேசிய பாடசாலையை அமைக்கும் நோக்கில் மகிந்த ராஜபக்ஷவோடு, பேசிய போது தேசிய பாடசாலை அமைப்பதற்கு அனுமதியையும் வழங்கியிருந்தார்.

ஆனால் அப்போது உள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரசலின் தலைவர் பிரதேசத்தில் உள்ள அனைத்து பாடசாலை அதிபர்களிடம் கடிதம் ஒன்றில் கையொப்பம் பெற்று வந்து பாராளுமன்றத்தில் வைத்து அந்த திட்டத்தினை இல்லாமல் ஆக்கப்பட்டதாக தெரிவித்தார்.

இதேவேளை தோட்ட தொழிலாளர்களின் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவர்கள் இன்று மௌனிகளாக இருக்கிறார்கள். ஆனால் நான் ஒன்று சொல்லிக் கொள்கிறேன். நான் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை.

தொழிலாளர்களுடைய நிலுவை பணத்திற்கு தடையாக இருக்கவில்லை. இந்திய அரசாங்கம் வீடமைப்பு திட்டத்தை அவர்களுக்கு வழங்கியதாக பிரசாரம் செய்து வருகிறார்கள். ஏன் அதனை முன்னெடுக்கவில்லை. நாங்கள் ஒவ்வொரு தோட்டங்களிலும் வீட்டுத் திட்டத்தினை முன்னெடுத்து வருவதாக தெரிவித்தார். எனவே, ஐக்கிய தேசியக் கட்சியின் யானை சின்னத்திற்கு வாக்களித்து அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் கைப்பற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பண்டாரநாயக்கவின் 119வது ஜனன தின நிகழ்வு நேற்று



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரான அமரர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவின் 119 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இடம்பெற்றது.

காலி முகத்திடலில் அமைந்துள்ள பண்டாரநாயக்கவின் சிலைக்கருகாமையில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் எஸ். டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவின் உருவச்சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா , மகிந்த அமரவீர, சுசில் பிரேமஜயந், துமிந்த திஸாநாயக்க உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாட்டாளர்கள் சிலரும் மலரஞ்சலி செலுத்தினர்.

பண்டாரநாயக்காவின் மூத்த மகளான, திருமதி சுநேத்ரா பண்டாரநாயக்கவின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்களும் இந் நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் நான்காவது பிரதமரான சாலமன் வெஸ்ட் ரிட்ஜ்வே டயஸ் பண்டாரநாயக்கா, 1899 ஜனவரி 08 ஆம் திகதி பிறந்தார். 1959 ஆம் ஆண்டு செப்டெம்பர் 26 ஆம் திகதி புத்த பிக்கு உடை அணிந்த ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வென்னப்புவ பிரதேசத்தில் மோதலால் மூவர் காயம்

### ஐந்து பேர் கைது

(கொழும்பு)

சிறிகம்பள பிரதேசத்தில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியொன்றின் பின்னர் இருதரப்பினருக்கிடையே ஏற்பட்ட மோதலின் காரணமாக கூரிய ஆயுதங்களால் தாக்குதல் நடத்தி காயத்திற்குள்ளாக்கியமை தொடர்பில் நேற்று அதிகாலை ஐவர் கைது செய்யப்பட்டதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறிகம்பள பகுதியை சேர்ந்த 20 - 25 வயதுக்குட்பட்ட இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை வாள் மற்றும் கூரிய ஆயுதங்களால் தாக்குதலுக்குள்ளான இருவர் மாரவில வைத்தியசாலையிலும் ஒருவர் சிலாபம் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## மூதாட்டியின் சடலத்துக்கு துணையாக நின்றது நாய்



தன்னை வளர்த்த 70 வயதான மூதாட்டியின் சடலத்தை, அவ்வீட்டில் வளர்க்கப்பட்ட நாய், சில நாட்களாகப் பாதுகாத்து வந்த நெஞ்சை உருக்கும் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

ஒரு சில பிள்ளைகள் தங்களுடைய வயதான தாய், தந்தையை அநாதைகளாக, விட்டுவிட்டுச் சென்றுவிடுகின்ற இந்தக் காலகட்டத்தில், சடலத்தை பாதுகாத்த நாய் தொடர்பிலான, அந்த நெஞ்சை உருகவைக்கும் சம்பவமொன்று பதுளையிலேயே இடம்பெற்றுள்ளது. பதுளை - நெலும்கம வித்தியாலத்துக்கு முன்பாக அமைந்துள்ள வீட்டில் வளர்க்கப்பட்ட நாயே, இவ்வாறு செய்துள்ளது.

குறித்த வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசுவதாக கடந்த 6 ஆம் திகதி மாலை 6 மணியளவில், அயல்வாசிகள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

விரைந்து செயற்பட்ட பொலிஸார், வீட்டின் கூரைகளை உடைத்து உள்ளே சென்ற போது, அவ்வீட்டில் வசித்த மூதாட்டி இறந்து கிடந்துள்ளார். அந்த மூதாட்டியின் சடலத்துக்கு அருகில், நாயொன்று காவல் காத்துக்கொண்டிருந்துள்ளது.

வீட்டுக்குள் குதித்த, பொலிஸார் முன்கதவை திறந்ததும், அந்த நாய், முன் கதவுக்கு முன்பாக போய் நின்றுள்ளது.

இந்நிலையில், சடலம் மீதான நீதவான் விசாரணை, பதுளை நீதவான் ஆனந்த மொரகொடவின் முன்னிலையில் இடம்பெற்றது. அப்போது, அந்த வீட்டு வாசலில், அந்த நாய், நின்றுகொண்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். நித்திரையில் இருந்தவாறே இவர் மரணித்திருக்கலாம் என்றும், இவர் உயிரிழந்து பல நாட்கள் சென்றிருக்கலாம் எனவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை "தான் கொழும்பு-தலவத்துகொட பகுதியில் உள்ள வீட்டில் பணிபுரிவதாகவும், தனது மனைவிக்கு துணையாக நாய் மட்டுமே இருந்ததாகவும் உயிரிழந்த பெண்ணின் 71 வயதான கணவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## ஆயுர்வேத மருந்துப் பாவனை விழுமிய திட்டக் கோவை பதிப்பு வெளியீடு

(கொழும்பு)

ஆயுர்வேத மருத்துவத்தின் மருந்துப் பாவனை விழுமிய திட்டக் கோவையின் பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான நிகழ்வு நாரஹேன்பிட்டியிலுள்ள தேசிய இரத்த பரிமாற்றுகை நிலையத்தில் இடம்பெற்றது.

இந்தத் திட்டக் கோவையின் முதல் பிரதி சுகாதார துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்னவிடம் கையளிக்கப்பட்டது.

40 வருடங்களின் பின்னர் திருத்தியமைக்கப்பட்டு இது வெளியிடப்பட்டுள்ளது.



ஆயுர்வேத மருந்துகளின் தரத்தை மேம்படுத்தி சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ற வகையில் விநியோகிப்பது இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். (இ-7)

## மருத்துவ அதிகாரிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அட்டன் - தலவாக்கலை - ஹொலிரூட் தோட்ட வைத்திய அதிகாரி மற்றும் தோட்ட மருத்துவ தாதி ஆகியோரது அலட்சியப் போக்கை கண்டித்தும், சுகாதார சேவையை மேம்படுத்த வலியுறுத்தியும் நேற்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஹொலிரூட் தோட்டத்தைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்ற அதேவேளை வேலைநிறுத்தப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது. (இ-7)




# மன உறுதி



ஒரு சமயம் சுவாமி விவேகானந்தர் லண்டன் மாநகருக்குச் சென்றிருந்தார். அங்கு அவரது நண்பர் ஒருவரின் பண்ணை வீட்டில் தங்கியிருந்தார். அந்தப் பண்ணை வீடு மிகப் பெரிய நிலப்பரப்பில், இயற்கை எழில் சூழ்ந்த இடத்தில் இருந்தது. அங்கே நிறைய மாடுகள் வளர்க்கப்பட்டன.

ஒரு நாள்மாலை, பண்ணை மைதானத்தில் விவேகானந்தர் நடந்து சென்று கொண்டிருந்தார். அவருடன் நண்பரும், நண்பரின் மனைவியும் நடந்து சென்று கொண்டிருந்தனர். அப்போது, சற்றும் எதிர்பாராதவிதமாக ஒரு மாடு அவர்களை நோக்கி சீறிப் பாய்ந்து வந்தது. அதன் மூர்க்கத்தனமான ஓட்டத்தைப் பார்த்து பயந்து போன நண்பரின் மனைவி, அப்படியே மயங்கி விழுந்துவிட்டார்.

நண்பர் மனைவியைத் தூக்க முயன்றார். அப்போது மாடு அவர்களை நெருங்கி விட்டது.

நண்பருக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. இன்னும் சில நொடிகள் அங்கே இருந்தால் மாட்டின் கொம்புகளுக்கு இரையாக நேரிடும் என்பதை உணர்ந்த நண்பர், தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள எழுந்து வேறு திசையில் ஓடினார்.

ஆனால், விவேகானந்தர் அப்படி இப்படி அசையாமல் ஆணி அடித்தது போல் அந்த இடத்திலேயே நின்றுவிட்டார்.

பாய்ந்து வந்த மாடு கீழே விழுந்து கிடந்த நண்பரின் மனைவியையும் விவேகானந்தரையும் விட்டு விட்டு, ஓடிக் கொண்டிருந்த நண்பரைத் துரத்தியது.

அதிர்ஷ்டவசமாக ஒரு கட்டடத்திற்குள் புகுந்து தப்பினார் நண்பர். அதன் பிறகே பண்ணை ஊழியர்கள் ஓடி வந்து மாட்டைப் பிடித்துக் கட்டிப் போட்டனர்.

விவேகானந்தர் அதன் பிறகே அந்த இடத்தை விட்டு அசைந்தார். அங்கு வந்த நண்பருக்கோ ஒரே வியப்பு. அப்போது நண்பரின் மனைவியும் மயக்கம் தெளிந்து எழுந்தார்.

"சிறிது கூட பயமே இல்லாமல் அந்த ஆபத்தான நேரத்திலும் ஒரே இடத்தில் உறுதியாக உங்களால் எப்படி நிற்க முடிந்தது?" என்று கேட்டார் நண்பர்.

அதைக் கேட்டு மெல்லப் புன்னகைத்த விவேகானந்தர், "நான் வித்தியாசமாக எதையும் செய்து விடவில்லை. வருவது வரட்டும் சமாளிப்போம் என்ற ஒருவிதமன உறுதியுடன் நின்றுவிட்டேன்.

ஓடுபவரைக் கண்டால் துரத்திச் செல்வது மிருகங்களுக்கு உரிய குணம்.

அதனால் தான் மாடு என்னை விட்டு விட்டு, ஓடிக் கொண்டிருக்கும் உங்களைத் துரத்தியது" என்று முடித்தார்.

உயிருக்கு ஆபத்தான நேரத்தில் கூட, அதைக் கண்டு பயந்து ஓடாமல், வருவது வரட்டும் என்ற மன உறுதி பெற்றிருந்த சுவாமி விவேகானந்தரைப் பார்த்துப் பெரிதும் வியந்தார் நண்பர்.




- ❖1431- ஜோன் ஒஃப் ஆர்க் மீதான முன் விசாரணைகள் ஆங்கிலேயர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நீதிமன்றத்தில் ஆரம்பமானது.
- ❖1707- ஸ்கொட்லாந்து மற்றும் இங்கிலாந்து பேரசுகளை இணைக்க இங்கிலாந்து நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தது.
- ❖1760-ஆப்கானியர்கள் மராதர்களைத் தோற்கடித்தனர்.
- ❖1768-பிலிப் ஆஸ்ட்லி என்பவர் முதன் முதலாக நவீன சர்க்கஸ் காட்சியை லண்டனில் நடத்தினார்.
- ❖1788- கனெடிகட் 5 ஆவது மாநிலமாக ஐக்கிய அமெரிக்காவில் இணைந்தது.
- ❖1793- ஜான் பியர் பிளன்சார் வாயுக்குண்டில் பறந்த முதல் அமெரிக்கர் ஆனார்.
- ❖1799- பிரித்தானியப் பிரதமர் வில்லியம் பிட் நெப்போலியனுக்கெதிரான போருக்கு நிதி சேர்ப்பதற்காக வருமான வரியை அறிமுகப்படுத்தினார்.
- ❖1816- ஹம்பிறி டேவி சுரங்கத் தொழிலாளர்களுக்காக வடிவமைக்கப்பட்ட டேவி விளக்கை வெற்றிகரமாகப் பரிசோதனை செய்தார்.
- ❖1857- கலிபோர்னியாவில் 7.9 ரிக்டர் நிலநடுக்கம் பதியப்பட்டது.
- ❖1858- டெக்சாஸ் குடியரசின் கடைசித் தலைவர் அன்சன் ஜோன்ஸ் தற்கொலை செய்து கொண்டார்.
- ❖1861- அமெரிக்க உள்நாட்டுப் போர் தொடங்க முன்னர் ஐக்கிய அமெரிக்காவில் இருந்து இரண்டாவது மாநிலமாக மிசிசிப்பி பிரிந்தது.
- ❖1916- முதலாம் உலகப் போர்: ஓட்டோமானின் வெற்றியுடன் கலிபொலி நடவடிக்கை முடிவுக்கு வந்தது.
- ❖1951- ஐ.நாவின் தலைமையகம் நியூயோர்க் நகரில் அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது.
- ❖1964- மாவீரர் நாள்: பனாமா கால்வாயில் பனாமாவின் தேசியக்கொடியை இளைஞர்கள் ஏற்ற முயன்ற பின்னர் அமெரிக்கப் படைகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் சமர் மூண்டது. 21 பொதுமக்களும் 4 படையினரும் கொல்லப்பட்டனர்.
- ❖1974- யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு முடிவடைந்தது.
- ❖1986- பொலரொயிட் உடன்காப்புரிமப் பிரச்சினை முறிவடைந்ததைத் தொடர்ந்து கொடாக் நிறுவனம் உடனடி படம்பிடி கருவி தயாரித்தலை நிறுத்தியது.
- ❖1990- நாசாவின் கொலம்பியா விண்ணோடம் ஏவப்பட்டது.

### பிறப்புகள்

- ❖1554- பதினைந்தாம் கிரகோரி (திருத்தந்தை) (இ. 1623)
- ❖1902- ஓசேமரிய எஸ்கிரிவா, ஸ்பானிய மதகுரு, புனிதர் (இ. 1975)
- ❖1913- ரிச்சர்ட் நிக்சன், அமெரிக்காவின் 37வது அரசுத்தலைவர் (இ. 1994)
- ❖1917- டி. ஆர். ராமச்சந்திரன், தமிழ்த் திரைப்பட நடிகர் (இ. 1990)
- ❖1927- துரைசாமி உருத்திரமூர்த்தி, ஈழத்துக் கவிஞர் (இ. 1971)
- ❖1976- ராகவா லாரன்ஸ், இந்திய நடிகர், இயக்குநர், நடன அமைப்பாளர்

### இறப்புகள்

- ❖1848- கரோலின் எர்ழ்செல், செருமானிய-ஆங்கிலேய வானியலாளர் (பி. 1750)
- ❖1873- பிரான்சின் மூன்றாம் நெப்போலியன் (பி. 1808)
- ❖1924- சேர். பொன்னம்பலம் அருணாசலம், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி. 1853)
- ❖1961- எமிலி கிரீன் பால்ச், அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கப் பொருளியலாளர் (பி. 1867)
- ❖2013- ஜேம்ஸ் எம். புக்கானன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கப் பொருளியலாளர் (பி. 1919)
- ❖2013- ரிசானா நபீக், சவுதி அரேபியாவில் கழுத்து துண்டிக்கப்பட்டு மரண தண்டனைக்குள்ளாக்கப்பட்ட இலங்கைப் பணிப்பெண் (பி. 1988)

### சிறப்பு நாள்

- ❖வெளிநாடுவாழ் இந்தியர் நாள் (இந்தியா)
- ❖குடியரசு நாள் (சிறுப்ஸ்கா குடியரசு)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 180 | 140 | 200 | 150 |
| தக்காளி | 80 | 80 | 100 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 60 | 40 | 40 |
| கோவா | 50 | 80 | 100 | 80 |
| கரட் | 80 | 160 | 160 | 100 |
| பூசணி | 80 | 50 | 80 | 50 |
| புடோல் | 80 | 80 | 100 | 120 |
| வாழைக்காய் | 80 | 70 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 250 | 350 | 260 | 350 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 140 | 140 |
| பாகற்காய் | 250 | 240 | 300 | 250 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 200 | 140 | 100 | 180 |
| லீக்ஸ் | 250 | 200 | 200 | 200 |
| பீற்றூட் | 200 | 140 | 160 | 120 |
| கறிமிளகாய் | 300 | 240 | 200 | 280 |
| முருங்கைக்காய் | - | 800 | - | - |
| போஞ்சி | 80 | 180 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 120 | 70 | 50 |
| கீரை-1பிடி | 20 | 30 | 60 | 30 |
| தேசிக்காய் | 60 | 40 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 75 | 75 | 100 |
| இராசவள்ளி | 200 | 200 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 250 | - | - | 160 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 35 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 35 |
| ஈரப்பலா | 100 | 60 | 80 | 80 |

# கடன்பொறிகள் நிறைந்த சீனாவின் பட்டுப்பாதை

சீனாவின் பட்டுப்பாதைகள் மற்றும் கரையோரப் பட்டுப் பாதைகள் போன்றன இதன் வர்த்தகப் பாதைகள் அமைந்துள்ள மத்திய ஆசியா மற்றும் இந்திய மாக்கடலிற்குக் குறுக்காக மேற்கொள்ளப்படுகின்றன. பட்டு என்பது சீனாவின் வர்த்தகச் செயற்பாட்டில் மிகச் சிறிய பங்கையே கொண்டுள்ள போதிலும் இது சீனாவின் அடிப்படை வர்த்தகச் செயற்பாடாகக் காணப்படுவதால் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

மிங் சக்கரவர்த்தி ஜொங்கில் நியமித்த மொங்கோலிய முஸ்லிம் பிரதானியான அட்மிரல் செங்க் ஹீயால் தலைமை தாங்கப்பட்ட சீனக் கடற்படைக் கப்பலே 1404 மற்றும் 1433 காலப்பகுதியில் முதன் முதலாக இந்திய மாக்கடலின் ஊடாக பட்டுப் பாதையை உருவாக்கியது.

குறிப்பாக இந்தோனேசியா, மலேசியா, இலங்கை, கலிகட் போன்ற நாடுகளைச் சேர்ந்த அரசர்கள் மற்றும் இளவரசர்களைச் சிறைப்பிடித்து சீனாவிற்குக் கொண்டு வருவதற்காக அட்மிரல் செங்க் இந்திய மாக்கடலின் ஊடாகக் கப்பல் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

சீனாவின் உள்நோக்கங்களைப் புரிந்து கொண்ட இந்தோனேசியா சீனாவுடன் நெருக்கமான உறவைப் பேணுவதைத் தவிர்த்து வருகிறது. ஆனால் இலங்கைத் தீவின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட சீனா, இலங்கையைத் தனது வலையில் விழுத்தியது.

1406இல் கலிகட்டுக்குப் பயணம் செய்த அட்மிரல் செங்க், முன்னர் இடம்பெற்ற பிரச்சினை ஒன்றுக்கு பழிக்குப் பழி தீர்க்கும் முகமாக 1411இல் மிகப் பெரிய இராணுவப் படையுடன் இலங்கையை வந்தடைந்தார். இதனைத் தொடர்ந்து இலங்கையின் சில பகுதிகள் செங்கின் இராணுவத்தால் சூறையாடப்பட்டதுடன், அப்போது இலங்கையை ஆட்சி செய்த வீர அழகேஸ்வர மன்னன் புத்தரின் புனித தந்தத்துடன் நன்ஜிங்கிக் கொண்டு செல்லப்பட்டார்.

இந்த மன்னனுக்குப் பதிலாக சீனாவிற்குச் சார்பான பிறிதொருவர் மன்னனாக நியமிக்கப்பட்டார். இந்த ஆக்கிரமிப்புச் சம்பவம் இடம்பெற்று ஒருசில ஆண்டுகளின் பின்னர் வீர அழகேஸ்வர மன்னன் மீண்டும் அவரது நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்பட்டார்.

ஆனால் இவருடன் கொண்டு செல்லப்பட்ட புனித தந்தமானது ஆறு நூற்றாண்டுகளின் பின்னர் அதாவது 1960இல் அப்போதைய சீனப் பிரதமர் சூ என் லாயினால் சீனாவின் பாணியில் 'நல்லெண்ண சமிக்ஞையாக' இலங்கையிடம்கையளிக்கப்பட்டது. வரலாற்று ரீதியாக நோக்கில், சீனாவின் வர்த்தகமானது பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனியால் சுரண்டப்பட்டது.

இன்று கொழும்பில் சீனாவின் நிதியுதவி என்ற பெயரில் பல்வேறு கட்டுமான மற்றும் தொழிற்றுறைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கொழும்பிலுள்ள காலி பிரதான வீதி சீனாவின் நிதியில் கட்டப்பட்டது.

இதேபோன்று 1.4 பில்லியன் டொலர் பெறுமதியான துறைமுக நகரானது சீனாவின் நிதியில் அமைக்கப்படுகிறது. இங்கே சொகுசுக் குடியிருப்புக்கள், சூதாட்ட விடுதிகள், பூங்கா, விடுதிகள், அலுவலகக் கட்டடங்கள் போன்ற பல்வேறு வசதிகள் காணப்படுகின்றன. இவை அனைத்தும் விரைவில் இலங்கையின் கடன் சுமையை மேலும் அதிகரிக்கும்.



ஏற்கனவே சீனாவிடமிருந்து பெற்ற 'உதவியை' மீண்டும் செலுத்த முடியாது திணறும் இலங்கைக்கு இது மேலும் நெருக்கடியைக் கொடுக்கும். இவ்வாறான கட்டுமானங்கள் மற்றும் 'உதவி' மற்றும் இயற்கை வளங்களை சீனாவின் தொடர்பாடல் கட்டுமான நிறுவனம் மற்றும் சீனத் துறைமுக பொறியியல் நிறுவனம் ஆகிய இரண்டும் அபகரித்து வருகின்றன.

இவ்விரு நிறுவனங்களும் இவற்றின் ஊழல் செயற்பாடுகளால் உலக வங்கியால் தடை செய்யப்பட்டுள்ளன. கொழும்பில் அமைக்கப்பட்ட கொள்கலன் முனையத் திட்டமானது மிகவும் திட்டமிடப்பட்ட இலாபம் ஈட்டக் கூடிய சீனத் திட்டமாகக் காணப்படுகிறது. இதற்கப்பால் மகிந்த ராஜபக்ஷவின்சொந்த ஊரான அம்பாந்தோட்டையில் சீனாவினால் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இவை அனைத்தும் இலங்கை மீது கடன் சுமையை ஏற்படுத்தியுள்ளன. மேற்குலக நாடுகளின் அழுத்தத்திலிருந்து தன்னைப் பாதுகாப்பதற்கும் திட்டம் தொடர்பான இந்தியாவின் சந்தேகம் காரணமாகவும், மகிந்த ராஜபக்ஷ, சீனாவின் உதவியை வரவேற்றார்.

இவர் சீனாவிடமிருந்து பெற்ற 'உதவி' மூலம் அம்பாந்தோட்டைத் துறைமுகம், மின்னாலை, விமான நிலையம், கைத்தொழில் பூங்கா, துடுப்பாட்ட அரங்கம், விளையாட்டு மைதானம் போன்ற பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் திட்டங்கள் அனைத்தும் பொருளாதார ரீதியாக எவ்வித நன்மையையும் பயக்கவில்லை.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஒருசில கப்பல்களும் அம்பாந்தோட்டை விமான நிலையத்தில் ஒருசில விமானப் பறப்புக்களுமே இடம்பெறுகின்றன. இதேபோன்று விளையாட்டு அரங்கம் பயன்படுத்தப்படாத நிலையிலுள்ளது. பரிந்துரைக்கப்பட்ட கைத்தொழில் பூங்கா தொடர்பாக உள்ளூரில் வாழும் மக்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். இலங்கை அரசாங்க வருமானத்தின் 90 சதவீதம் சேவைக் கடன்களுக்காகச் செலவிடப்படுகின்றன.

சீனாவிடமிருந்து பெறப்பட்ட கடன்களை அடைக்க முடியாது இலங்கை திணறிய போது, அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் ஒருபகுதியானது சீனாவின் முழுமையான ஆளுகைக்கு கையளிக்கப்பட்டது.

இந்தியாவிடமிருந்து அதிருப்தி வெளியிடப்பட்டதையடுத்து, அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் செயற்பாட்டுக் கட்டுப்பாடானது இலங்கையிடம் தொடர்ந்தும் உள்ளதுடன் சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் போர்க்கப்பல்கள் போன்றன அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் சுதந்திரமாக நிறுத்தி வைக்கப்படமாட்டாது என இலங்கையினால் உத்தரவாதமளிக்கப்பட்டது.

சீனாவின் அடுத்த மூலோபாய இலக்காக திருகோணமலைத் துறைமுகம் அமையாது என்பதை உறுதிப்படுத்தும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது. காலத்திற்கு உகந்த தீர்வை முன்னெடுத்தமைக்கு பெற்றோலிய அமைச்சர் தர்மேந்திரா பிரதானிற்கு நன்றி.

பெற்றோலிய இறக்குமதி மற்றும் பெற்றோலியப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு திருகோணமலையைப் பயன்படுத்துவதற்கு இந்திய பெற்றோலிய கூட்டுத்தாபனம் உடன்படிக்கையை எட்டியுள்ளது. திருகோணமலையில் இக்கூட்டுத்தாபனத்தால் நவீன பெற்றோலிய ஆலை ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

மியன்மாரில் மேற்கொள்ளப்படும் சீனாவின் அணை மற்றும் பாதைத் திட்டமானது பெங்கல் வளைகுடாவிலுள்ள கிகியூ துறைமுக விரிவாக்கத்தை நோக்காகக் கொண்டதாகும். அத்துடன் இதன் ஊடாக இதற்கு அயலிலுள்ள யுனான் மாகாணத்திற்கு பெற்றோலிய மற்றும் எரிவாயுக் குழாய்கள், வீதி, தொடரூந்துப்பாதைகள் போன்றவற்றை ஒரு வலைப் பின்னலின் கீழ் இணைப்பதை சீனா நோக்காகக் கொண்டுள்ளது. ஆனால் சீனாவில் அதிகம் தங்கியிருப்பது தொடர்பாக மியன்மார் விழிப்புடன் உள்ளது.

ஏனெனில் சீனாவின் சக்தித் திட்டங்கள் மற்றும் மியன்மாரின் விலைமதிப்பற்ற உலோகங்கள் மற்றும் கற்களை சீனா பயன்படுத்துவதில் ஆர்வமாக உள்ளமை போன்றன தனது நாட்டின் சூழலிற்குத் தீங்கை விளைவிக்கும் என்பது தொடர்பில் மியன்மார் விழிப்புடன் உள்ளது.

ஆனாலும் இந்தியா, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அயலிலுள்ள ஆசியன் நாடுகள் போன்றன மியன்மாருடன் மிகப் பலமான பொருளாதார உறவுகளை மேற்கொள்ளாவிட்டால் சீனாவை எதிர்ப்பதென்பது மியன்மாருக்கு கடினமானதாக இருக்கும். இதையொத்த அணுகுமுறையே நேபாளம் மற்றும் பங்களாதேஷில் சீனா தனது திட்டங்களை மேற்கொள்ளும் போது அவ்விரு நாடுகளுக்கும் தேவையாக இருக்கும்.

சீனாவின் "அனைத்துக் கால நிலை நண்பனான" பாகிஸ்தான், சீனா-பாகிஸ்தான் பொருளாதார நடைபாதைத் திட்டத்தை அமுல்படுத்துவதிலும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது. உயர்மட்டப் பேச்சுக்கள் இடம் பெற்றிருப்பினும் கூட, பாகிஸ்தானின் டயமர்-பாஷா அணைக்கட்டு போன்ற முக்கிய திட்டங்கள் இன்னமும் நிறைவு பெறாது முடக்க நிலையில் உள்ளன. சீனாவுடனான நிதி சார் உடன்படிக்கை எட்டப்படுவதில் பிரச்சினை ஏற்பட்டமையே இதற்கான காரணமாகும்.

பெசாவர் மற்றும் கராச்சி போன்ற இடங்களில் தொடரூந்துத் திட்டங்களை அமுல்படுத்துவதிலும் முரண்பாடுகள் காணப்படுகின்றன. தொழில்நுட்பப் பிரச்சினைகள் மற்றும் சீனக் கட்டுமானத் திட்டங்களில் உள்ளூர் மக்களின் பங்களிப்பு பெறப்படாமை போன்றவையே பாகிஸ்தானில், சீனத் திட்டங்கள் முழுமையடையாமைக்கான காரணங்களாகும்.

சீனாவானது வேறு நாடுகளில் மேற்கொள்ளும் தனது திட்டங்களுக்கு தனது நாட்டுத் தொழிலாளர்களை அதிகம் பயன்படுத்துவதுடன் இயந்திரங்களையும் பயன்படுத்துகின்றது. பாகிஸ்தானில் சீனாவினால் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு உள்நாட்டு மக்களின் பங்களிப்பு குறைவாக இருப்பதால் இத்திட்டங்களுக்காகப் பெறப்பட்ட 50 பில்லியனுக்கும் அதிகமான கடன்தொகையை மீளவும் செலுத்துவதற்கு பாகிஸ்தானுக்கு எங்கிருந்து வளங்கள் கிடைக்கும் என வினாக்கள் எழுப்பப்படுகின்றன.

இதற்கும் மேலாக, குவடார் துறைமுகம் போன்ற தனது இறையாண்மை உள்ள இடங்களின் உரிமையை பாகிஸ்தான் விரைவில் இழக்க வேண்டிய நிலையேற்படலாம். மூலோபாய முக்கியத்துவம் மிக்க ஹெர்மூஸ் நீரிணைக்கு அருகில் சீனா தனது இராணுவத் தளங்களை அமைப்பதற்கு பாகிஸ்தானின் இறையாண்மை மிக்க இடங்கள் பயன்படுத்தப்படும் நிலை உருவாகும்.

ஆங்கிலத்தில் - G.PARTHASARATHY
வழிமூலம் - The hindu business line
மொழியாக்கம் - நித்தியபாரதி.

# கடன் சுமையைக் குறைக்காவிட்டால் நாடு அழிவுப் பாதையில் பயணிக்கும்

## பிரதமர் ரணில் எச்சரிக்கை



(கொழும்பு)

பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாமல்மகிந்த ராஜபக்ஷ பயந்து ஓடினார். கிராம பொருளாதாரத்தை பொறுப்பேற்க தவறினார். அவ்வாறான ஒருவருக்கு மீண்டும் கிராமங்களை வழங்குவதா? அவருக்கு கிராமங்களை கட்டியெழுப்ப முடிந்திருக்க வேண்டும். ஏன் தப்பித்து ஓடினார்? எனவே தப்பித்து ஓடிய மகிந்த ராஜபக்ஷ விற்கு கிராமத்தின் பலத்தை மீண்டும் வழங்கினால் என்ன நடக்கும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பினார்.

உள்ளூராட்சி மன்றங்களில் தலைவர்கள் ஏதாவது குற்றச்சாட்டுக்கு உள்ளானால் விசாரணைக்கு முகங்கொடுக்க நேரிடும் என்பதனை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். துஷ்பிரயோகம் செய்து சிக்குண்ட மொட்டு சின்னத்திற்கு வாக்களித்து பிரயோசனம் கிடையாது என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் விசேட மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு கெம்பல் மைதானத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் மிகவும் முக்கியமானது. இது வெற்றிபெற வேண்டிய தேர்தலாகும். எமது பலத்தை காண்பிக்க இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவது கட்டாயமாகும். நாம் நாட்டின் அதிகாரத்தை பெற்றுக்கொண்டோம். தற்போது கிராமத்தின் அதிகாரத்தைப் பெற வேண்டும். நாட்டின் பலத்தையும் கிராமத்தின் பலத்தையும் நாட்டினதும் இளைஞர்களினதும் எதிர்கால நலனுக்காகவே கேட்கின்றோம். நன்றாக வாழும் சூழலை ஏற்படுத்துவதற்காகவே ஜனாதிபதி தேர்தலில் ஒன்றிணைந்தோம். அதற்காகவே தற்போது இந்தத் தேர்தலில் ஒன்றிணைந்துள்ளோம்.

இரண்டு வருடங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்கின்றனர். அது தொடர்பில் ஞாபகமூட்ட நான் விரும்புகின்றேன். 2017 ஆம் ஆண்டு நடத்த வேண்டிய ஜனாதிபதித் தேர்தலை மகிந்த ராஜபக்ஷ இரு வருடங்களுக்கு முன்னரே நடத்த முனைந்தார். ஏனெனில் நாட்டின் பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சி கண்டது. கிராமத்தின் பொருளாதாரமும் நகர கேந்திர பொருளாதாரமும் முழுமையாக வீழ்ச்சி கண்டன. நாட்டின் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்யும் பலம் மகிந்த ராஜபக்ஷவிற்கு இல்லாத காரணத்தினால் அவசரமாக தேர்தலுக்கு சென்றார். என்றாலும் எதிர்பாராத விதமாக தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வி கண்டார். நாட்டினதும் இளைஞர்களினதும் எதிர்காலத்தை இல்லாமல் செய்தார்.

எனினும் கடந்த இரு வருடத்தில் வீழ்ச்சி அடைந்த பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைமைக்கு கொண்டு வரவே நாம் முனைந்தோம். தற்போது கடன் சுமையை குறைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இதன்படி கடன் அடைத்து வருகின்றோம். கடன் செலுத்தாவிட்டால் எமது நாடு அழிவுப் பாதையை நோக்கி பயணிக்கும் நிலைமை ஏற்படும். இதன்படி இதிலிருந்தே எமது வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

முன்பு இந்தத் தேர்தல் முறைமையை கொண்டு வர எமக்கு முடியாமல் போனது. எனினும் தற்போது அனைத்து சிறிய கட்சிகளையும் இணக்கப்பாட்டுக்கு கொண்டு வந்து இந்த முறைமையை அமுலுக்கு கொண்டு வந்தோம். இம்முறை கிராமத்தை ஆட்சி செய்ய பல புதிய முகங்கள் போட்டிக் களத்திற்கு வந்துள்ளன. அடுத்த தேர்தலில் இன்னும் அதிகமான புதியவர்கள், இளைஞர்கள் போட்டியிடுவர். அதேபோன்று பெண் பிரதிநிதித்துவத்தை 25 வீதமாக அதிகரித்தோம்.

அம்பாந்தோட்டை முதல் கண்டி வரைக்கும் பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி முன்னெடுக்கவுள்ளோம். மத்திய அதிவேக வீதிக்கு முன்னைய ஆட்சியின் போது நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. இந்நிலையில் தற்போது நாம் அதனை ஆரம்பித்துள்ளோம். தெற்கில் வீதிகள் பூர்த்தி செய்யப்படவில்லை. அம்பாந்தோட்டை துறைமுகம் பாரிய நட்டத்தில்இயங்கியது. இதனை நாம் மாற்றி அமைத்தோம்.

டுபாய், சிங்கப்பூர் போன்ற அபிவிருத்தியை நாட்டில் கொண்டு வரவுள்ளோம். காலி, குருநாகல், களுத்துறை உட்பட பல பகுதிகளில் பல்வேறு வர்த்தக வலயங்களை உருவாக்கவுள்ளோம். இதன் ஊடாக தொழில் வாய்ப்பினை அதிகரிக்கவுள்ளோம். திருகோணமலையையும் கண்டியையும் ஒன்றிணைக்கவுள்ளோம். மேலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவுள்ளோம்.

எனவே நாம் அடித்தளமிட்ட திட்டங்களைப் பாதுகாத்து முன்கொண்டு செல்ல வேண்டும். எனவே பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாமல் தப்பித்து ஓடிய மகிந்த ராஜபக்ஷவிற்கு கிராமத்தின் பலத்தை மீண்டும் வழங்கினால் என்ன நடக்கும். பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாமல் மகிந்த ராஜபக்ஷ பயந்து ஓடினார். கிராமப் பொருளாதாரத்தை பொறுப்பேற்க தவறினார். அவ்வாறான ஒருவருக்கு மீண்டும் கிராமத்தை வழங்குவதா? அவருக்கு கிராமத்தைக் கட்டியெழுப்ப முடிந்திருக்க வேண்டும். ஏன் தப்பித்து ஓடினார்? அவர் தப்பித்து ஓடுவதற்கு இயலாமையே காரணமாகும்.

முன்னைய ஆட்சியின் ஊழல் மோசடி தொடர்பான 19 விசாரணைகள் தொடர்பில் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். 40 விசாரணைகளை பொலிஸில் செய்கின்றனர். தாமதம் உள்ளது. இதன்படி துரிதமாக விசாரணை செய்ய நீதிமன்றம் உருவாக்கவுள்ளோம். இந்த விடயத்தில் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இவர்களினால் கிராமத்தைக் கட்டியெழுப்ப முடியாது.


எமது கட்சியினருக்கான அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளானவர்களுக்கு இன்னும் தீர்வு கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டுள்ளது. எம்மால் அனைத்துப் பிரச்சினையையும் தீர்க்க முடியவில்லை. எனினும் துரிதமாக அனைத்துப் பிரச்சினையையும் தீர்ப்போம். இந் நிலையில் நாட்டின் பிரச்சினைகளை தீர்த்து வருவதுடன் அபிவிருத்தியையும் முன்னெடுத்து வருகின்றோம். இந்நிலையில் சிறிது ஓய்வுக்காக நான் நடனமும் ஆடினேன்.

அரச தொழில் மாத்திரமின்றி தனியார் தொழில் வாய்ப்புக்களையும் ஏற்படுத்துவோம். வடக்கு-கிழக்கு மற்றும் மலையகம் உட்பட நாடளாவிய ரீதியில் வீடமைப்பு திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

ஊழல், மோசடி மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபட மாட்டோம் என்ற சத்தியப்பிரமாணம் எடுக்கத் தேவையில்லை. நாம் கிராமத்திற்கும் நல்லாட்சியை கொண்டு செல்வோம். உள்ளூராட்சி மன்றங்களில் தலைவர்கள் ஏதாவது குற்றச்சாட்டுக்கு உள்ளானால் விசாரணைக்கு முகங்கொடுக்க நேரிடும் என்பதனை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். துஷ்பிரயோகம் செய்து சிக்குண்ட மொட்டுச் சின்னத்திற்கு வாக்களித்து பிரயோசனம் கிடையாது. அவர்களினால் கிராமத்தைக் கட்டியெழுப்ப முடியாது. கிராமத்தின் ஆட்சி அதிகாரத்தை ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுத் தர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# சீனக் கடலில் எண்ணெய் கப்பல் வெடித்து சிதறும் ஆபத்து

### கடும் சுற்றுச்சூழல் பாதிப்பு அபாயம்



(பீஜிங்)


சீனக் கடல் பகுதியில் மற்றொரு கப்பலுடன்மோதியதால் சேதமடைந்த ஈரான் எண்ணெய்க் கப்பல் வெடித்து சிதறும் நிலை உள்ளதால், அங்கு பெருமளவு சுற்றுச்சூழல் ஆபத்து ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

ஈரானிலிருந்து தென்கொரியாவுக்கு கச்சா எண்ணெய் ஏற்றிக் கொண்ட டேங்கர் கப்பல் ஒன்று, கடந்த சனிக்கிழமை கிழக்கு சீனக் கடல் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது, ஹொங்கொங்கைச் சேர்ந்த மற்றொரு கப்பலுடன் எதிர்பாராத விதமாக மோதியது. அந்த கப்பலில் 1,36,000 தொன்கள் அளவிற்கு எண்ணெயும், ஹொங்கொங் கப்பலில், தானியங்களும் இருந்தன.

இந்த விபத்தில் பலத்த சேதமடைந்த எண்ணெய் கப்பல் தீப்பிடித்து எரியத் தொடங்கியது. அந்த கப்பலில் இருந்த 30 ஈரானியர்கள் மற்றும் 2 வங்க தேசத்தவர்களின் நிலை பற்றிய விபரங்கள் வெளியாகவில்லை. ஹொங்கொங் கப்பலில் இருந்த சீனர்கள் மீட்கப்பட்டனர். மற்றவர்களை தேடும் பணி நடந்து வருகிறது.

எண்ணெய் கப்பலிலிருந்து வெளி வந்துகொண்டிருக்கும் தீ மூட்டம் காரணமாக அந்த கடல் பகுதி முழுவதும் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. மிகப் பெரிய தீ வளையம் சூழ்ந்தது போல் காட்சியளிக்கிறது. கறுப்புப் புகை மண்டலமாக அந்தப் பகுதி இருப்பதை சீன தொலைக்காட்சிகள் வெளியிட்டன. (இ-8)

# மொரகஹகந்த நீர்த்தேக்கம் மக்கள் பாவனைக்கு திறப்பு



(கொழும்பு)

நான்கு தசாப்தங்களின் பின்னர், நாட்டில் நிர்மாணிக்கப்பட்ட மிகப் பிரமாண்டமான பல்நோக்கு அபிவிருத்தி திட்டமான மொரகஹகந்த நீர்த்தேக்கத் திட்டம் ஜனாதிபதி மற்றும் பிரதமரால் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

மகாவலி இயக்கத்தின் 40 வருட நிறைவை முன்னிட்டு இடம்பெறும் அரச விழா அதனோடு இணைந்ததாக ஜனாதிபதியின் தலைமையில் பொல்கொல்ல அணைக்கட்டுக்கு அருகாமையில் இடம்பெற்றது.

மகாவலி பெருந்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பயணத்தில் முதலாவது திட்டமாக பொல்கொல்லை போவத்தென்ன அணைக்கட்டு நிர்மாணப் பணிகள் பிரதமர் டட்லி சேனாநாயக்க மற்றும் அப்போதைய காணி, நீர்ப்பாசன மின்சாரத் துறை அமைச்சர் சீ.பி.டி. சில்வா ஆகியோர்களினால் 1970 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 1976 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி சிறிமாவோ பண்டார நாயக்கவினால் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

3 இலட்சம் ஏக்கர் காணிகள் புதிதாக பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டு 15 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு நன்மையளிக்கும் அதேநேரம் மூன்று இலட்சம் பேருக்கு சுத்தமான குடிநீரை வழங்கும் மொரகஹகந்த - களுகங்கை பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அர்ப்பணிப்பு மற்றும் வழிகாட்டலின் பேரில் துரிதப்படுத்தப்பட்டதுடன், இது நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பாரிய பல் நோக்கு அபிவிருத்தி திட்ட மாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மானை இரையாக்க முயன்று காயமடைந்த மலைப்பாம்பு



(கொழும்பு)

இரையாக்கி கொண்ட மான் ஒன்றை விழுங்க முயற்சித்து படுகாயமடைந்த நிலையில் காணப்பட்ட மலைப்பாம்பு ஒன்றை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

பதவிய, சீயாய பிரதேசத்தில், மலைப்பாம்பு மான் ஒன்றை விழுங்க முயற்சிப்பதை கண்ட ஒருவர் அது குறித்து வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து அதிகாரிகள் அங்கு சென்ற போது மானை விழுங்க முயற்சித்த மலைப்பாம்பு படுகாயமடைந்த நிலையில் காணப்பட்டுள்ளது.

மலைப்பாம்பு பாதியாக விழுங்கியிருந்த இரையை கக்கியுள்ளது. அப்போது பாம்பின் வாய்ப் பகுதியில் படுகாயம் ஏற்பட்டுள்ளது.

காயமடைந்துள்ள மலைப் பாம்பு சிகிச்சைக்கு பின்னர் பதவிய காட்டில் விடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# 23 வயது இளைஞருக்கு ஆயுள் தண்டனை விதிப்பு

ஹெரோயின் போதைப் பொருளை தன்னகத்தே வைத்திருந்த குற்றச்சாட்டில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட இளைஞர் ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் கிஹான் குலதுங்கவால் இந்தத் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டுள்ளது.

கிரான்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய நபரொருவருக்கே இவ்வாறு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் திகதி கொழும்பு குற்றவியல் பிரிவால் கிரான்பாஸ் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 3 கிராம் 19 மில்லிகிராம் ஹெரோயினுடன் இந்த இளைஞர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இரட்டைக் குழந்தை...

விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபர் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் எனக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. அன்றைய தினம் மற்றொரு பெண்ணும் குழந்தை பிரசவித்தார். அவரது சிசு இறந்துவிட்டது. அதனால் வைத்தியசாலை உத்தியோகத்தர்களால் எனது இரட்டைக் குழந்தைகளில் ஒரு குழந்தை அந்தப் பெண்ணுக்கு மாற்றப்பட்டுவிட்டது என்று தாய் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

இந்தச் சம்பவம் 2005ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடம்பெற்றது. இதுதொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். விசாரணைகளை பொலிஸார் இழுத்தடித்தமையால் வழக்கு நீண்ட நாள்களாக கிடப்பில் போடப்பட்டது.

முறைப்பாட்டாளர் யாழ்ப்பாணத்தில் வசிக்கின்ற போதும், அவரால் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்ட மற்றைய பெண் வெளிநாட்டில் உள்ளார்.

யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் சி.சதீஸதரன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. வழக்கு விசாரணைகளைத் துரிதப்படுத்தி நீதிமன்றுக்கு அறிக்கை சமர்பிக்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு மன்று கட்டளையிட்டது.(ம-4,9)

## 10ஆம் திகதி...

இந்த அவசரக் கூட்டத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் நீல் இத்தவெல குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான விசேட வர்த்தமானி நேற்று அச்சிடப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

## டான் தொலைக்காட்சி...

நிறுவனத்தின் செய்திப் பிரிவின் பணிப்பாளர் தயா மாஸ்டர் என அழைக்கப்படும் வேலாயுதம் தயாநிதி யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மருத்துவ சோதனைகளின் பின் வீடு திரும்பியுள்ளார். (ம-4,9)

## இலங்கைக்கு அழுத்தம்...

கொள்கைகளில் இறுக்கமாக இருந்திருந்தால் சிங்கள தலைவர்கள் அதற்கேற்றவாறு நடந்திருப்பர். நாம் அவர்களின் நோக்கை மையமாக வைத்து சிந்திக்கத் தொடங்கியதால்த்தான் எமது உரித்துக்க ளைக் கொடுக்க அவர்கள் முன்வருகின்றார்கள் என தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையில் இலங்கைக்கு அழுத்தத்தை வழங்க தமிழ்த்தரப்பு தயாராக வேண்டும். இவ்வாறான அழுத்தங்கள் மூலமே சிங்களவர்களிடம் இருந்து தீர்வை பெற முடியும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். வாராந்த கேள்வி பதிலில் நேற்றைய தினம் முதலமைச்சரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் சுருக்கமான பகுதி தரப்படுகின்றது.

அரசியல் ரீதியான முன்னேற்றம் காணாமல் பொருளாதார முன்னேற்றம் காண்பது எமக்கெல்லாம் நன்மையைத் தரும் என்று கூறமுடியாது. 1983ஆம் ஆண்டின் முற்பகுதியில் கொழும்பில் தமிழ் வர்த்தகர்கள், முதலீட்டாளர்கள் என்றும் காணாத முன்னேற்றம் அடைந்திருந்தார்கள். ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்களைப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள். ஆனால் நடந்தது என்ன? ஜூலைக் கலவரத்தில் அத்தனை பேரினுடைய அல்லது அவர்களில் பெரும்பான்மையினருடைய கடைகள் எரிக்கப்பட்டன. வீடுகள் தகர்க்கப்பட்டன. வர்த்தகத் தமிழ் மக்கள் கூட இருந்த இடத்திலேயே எரிக்கப்பட்டு சாம்பலாகினர். ஆகவே அதற்கு முன்னர் ஏற்பட்ட பொருளாதார முன்னேற்றங்கள் யாவும் பூச்சிய நிலைக்குக் கொண்டுவரப்பட்டன. எமக்கென்று அதிகாரங்களைப் பெறாமல் பொருளாதார விருத்தியில் ஈடுபட்டோமானால் என்றென்றும் நாம் பெரும்பான்மையினர் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டேயிருக்க வேண்டியேற்படும். ஆகவே நாம் முன்னேறும் போது அம் முன்னேற்றத்திற்கு எதிரான அடிகளை வாங்கிக் கொண்டேயிருக்க வேண்டி வரும். 1981ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி அதிகாலையில் எமது அறிவுச் சுரங்கமே அடியோடு அழிக்கப்பட்டது. இது இன்னொரு முறை நடவாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

எம்மை நாம் பலப்படுத்திக்கொள்ள எமக்கென அதிகாரங்களைப் பெற வேண்டும். ஆனால் அதற்கு நாங்கள் பலமாக இருக்க வேண்டும். பலம் இல்லாது போனால் பெரும்பான்மையினர் தமது அதிகாரங்களைப் பகிர மாட்டார்கள். மலைநாட்டுத் தமிழ் மக்களின் தலைவர் சௌம்யமூர்த்தி தொண்டைமான் அவர்கள் தொழிற்சங்கப் பலத்தைக் கொண்டு தாம் இழந்த பல அதிகாரங்களை மீளப்பெற்றார். தம்பி பிரபாகரன் வன்முறையை நாடி ஈற்றில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட நிலையில் இருக்கின்றோம். ஆகவே அதிகாரங்களைத் திரும்பிப் பெற எமக்குப் பலம் அவசியம். பலம் இன்றேல் அதிகாரங்களைப் பெற முடியாது. அதிகாரம் இல்லையென்றால் நாம் பலமற்றவர்கள் ஆவோம். இது ஒரு கொடிய வட்டமாகும்.

முதலில் நாம் இதுவரையில் எதைக் கண்டுவிட்டோம் என்பதை ஆராய்வோம். பலதைக் கண்டுவிட்டோம். முதலாவது எமது இளைஞர்களின் துணிச்சல், விவேகம், ஈடுபாடு போன்றவை உலகறியச் செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது இலங்கையினுள் முடங்கிக் கிடக்க வேண்டிய தமிழ் மக்கள் உலகெல்லாம் இன்று பரந்து கிடக்கின்றார்கள். மூன்றாவது பரந்து கிடக்கும் எம்மவரில் பலர் உலகத்தில் பல துறைகளில் மேம்பட்ட பிற நாட்டவர்களை விஞ்சியவர்களாகப் பவனிவரக் கூடியதாக உள்ளது. நான்காவது அவர்களுள் பலர் பொருளாதார ரீதியாக உச்சக்கட்டத்தில் இருக்கின்றார்கள். ஐந்தாவது அவர்கள் வசிக்கும் அந்தந்த நாடுகளின் அதிகார வர்க்கத்துடன் எம்மவர் கிட்டிய உறவினைப் பேணி வருகின்றனர். ஆறாவது சர்வதேச ரீதியாக எமது இனம் மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்ட கடமையுணர்வுள்ள ஒரு இனம் என அடையாளம் காணப்பட்டுள்ளது. ஏழாவது எமது பிரச்சினைகள் உலகறியச் செய்யப்பட்டுள்ளன. இங்கு நடக்கும் அட்டூழியங்கள் உலகறியச் செய்யப்பட்டுள்ளன. போர்க் குற்றங்கள் உலக அரங்கில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

முன்னர் தமிழ்மக்களின் செல்வாக்கைக் குறைக்க வேண்டும் என்று எழுந்த சிங்கள வைராக்கியம் பின்னர் அதற்கும் அப்பால் சென்றுள்ளதை நாம் அவதானிக்க வேண்டும். தமிழர்கள் எமது அரசாங்க வேலைகளை எடுத்துவிட்டார்கள், அளவுக்கதிகமாக அவர்களின் செல்வாக்கு நாட்டில் பரவியுள்ளது அதைக குறைக்க வேண்டும் என்று தொடங்கியவர்கள் பின்னர் எமது கலை, கலாசார, பாரம்பரியங்களை அழிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு செயற்படத் தொடங்கினார்கள். இப்பொழுது சரித்திரத்தையே மாற்றி என்றென்றும் இந் நாடு எமதாகவே இருந்தது, இனிமேலும் இருக்கும் என்ற கருத்தைப் பரப்பிச் செல்கின்றார்கள்.

இந்தப் பின்னணியில்தான் எனது தீர்வு என்ன என்ற கேள்வி எழுகின்றது. தீர்வுகள் வேறு, தந்திரோபாய வழிமுறைகள் வேறு. வழிமுறைகள் எம்மால் அந்தரங்கமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஆனால் தீர்வுகள் வெளிப்படையாகக் கூறப்படலாம்.

தர்வுகள் பற்றி ஆராய முற்படும் போது முதலாவது எமக்கிருக்கும் பலம் ஆராயப்பட வேண்டும். அவையாவன:

1.ஐக்கிய நாடுகள் பிரேரணை - இது அரசாங்கத்தை சில வழிகளில் நிர்ப்பந்திக்கின்றது. அதை எடுத்துச் செல்லல் அவசியம்.

2.எமது புலம்பெயர்ந்தோர் செல்வாக்கு அதனை நாம் எமக்குச் சார்பாக பாவிக்க முன்வர வேண்டும்.

3.எமது புராதன பாரம்பரியமும் வரலாறும்-உலக அரங்கில் இது எம்மை அடையாளப்படுத்துகின்றது.

4.எமக்கெதிராக அரசாங்கத்தாலும் அரசாங்க படையினராலும் செயற்படுத்தப்பட்டுள்ள அநியாயங்களும் அட்டூழியங்களும் - (இவையும் எமது பலமே!)

5.சிங்கள மக்களிடையே ஏற்பட்டுள்ள மன மாற்றமும் விரக்தி நிலையும்-இதனையும் எமக்குப் பலமாகப் பாவிக்கலாம்.

6.அரசாங்கத்தின் ஆபத்தான பொருளாதார நிலை-இதன் காரணத்தால் சிங்கள மக்கட் தலைவர்கள் சில நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர்.

7.அரசாங்கத்தின் செயற்பாடுகளினால் மனவேதனை அடைந்திருக்கும் வல்லரசுகளின் மனோநிலை-இதை எமது பலத்திற்கு சாதகமாக மாற்றலாம்.

எமக்குப் பாதகமாக அமைந்திருப்பது முக்கியமாக எமது இயற்கைக்குணம். ஒத்து, ஒருமித்து, உடன் சேர்ந்து, ஒற்றுமையுடன் முடிவெடுக்க எம்மால் முடியாதிருக்கின்றது. தான கூறுவதை மற்றவர்கள் கேட்க வேண்டும் என்பதே எமது பெரும்பாலான தலைவர்களின் ஆசை. ஒவ்வொருவரும் அவ்வாறு நினைத்தால்ஏற்படுவது குழப்பமே. இந்தக் குழப்ப நிலை எம்மிடையே நீடித்து வருகின்றது. கொள்கைகளுக்கு முதனிலை கொடுத்து தனி நபர்களின் செல்வாக்கை முதனிலைப்படுத்தாது நாம அரசியலைக் கொண்டு போனால் எம்மால் எதையுஞ் சாதிக்க முடியும். கூர்ந்து பார்த்தீர்களானால் எமக்கு நாமே எதிரிகள். குதிரைககு கொம்பு கொடுக்காது விட்டது கடவுள் பிழையில்லை. கொடுத்திருந்தால் அது எவரையும் விட்டுவைத்திருக்காது. எங்களுள் முரண்படும் சுபாவத்தை எமக்குக் கடவுள் வேண்டும் என்றே தந்திருப்பதாக நான் உணர்கின்றேன். ஐக்கியத்துடன் சேர்ந்து வாழும் முறைமையை தமிழ் மக்கள், முக்கியமாக யாழ்ப்பாண மக்கள், கற்றிருந்தால் உங்கள் கேள்வியில் தொனிக்கும் மன விரக்திக்கு இடமில்லாமலே போயிருக்கும். விட்டுக்கொடுக்க நாங்கள் முன்வருவதில்லை. எனக்கு மூக்குடைந்தாலும் பரவாயில்லை மற்றவன் அடைய விரும்புவதை அவன் அடையக் கூடாது என்பதே எமது நிலைப்பாடு. எனக்கு இருகண்ணும் போனால் பரவாயில்லை அவனுக்கு ஒன்றேனும் பழுதாய் போக வேண்டும் என்பது எமது இயல்பு. இந்தக் குறைபாடு நீக்கப்பட வேண்டும்.

மனித உரிமைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையாளர் ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் இலங்கை அரசாங்கம் செய்யவேண்டிய பணிகளின் கால அட்டவணை ஒன்றைக் கேட்டிருந்தார். அதை நாம் அனுப்பி வைத்தோமோ நான் அறியேன். அதை அனுப்பி அரசாங்கத்திற்குக் காலக்கெடு விதித்தல் அவசியம். அரசாங்கம் எம்முடன் முறுகல் நிலையை அடையக் கூடும் என்று அப்பணியை உதாசீனம் செய்தால் எம்மையே அது பாதிக்கும். நெருக்குதல் இல்லாது எந்தச் சிங்கள அரசியல் தலைவரும் தமிழ் மக்களுக்கு எதையுந் தரப்போவதில்லை. என்னுடைய ஐம்பது வருடத்திற்கு மேலான நெருங்கிய நண்பரும் தற்போது உறவினருமான வாசுதேவ நாணயக்கார கூட தரப்போவதில்லை. ஒரு காலத்தில் தமிழ் மக்களால் மிக நெருங்கிய நண்பராகப் போற்றப்பட்டவர் அவர் இப்பொழுது அவர் நிலைவேறு. அவரைக் குறை கூற முடியாது.

இன்றைய அரசியல் நிலை அப்படி. நாங்கள் எங்கள் குறிக்கோள்களில், கொள்கைகளில் இறுக்கமாக இருந்திருந்தால் சிங்கள தலைவர்கள் அதற்கேற்றவாறு நடந்திருப்பர். நாம் அவர்களின் நோக்கை மையமாக வைத்து சிந்திக்கத் தொடங்கியதால்த்தான் எமது உரித்துக்களைக் கொடுக்க அவர்கள் முன்வருகின்றார்கள் இல்லை. பாதிக்கப்பட்டவர்கள நாங்கள். பரிகாரம் தேடுபவர்கள் நாங்கள். எங்கள் பிரச்சினையை மையமாக வைக்காது பெரும்பான்மையினரின் விருப்பு வெறுப்புக்களை மையமாக வைத்து எமது காய்களை நகர்த்துவது தோல்வியையே தரும். அவர்கள் விருப்பு வெறுப்புக்கள் பிழையான அத்திவாரத்தில் கட்டப்பட்டவை என்பதை முதலில் நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகவே அவர்களின் நோக்குப் பிழை என்பதை நாம் எடுத்துக்கூறி சர்வதேசம் அவர்களைக் கேள்வி கேட்கும் நிலையை நாம் ஏற்படுத்த வேண்டும். எமது உரிமைகளை, அதிகாரங்களை பறித்தெடுத்துவிட்டு எம்முடன் பேரம் பேசுபவர்களுக்கு நாம் உண்மையை எடுத்தியம்புவதில் எந்தப் பிழையும் இல்லை. இதன் நிமித்தம் எமக்கெதிராகப் பல சதி நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கக்கூடும். பதிலடிக்காக எம்மை மாண்பிழக்க வைக்கக்கூடும். என் செய்வது? அவற்றை ஏற்றே நாம் முன்னேற வேண்டும். ஏனென்றால் எமது கோரிக்கை நியாயம் பால்ப்பட்டது நீதி பால்ப்பட்டது என தெரிவித்துள்ளார். (ம-4)

## தேர்தல் பிரசாரத்திற்காக...

காட்டியுள்ளது.

அலரி மாளிகை பிரதமரின் உத்தியோக பூர்வ இல்லம் எனவும், இங்கு தேர்தல் பிரசாரம் நடத்த இடமளிக்கப்படக் கூடாது எனவும் தெரிவித்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்திலும் அலரி மாளிகை தேர்தல் பிரசாரப் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளது. தற்போதைய அரசாங்கமும் கடந்த அரசாங்கத்தை பின்பற்றி பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். (ம)

## வெவ்வேறு குற்ற...

ங்களையும் கைப் பற்றியுள்ள நிலையில் சந்தேகத்தின் அடிப்படையில் பெண்ஒருவர் உட்பட 04 பேரைக் கைது செய்துள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. ஆர். விமல குணரட்ணா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 03 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரையான காலப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள கல்லாறுப் பகுதியில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 03 மணியளவில் ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த தருமபுரம் பொலிஸார் சந்தேகத்திற் கிடமான வகையில் பயணித்த 02 டிப்பர் வாகனங்களை தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது, அதில் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்தமை கண்டு பிடிக்கப்பட்டு கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் 02 பேரையும் கைது செய்துள்ளனர்.

இந் நிலையில், நேற்றைய தினம் முற்பகல் 11 மணியளவில் வட்டக்கச்சி மாயனூர் பகுதியில் விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் வெலிகன்னவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப் பிரிவுப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து, வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 லீற்றர் கசிப்பைக் கைப் பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் பெண் ஒருவர் உட்பட 02 பேரை கைது செய்து தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்கள் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.ஆர். விமல குணரட்ணா தெரிவித்துள்ளார்.(ம-15)

# இந்து ஆலயத்துக்கு அருகில்...

தூண்டும் செயற்பாடுகளை நாகவிஹார மத்தியஸ்தானம் முன்னெடுக்காது என நாகவிஹார விமலசிறி தேரர் உறுதியளித்துள்ளார்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி நாகவிஹார விகாராதிபதியின் சடலம் முற்றவெளியில் தகவனம் செய்யப்பட்ட போது, பல விமர்சனங்கள் எழுந்தன. அந்த விமர்சனங்களுக்கு விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று யாழ்.நாகவிஹார விகாராதிபதியின் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போதே விகாராதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

நாகவிஹார விகாராதிபதி யாழில் பல செயற்பாடுகளை முன்னெடுத்தவர். அவரின் இறுதிச் சடங்குகளை நிகழ்த்தும் போது, பல எதிர்ப்புக்கள்எழுந்தன. ஆனால் ஒரு விகாராதிபதியின் இறுதிச் சடங்கு நடத்துவதென்றால் பொது வெளியில் தான் நடத்த வேண்டுமென்பது சம்பிரதாயம். அது தென்னிலங்கையில் நடந்திருந்தால், மிகப்பெரிய ஒரு நிகழ்வாக நடந்திருக்கும்.

இங்கு பௌத்தர்கள் அதிகமான இல்லாத காரணத்தினால், இறுதிச் சடங்கில், இராணுவத்தினரும், பொலிஸாரும் கலந்து கொண்டிருந்தனர்.

நாகவிகாரை விகாராதிபதியின் இறுதிச் சடங்கின் பின்னர் மக்களைக் குழப்பும் வகையில் பல்வேறு இனவாத மற்றும் மதவாதக் கருத்துக்களைதென்னிலங்கை மற்றும் இங்குள்ள அரசியல் வாதிகள் வெளியிடுகின்றார்கள்.

விகாராதிபதியின் இறுதிச் சடங்கு எப்போதும் பொது வெளியில் தான் நடத்துவதென்பது, முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனுக்கு நன்றாகத் தெரியும்.

எழுப்பப்பட்ட எதிர்ப்புக் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர்அருகில்கோவில்கள் இருப்பதனால் தான் இவ்வாறான விமர்சனம் வருகின்றதாக தெரிவித்தார்.

ஆனால்இவ்வாறு ஒரு பிரச்சினை இருப்பதாக முதலில் கூறியிருந்தால், கோவில் குருக்களுடனும் கலந்துரையாடி உரிய செயற்பாடுகளை முன்னெடுத்திருப்போம். ஆனால், அது பற்றி எமக்குத் தெரியாது. ஆனால், விகாராதிபதியின் இறுதிச் சடங்கு இடம்பெற்ற இடத்தில் எப்போதும், விகாரையோ, தூபி கட்டப்போவதில்லை.

அதற்கு நாகவிகாரை மத்தியஸ்தானம் அனுமதிக்காது, நாகவிகாரை மத்தியஸ்தானம் கஷ்டப்படுகிறவர்களுக்கு பல உதவிகளை செய்துள்ளது. பௌத்த மதம் சமயம் அல்ல. தர்ம சிந்தனைக்குரிய ஆகம வழிபாடு. அநுராதபுரம் இருந்த போது, ஒற்றுமையாக இருந்தோம்.

ஆனால், தற்போது, இனவாத மற்றும் மதவாதக் கருத்துக்கள் பரப்பப்படுகின்றன. இங்குள்ள மாணவர்களுக்கு பல பயிற்சிகளையும், உதவித்திட்டங்களையும் வழங்கிய போது, மதமாற்றத்தினைச் செய்வதாக குற்றஞ்சாட்டினார்கள். ஆனால், அவ்வாறான ஒரு செயற்பாட்டினை முன்னெடுக்கவில்லை. முன்னெடுக்கப் போவதும் இல்லை.

கஷ்டப்பட்ட பிள்ளைகளுக்கு உதவி செய்து வருகின்றோம். அதே போல் எதிர்காலத்தில் உதவி செய்வோம். அரசியல் வாதிகள் வதந்திகள் பரப்பிக்கொண்டிருக்கின்றார்கள்.

நாகவிஹாரை தேவையற்ற நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றதாக குற்றஞ்சாட்டுகின்றார்கள். ஆனால், நாகவிஹாரை மத்தியஸ்தானம் இனவாதத்தினையும், மதவாதத்தினையும் பரப்பும் எந்த செயற்பாடுகளையும்முன்னெடுக்கவில்லை.

சாந்தியும், சமாதானத்தினையும், முன்னெடுக்கும் செயற்பாடுகளையே மத்தியஸ்தானம்முன்னெடுத்துவருகின்றது.

எனவே, நாகவிஹாரை விகாராதிபதியின் இறுதிச் சடங்கின் பின்னர், மற்றவர்கள் பொய்களையும் வதந்திகளையும், பொய்ப்பிரசாரங்களையும், நம்ப வேண்டாம்.

தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்பதே, நாகவி ஹாரை மத்தியஸ்தானத்தின் நோக்கம்.

அதை விடுத்து வேறு எந்த இனவாத, மதவாத செயற்பாடுகளையும் முன்னெடுக்கப் போவதில்லை என்பதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்றும் அவர் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-4,9)

# பயங்கரவாத புலனாய்வு...

விதானங்களுக்கு அமைவாக இவ்விருவரும் கைது செய்யப்பட்டு நேற்று கொழும்பு மேலதிக நீதிவான் தனுஜா ஜயதுங்க முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். செவன் தினேஷ்குமார், விஜேகுமார் விதுஷன் ஆகிய இரு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ம)

# யாழில் ஏற்பட்ட...



அதனை வழங்க உணவக உரிமையாளர் மறுத்துள்ளார். இதனால் கோபமடைந்தவர்கள் உணவகத்தை அடித்துச் சேதப்படுத்தினர். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் நேற்று மாலை நடந்துள்ளது.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வரும் நிலையில், சமூக சீர்கேடுகள் தலைவிரித்தாடுவதாக யாழ். மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ம)


## இறைச்சிக்கோழி விற்பனை

புறொய்லர், கல்பேட், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் எம்மிடம் மிகக்குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். புறொய்லர் சுத்தம் செய்யப்பட்டது. (2321)

U.S.A பாம் 1 Kg 450/= மட்டும்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை. T.P 0778689500

## சிறுநீரகம் தேவை

42 வயதுடைய ஆண் ஒருவருக்கு $B^+$ வகையைச் சேர்ந்த சிறுநீரகம் அவசரமாக தேவைப்படுகின்றது.

(35 - 40 வயதுடையவர்களது பொருத்தமானது.) (2279)

சன்மானம் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு :- 0773290597, 0770784320, 0776278428

புதிய பிரிவுகள் ஆரம்பம்
2018 யூலை பரீட்சைக்கான

## aat [Sri Lanka]

[AA1, AA2, AA3]

Qualification:- G.C.E. O/L 6 Passes
Medium - Tamil & English
*Note* :- 2017 ம் ஆண்டு G.C.E O/L பரீட்சை எடுத்த மாணவர்களும் இணைந்து கொள்ளலாம் முற்பதிவுகளை மேற்கொள்ளவும்.

Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0212229149
(C-1101)

## Techno World

(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்.)

## A/L தொழில்நுட்பப் பிரிவு

முதன்முறையாக A/L தொழில்நுட்பப் பிரிவு பெறுபேறுகளில் தேசிய, மாவட்ட நிலையில் 60க்கும் அதிகமான மாணவர்களை தொழில்நுட்ப பீடத்துக்கு உருவாக்கிய ஒரே ஒரு கல்வி நிறுவனம்.
தொழில்நுட்பப் பிரிவு பெறுபேறுகளில் தேசிய மாவட்ட நிலையில் 60க்கும் அதிகமான மாணவர்களை தொழில்நுட்ப பீடத்துக்கு உருவாக்கிய ஒரே ஒரு கல்வி நிறுவனம்.

முதன்மைச் சாதனைகள்
1. மாவட்ட நிலை 1 - கேசனா
2. மாவட்ட நிலை 1 - தமிழின்யன்
3. மாவட்ட நிலை 3 - கோகுலன்

தொழில்நுட்ப பீட அனுமதி
உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்
யாழ்ப்பாணம் - 12 மாணவர்கள்
கிளிநொச்சி - 8 மாணவர்கள்
முல்லைத்தீவு - 12 மாணவர்கள்

பொறியியல் தொழில்நுட்பம்
யாழ்ப்பாணம் - 15 மாணவர்கள்
கிளிநொச்சி - 6 மாணவர்கள்
முல்லைத்தீவு - 4 மாணவர்கள்
(C-1164)

A/L 2020
A/L 2020 Day Class
கிளை: புத்தூர் (புத்தூர் சோமாஸ்கந்தா அருகாமை) 077 017 5346

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
(C-1120)

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## After A/L . . .

Bachelor of Information Technology
BIT
கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டதாரி ஆகுங்கள்
கற்கைநெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 15-01-2018

## இலவச அறிமுக கருத்தரங்கு

கற்கைநெறி தொடர்பான மேலதிக விளக்கங்களுடன் BIT விரிவுரையாளர்களினால் DMI COMPUTER EDUCATION ல் நடைபெறவுள்ளது
திகதி:- 11-01-2018 (வியாழக்கிழமை)
நேரம்:- 11.30 a.m.
பதிவுகளுக்கு உங்கள் பெயரை SMS செய்யுங்கள் 0777240707
DMI COMPUTER EDUCATION

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம்
No.113. கன்னாதிட்டி வீதி,
(சயன்ஸ் ஹோல் அருகாமை)
Tel.: 021-222 4403
(C-1166)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## IT Spot

185, V.M.றோட், பருத்தித்துறை.

ICT
தரம் 10, தரம் 11
A/L 2018, A/L 2019
A/L 2020, A/L Day Class
ஆங்கில, தமிழ் மொழி மூலம்
க.செந்தூரன் (B.Sc (Hons) BIT) 0770871456

## ECONOMICS HALL

நாவலர் றோட் யாழ்ப்பாணம்

A/L Day ஆரம்பம் 10.01.2018
காலை 8.00
பொருளியல் R.தர்ஷன்
- திங்கள்-வெள்ளி 8.00-10.00
- இம்முறை யாழ்.மாவட்டத்தில் முன்னணி பெறுபேற்றுக்கு வழிகாட்டிய ஒரே ஒரு பொருளியல் பேராசான்
- ஆசிரியரின் Day Class வகுப்புக்கள் Economics Hall இல் மட்டுமே நடைபெறும்

(C-1163)

## பணியாளர் தேவை

முன்னணி தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர்கள் வேண்டப்படுகின்றனர்.
(1) சிற்றூழியர் (ஆண்)
(2) வகுப்பு மேற்பார்வையாளர் (ஆண்)
(3) கணினி பதிவாளர் (ஆண்/பெண்) (MS OFFICE)
*12.01.2018 (வெள்ளிக்கிழமை) மாலை 3.00 மணிக்கு நேர்முகத்தேர்விற்கு நேரில் சமுகமளிக்கவும்*
(C-1160)

NEW SCIENCE WORLD
Brown Road, Navalar Road Junction, Jaffna.
077 336 4055 / 021 222 6690

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

(C-2271)
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

## பொருளியல் A/L DAY

DMI 8.00 - 10.00 மணி வரை
திங்கள் முதல் வெள்ளி வரை
(C-1152)
2020 A/L சனி, ஞாயிறு 9.00-10.00 மணி S.S.சிறி


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.